Registered as a News Paper



# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி 28 | 13-09-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 207


எண்பதுகளின் பின்னர்மீண்டும் சுன்னாகத்தில்
போட்டோ சனிகோ
கலர் லாப்
30 நிமிடத்தில் படம்
எமது கலையகத்தில் கறுப்பு வெள்ளை, கலர்ப் படங்கள் உடனுக்குடனும் அனைத்து வைபவங்களுக்குமான படங்கள் விழா மண்டபத்திலும் வழங்கப்படும்.
84, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (சி-7348) 204, கண்டி வீதி, வவுனியா.



பிறமுக அறிமுகம் பக்கம் 03



கிளர்ந்தெழும் மாணவர் .. பக்கம் 04



மிக வாய்ப்பாக .. பக்கம் 05

# இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர இலகுவாக

# பருத்தித்துறை – நாகர்கோவில் வீதியைத் திறக்கவும்;

## நேற்றைய சந்திப்பில் புலிகளின் தளபதிகள் வேண்டுகை

(நமது நிருபர்)

மீளக்குடியமரும் மக்கள் போக்குவரத்திற்கு இலகுவாக பருத்தித்துறை - நாகர்கோவில் வீதி திறக்கப்பட வேண்டும் என யாழ். குடா உயர் இராணுவ அதிகாரிகளுடனான நேற்றைய சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகை விடுத்துள்ளனர்.



முகமாலைப்பகுதியில் நேற்று வடபோர்முனைத்தளபதி கேணல் தீபன், யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் சந்தித்துக் கொண்டதை படத்தில் காணலாம்.

முகமாலையில் விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கும் சிறிலங்கா இராணுவ முன்னரங்கிற் கும் இடையில் கண்டி வீதியின் மையப் பகுதியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்றொன் புரூவ் ஹோவ்டேயின் நடு நிலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வடபோர் முனைத் தளபதிகளும் யாழ்.குடா சிறிலங்கா படைதளபதிகளும் நேற்று சந்தித்து பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடத்தி யுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வடபோர்முனைத் கட்டளைத் தளபதி கேணல் தீபன், முன்னரங்க தளபதி லெப்டினன்ட் கேணல் அறிவு, கேணல் தீபனின் தனிப்பட்ட உதவியாளர் லெப்டினன்ட் கேணல் லோரன்ஸ், அரசியல் துறையைச் சேர்ந்த புலித்தேவன் மற்றும் ஈழமாறன் ஆகியோரும், சிறிலங்கா இராணுவத் தரப்பில் கட்டளை இணைப் பதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகா, சிவில் இணைப்பதிகாரி பிரிகேடியர் உபாலி எதிர் சிங்கா, லெப்டினன்ட் கேணல் சில்வா, போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்புரூவ் ஹோவ்டே மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் ஆறு முக்கிய அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது இப்பகுதியில் இடம்பெற்ற முன்னைய சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்த கலந்துரையாடல்களையும் அவர்கள் நடாத்தி யுள்ளனர். பாதை திறப்பு தொடர்பான விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு தாங்கள் பரிசீலித்து பதில் தருவதாக இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் நாகர்கோவில் பகுதியில் அத்துமீறி அமைக்கப்பட்ட காவலரண்கள் குறித்தும் புலிகள் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

## தமிழ்ச்செல்வன் - ஹோவ்டே இன்று சந்தித்துப்பேசுவர்

(கிளிநொச்சி)

போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன் புரூவ் ஹோவ்டே அவர்களும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள இச் சந்திப்பின் போது அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கண்காணிப்புக் குழுத்தலைவர் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளனர்.


நேற்று முகமாலைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தளபதிகளுக்கும் இராணுவத் தளபதிகளுக்குமிடையிலான சந்திப்பை முடித்துக்கொண்டு வன்னிக்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் வருகை தந்துள்ளார்.

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாளை வவுனியா விஜயம்

வவுனியா மாவட்டத்தில் மேற் கொள்ளப்படவுள்ள மீள் குடியேற்ற விடயம் தொடர்பாக ஆராய பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ நாளை வவுனியா செல்லவுள்ளார்.

வவுனியா மாவட்ட செயலத்தில் நாளை காலை நடைபெறும் உயர்மட்ட மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

இவர் ஓமந்தை பகுதிக்கும் விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.



## தலைவரின் சிந்தனையில் ...

தமது சொந்த நிலத்தில்,
தம்மைத்தாமே ஆளும்
ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும்
ஓர் அரசியல் தீர்வையே
தமிழ்மக்கள் விரும்புகிறார்கள்.
சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்
அரசியல் தீர்வு அமைய வேண்டுமென
அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-09-2002

## ரணில் அவதானமாக இயங்க வேண்டிய காலம்

கடந்த திங்களன்று கொழும்பில் சமாதானத்தை வலியுறுத்தி பலலட்சம் மக்கள் அணிதிரண்டு நடாத்திய மக்கள் சக்திப் பேரணி பல பரிமாணங்களில் முக்கியத்துவம் மிக்க ஒன்றாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் தோழமைக் கட்சிகளும் ஏனைய பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளும் ஒன்றிணைந்து சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு விரோதமாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் அணிதிரளுமாறு கடந்த சில மாதங்களாகவே போட்டுவந்த காட்டுக்கூச்சலுக்கு மக்கள் எவ்வகையிலும் செவிசாய்க்க வில்லை என்ற உண்மை இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கூடாது எனவும் தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகளை நடத்த அந்த அரசு அனுமதிக் கக்கூடாது எனவும் பௌதமதபீடங்கள் விடுத்த வேண்டுகோளை சிறிலங்காவின் அரசும் தாய்லாந்து அரசும் நிராகரித்து அரசியல் ரீதியில் தேசிய மற்றும் சர்வதேச நிலைப்பாடுகளின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியதற்கும், தாய்லாந்தில் பேச்சு வார்த்தைகளுக்கான நாட் குறித்தற்கும் மக்கள் அளித்துள்ள பெருமாதரவு இந்தப் பேரணி மூலம் தெட்டத் தெளிவாகி யுள்ளது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப்பாதை மிகக் கடினமானதென்றும், எனினும் அதனை அடைவது என்ற இலக்கில் இருந்து அரசு ஒருபோதும் விலகப்போவதில்லை என்றும் அந்த லட்சக்கணக்கான மக்கள் முன்னிலை யில் சூளுரை செய்தமையானது எந்தவகையான அச்சுறுத்தலுக்கும் தான் அடிபணிந்து சமாதான முயற்சிகளில் பின்வாங்கப்போவது கிடையாது என்ற வாக்குறுதியை தென்பகுதியின் சமாதான விரும்பிக ளான லட்சக் கணக்கிலான மக்களுக்கு இந்த பேரணியின் முடிவில் கூறவைத்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக அரசு தாய்லாந்தில் நடக்கவுள்ள பேச்சு வார்த்தையை ஒரு உன்னதமான நிகழ்வு என ரணிலை வர்ணிக்க வைத்துள்ளதன் மூலம் இந்தப் பேச்சுவார்த்தைகள் சிறிலங்காவின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் சக்திவாய்ந்த ஒன்று என்பதை சர்வதேச சமூகத்திற்கு ஓங்கி உரைக்கவும் வைத்துள்ளது.

இந்தநிலையில் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளின் எதிர்கால நிலைப்பாடு என்னவாக இருக்கப் போகின்றது என்பதும் இங்கு முக்கியமான கேள்வியாகும்.

தொடர்ந்தும் அவர்கள் விடுதலைப்புலி எதிர்ப்பு, சமாதான நிராகரிப்பு அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பதானது அவர்களை மேலும் மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்தவே வழி வகுக்கும் என்பதை கடந்த தேர்தலுக்குப் பின்னான நிலைமைகள் துல்லியமாக நிரூபித்து வந்துள்ளன. எனவே அவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை நிச்சயமாக வெறும் மௌனமான ஒன்றாக இருக்கப்போவதுமில்லை. மௌனம் காத்தால் தமது தோல்வியை ஏற்றுக் கொள்வதாகிவிடும்.

பொ.ஐ.முன்னணியின் தலைவியான சந்திரிகா தனது அதிகார வலுவை நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய வியூகங்களை அமைத்து அரசுக்கு ராஜரீகரீதியில் நெருக்கடிகளைக் கொடுத்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஒரு தீர்வு நிலையை எட்டாத வகையில் இழுபறிப்பட வைக்க வேண்டும் என்பதே அதன் தோழமைக் கட்சியான ஜே.வி.பி போன்றவற்றின் விருப்பார்வமாக உள்ளது.

இத்தகைய இழுபறிநிலை அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை வெகுவாகக் குறைக்க வழிவகுக்கும் என்றே அவர்கள் நம்புகின்றனர்.

ஆனால் சந்திரிகா தனது தோழமைக் கட்சிகளின் அபிலாசைகளைத் தீர்க்க எடுக்கும் எந்த முயற்சியும் சர்வதேச சமூகத்தில் அவர் பற்றிய கணிப்பீட்டை மேலும் மோசமாக்கவே வழிவகுக்கும். சிலவேளை சர்வதேச சமூகம் நேரடியாகவே அவர் மீது சில அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியும் ஏற்படலாம்.

சமாதானப்பேச்சுவார்த்தை நகர்வுகள் சுமுகமாகவும் நம்பிக்கை தருவனவாகவும் அமைந்தால் பொ.ஐ.முன்னணியின் சவப்பெட்டிக்கான இறுதிஆணிகள் அடிக்கப்பட்டதாகி விடும். இதனை ரணில் நன்கு உணர்ந்தவராகவே தனது காய்களை நம்பிக்கையோடு நகர்த்தி வருகின் றார்.

இந்த நிலையில் பேரினவாத சக்திகளின் முழுக்கோபமும் ரணிலை நோக்கியதாகவே அமையும் என்பதில் சந்தேகமே கிடையாது.

தனியான சிங்களவரின் அரசை அமைக்க அனைத்து பௌத்த சிங்களவரும் அணிதிரள வேண்டும் என்ற அஸ்கிரிய பீடாதிபதியின் அறைகூவலில் பொதிந்துள்ள படுகேவலமான இனவாத விஷம் ரணிலை எந்தவகையில் பாதிக்கப்போகிறது என்பதுதான் இன்றுள்ள மிகப் பெரிய சந்தேகத்திற்குரிய வினாவாகும்.

ரணில் மிகுந்த அவதானத்துடன் எச்சரிரிக்கையுடன் பேரினவாத சக்திகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டிய காலம் இதுவாகும்.....

# பத்தொன்பதாவது திருத்தச்சட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது

19ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலில் நாடாளு மன்றத்தைக் கலைத்தல் மற்றும் பிரதமர் ஒருவரை நியமித்தல் போன்றவற்றில் சனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்துவ தற்கான திருத்தங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

இதன்படி நாடாளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பங்கினர் சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தாலேயே நாடாளுமன்றத் தைக் கலைக்க முடியும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நாடாளுமன்றத்தை ஒரு வருடத்திற்கு முன்னர் கலைக்க வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான பிரேரணை நிறை வேற்றப்பட்டு அதன் பின்னர் சபா நாயகர் இதனை சனாதிபதிக்கு அறி விக்க வேண்டும் எனவும் குறிப்பி டப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் நியமனம் தொடர்பான விடயத்தில் இரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பிரதமர் நியமனம் தொடர்பான பிரேர ணையை நிறைவேற்றி அதனை சபாநாயகர் மூலம் சனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும் எனவும் சனா திபதி வேறு கட்சியில் இருந்தாலும் இக்கருத்து செல்லுபடியாகு மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### -அடுத்த ஆண்டிற்கான-

# வரவு செலவுத்திட்டம் நவ.06 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை நவம்பர் மாதம் 06ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்ச ரவை கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

வரவு செலவு திட்டத்திற்கு முன்னர் 19வது அரசியல் அமை ப்பு திருத்தச் சட்டத்தினை நாடா ளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறை வேற்றுவது என்றும் அமைச் சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை பத்தொன்பதாவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத் தினை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப் பித்ததும் சட்ட மூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத் தினை அடுத்த மாதம் முற்பகுதி யில் நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

### -படையினரை வெளியேறக்கோரி-

# தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தினங்களில் வடபகுதியில் போராட்டங்கள் நடத்த முடிவு

தாய்லாந்தில் விடுதலைப்புலிக ளுக்கும் அரசாங்கத்திற்கும் இடை யில் பேச்சுவார்த்தைகள் நடை பெறும் தினங்களில் வடபகுதியில் வெகுசனப் போராட்டங்கள் நடாத் தப்படவுள்ளன.

மக்கள் குடியிருப்புப் பகுதிக ளிலிருந்து படையினரை வெளி யேற்றக்கோரியும் பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்ட வீதிகளை திறந்துவிடக் கோரியுமே இவ் வமைப்புக்கள் இந்தப் போராட்டத் தில் ஈடுபடவுள்ளது.

தென்மராட்சி கச்சாய் வீதியைத் திறந்துவிடக் கோரியும் குருநகர் கடற்கரையை வீதியில் மீளக் குடியமரக்கோரியும் வெகுசன அமைப்புக்கள் போராட்டம் நடத்த வுள்ளன.

இதேவேளை வலிகாமம் வடக்கு பகுதிகளில் மீளக்குடி யமரக்கோரி வலி வடக்கு புனர மைப்புக்கழகம் மறியல் போராட் டங்களை நடத்தவுள்ளன.

# யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான முன்னாசிரியர் பயிற்சி நெறி

யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவாகி புதிதாக பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று வன்னி வலயங்களின் பாடசாலைகளில் கடமையாற்றும் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான முன் ஆசிரியர் பயிற்சி நெறியானது யாழ் மாவட் டத்திலுள்ள வலிகாமம் வலயத் தில் 14.09.2002 (சனி) முதல் 22.09.2002 வரை 09 நாட்கள் நடை பெறும்.

வன்னி வலயங்களின் பாட சாலைகளில் கடமையாற்றும் வன் னிப் பிரதேசத்தைச் சேர்ந்த பட்ட தாரி ஆசிரியர்களுக்கான மேற்படி நெறி, சம காலத்தில் வவுனியா தெற்கு வலயத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றிய சான்றிதழ்கள் இன்றி நிரந்தர நியமனம் வழங்கப்பட மாட்டாது என்பதால், அனைவ ரையும் தவறாது இப் பயிற்சி நெறியில் பங்குபற்றுமாறு மாகா ணக் கல்விப்பணிப்பாளர் ஜனாப். ஐ.எம்.இஸ்ஸடீன் அறிவித்துள் ளார்.(சோ)

## பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழகங்களுக்கான புகுமுக மாண வர் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் வரும் 15ஆம் திகதி காலை 10.00மணிக்கு கிளி.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றையதினம் சில முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட வுள்ளதால் அனைத்து பல்கலைக் கழக புகுமுக மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட் டுக்கொள்கின்றோம். (யோ)

## நூல்வெளியீடு

(அலுவலக நிருபர்)

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களின் கவிதைகள் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் முற்பகல் 9.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற ஏற்பா டாகி உள்ளது.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க. குகராசா (செங்கை ஆழியன் தலைமையில் நடைபெறவுள்ள கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் கலை இலக்கிய ஆர்வலர்கள் தமிழ் நெஞ்சங்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (சோ)



# பிறமுக அறிமுகம்

## பதில் பொலிஸ்மா அதிபர்- சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் T.E ஆனந்தராஜா



சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் (IGP) லக்கி கொடித்துவக்கு அண்மையில் காலமானதைத் தொடர்ந்து அவரது பதவி வெற்றிடமானது சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (DIG) T.E. ஆனந்தராஜாவை பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப் படுவதன் மூலம் தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளது.

இவரது இந்தப் பதவியானது தற்காலிக பதில் பதவி என்ற தரத்திலிருந்து நிரந்தப் பதவியாக மாற்றம் செய்யப்படலாம் என்ற கருத்து கேள்விக் குறியுடன் கூடிய செய்தியாக பரவலாக அடிபட்டாலும் அதனை இன்னமும் உறுதி செய்ய முடியாத நிலையே உள்ளது.

சிறிலங்காவின் பாதுகாப்பு துறையின் அதியுயர்பதவிகள், உயர்பதவிகளில் தமிழர்களை நியமனம் செய்வதென்பது- அவர்களுக்கு தகுதியும் திறமையும் சிரேஷட பணிநிலை தகைமையும் இருந்தாலும் கூட- கடந்த சில தசாப்தங்களாக சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

இது சிறிலங்காவின் அரசுகள் கடைப்பிடித்து வந்துள்ள தீவிரபேரினவாதக் கொள்கையின் எதிரொலி என்றே கூறமுடியும்.

எனினும் தற்போது T.E ஆனந்தராஜா பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்டிருப்பதற்கு பல கிளைக் காரணங்களும் உண்டு.

பொலிஸ்துறையில் இரண்டாவது நிலையில் வைத்து எண்ணக்கூடியவர்கள் என்று கருதப்படக் கூடியவர்கள் சிலருக்கு பல்வேறு சிக்கல்கள் இருப்பதும் அவர்கள் மீது சில குற்றச்சாட்டுகள் விசாரணை செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதும் அவர்கள் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்படுவதற்கு தடையாக இருக்கிறது எனலாம்.

இதேவேளை கடந்த சில மாதங்களாகவே காலஞ்சென்ற பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு விடுப்பில் இருந்த வேளைகளிலும் வெளிநாடுகளுக்கு போயிருந்த சமயங்களிலும் அவர் ஆனந்தராஜாவிடமே தனது கடமைப்பொறுப்புக்களை ஒப்படைத்துச் சென்று வந்துள்ளமையானது ஆனந்தராஜா மீதான நம்பிக்கையையும் அவரின் கடமை விசுவாசத்தையும் கொடித்துவக்கு மதித்தமைக்கு சான்றெனக் கூற முடியும். அத்துடன் ஏனைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் கொடித்துவக்குக்குமான சில தொழில் போட்டியும், முரண்பாடுகளும், ஆனந்தராஜாவுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் கருதப்படுகிறது.

எப்படியோ, ஆனந்தராஜா கடமையுணர்வும், அரசவிசுவாசமும் கொண்ட தமிழர், சிங்கள சிறிலங்கா அரசின் பாதுகாப்புத் துறையின் முக்கிய பிரிவுகளில் ஒன்றான பொலிஸ் திணைக்களத்தில் அதி உச்சப்பதவியான பொலிஸ்மா அதிபரின் இருக்கையில் அமரும் வாய்ப்பினை சில தசாப்தங்களின் பின்னர் தற்காலிகமாகவேனும் பெற்றுள்ளார் என்பதை குறிப்பிடுதல் அவசியம்.

ஆரம்பக் கல்வியை கல்முனை வெஸ்லி உயர் பாடசாலையிலும் மட்டக்களப்பு மெதடிஸ்ற் கல்லூரியிலும் பின்னர் இடைநிலை முதல் மேல்நிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்ற ஆனந்தராஜா ஹாட்லிக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவனாகவும் இருந்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் ஈடுபாடுகொண்ட இவர் தடகள போட்டிகளிலும் சிறப்பாக உதைபந்தாட்டத்திலும் டென்னிஸ்ஸிலும் பாடசாலையின் பெருமைக்குரிய ஒருவராக இருந்துள்ளார்.

1963இல் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தேர்வான இவர் 1966ல் பட்டதாரி ஆனார். பல்கலைக்கழகத்திலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார்.

1987-1990 காலப்பகுதியில் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் M.A பட்டத்தினை பெற்றார்- இவர் பட்டம் பெற்றது பொது நிர்வாகத் துறையில் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1974-1975 காலப்பகுதியில் சிறிலங்காவின் பௌத்த உயர்நிலைக் கல்லூரியில் (Buddhist Academy) குற்றவியலில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றதுடன் 1995-1999 காலப்பகுதியில் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையின் LLB பட்டத்தையும் வென்றார்.

1967இல் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக பொலிஸ்துறையில் நுழைந்த இவர் 1971 உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ASP) ஆனார்.

யாழ்ப்பாணம் உட்பட, சிறிலங்காவின் பல்வேறு தென்பகுதிகளின் ASP யாகக் கடமையாற்றிய ஆனந்தராஜா, பொலிஸ் தலைமையகத்திலும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி இயக்குநராகவும் (Director Research and Development) பணியாற்றியும் உள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராகவும், வடபிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் 1989-1995 காலப்பகுதியில் இவர் இருந்துள்ளார் என்பது முக்கியமானதொன்றாகும்.

இது நெருக்கடி உச்சத்தில் இருந்த காலப்பகுதி ஆகும்.

தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் DIG ஆகவும் பணியாற்றிய இவர் 1995-1998 காலப்பகுதியில் SLPR இன் DIG ஆகவும் இருந்துள்ளார்.

கொழும்பு பிராந்தியம் II இன் DIGயாக 1998- முதல் 2000 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய இவர் அதுமுதல் இன்று வரை நிர்வாகத்திற்கு பொறுப்பான DIG யாகவும் இருந்து வருகிறார்.

''மாகாணசபை முறையும் சட்டம் ஒழுங்குப் பரவலாக்கலும்'' என்ற ஆங்கில நூலை மாகாணசபை சட்டவிதிகளையும், 13ஆவது திருத்தச்சட்ட மூலத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளதுடன் ''பொலிஸ்'' என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

இதுவரையில் மூன்று தடவை கொடித்துவக்குக்குப் பதிலாக பதில் பொலிஸ்மா அதிபராக இயங்கிய அனுபவம் இவருக்கு உண்டு.

இந்த அனுபவமும், அரச விசுவாசமும், அறிவும் மட்டும் இவரின் பதில் ''பதவியை'' நிரந்தரமாக்க உதவுமா?

பேரினவாத சிறிலங்கா அரசின் சனாதிபதி தான் அதனை உறுதி செய்ய வேண்டும்.

❖

# பேச்சுவார்த்தைகள் முதலாவது தத்து

இன்னும் மூன்று தினங்களில் தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

ஈழப்போரின் யதார்த்தத்தைப் பொறுத்தவரை பேச்சுக்கள் என்று



தற்காலிகமாக நீக்கியிருப்பது என்பதும் சமாதானத் துக்கான மனோ நிலையை மேலும் ஒருபடி உயர்த்தும் ஒரு செய்கைதான்..

யதார்த்தத்தில் புலிகளின் அமைப்பைப் புலிகளிடம் தரத்தயார் என்று கூறப்படுகிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இன்னும் மூன்றாண்டுகளில் வந்துவிடும். அதன் போது சமாதானத்தின் பேராலேயே ரணில் ஜனாதிபதியாகிவிடலாம் என்றும் அதன்பின் அவர் தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன் படுத்தி ஒரு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும் என்றும் நம்ப இடமுண்டு.

இடைக்கால நிர்வாக



வரும்போதுதான் பிரச்சினை களின் கூர்தெரியவருகிறது. இடைவெளிகள் துலங்கத் தொடங்குகின்றன.

யதார்த்தத்தில் பேச்சு வார்த்தைகள் எனப்படுபவை சமாதானத்தைப் பொறுத்தவரை சோதனைகளே அல்லது தத்துக்களே. இதன்படி இன்னும் மூன்று தினங்களில் முதலாவது சோதனை அல்லது தத்து வருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத் துக்கு வந்துபோன அமெரிக்கப் பிரதி அமைச்சர் ஆர்மிரேஜ் "சமாதானத் துக்கான பேச்சுவார்த்தைகள் கடினமான வைகளாயிருக்கும் நிச்சயம் பின்னடைவுகள் உண்டாகும்." என்று எச்சரித்திருந்தார்.

இந்திய உயர் குழாத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் "இந்து" பத்திரிகையின் ஆசிரியர் ராம் அண்மையில் லண்டனில் அமிர்தலிங்கம் நினைவுச் சொற்பொழி வாற்றிய போது "அனைத்துத் தரப்பின ராலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்க ஒரு பொதுவான நிலைப் பாடு எதுவும் இதுவரை அடை யாளம் காணப்படவில்லை" என்று கூறுயிருக்கிறார்.

உண்மைதான். சமாதானத் தின் வரையறைகள் எப்பொழு தும் போலவே இப்பொழுதும் குரூரமானவைகளாய்த்தான் காணப்படுகின்றன.

புத்திக்கெட்டியவரை இறுதித் தீர்வைக் குறித்துச் சாதகமாகச் சிந்திப்பது மிகவும் கடினமான தாகவே இருக்கிறது இப்பொழு தும்.

ஆனால் இம்முறை முன்னெப் பொழுதையும் விட சமாதானத் துக்கான 'மூட்' அதிகம் கனிந்திருக்கிறது என்பது இங்கு மிகவும் ஆறுதலான ஒரு விசயம்.

நாங்கள் அதிலிருந்து தொடங்கி எல்லாவற்றையும் அணுகுவதே நல்லது என்று தோன்றுகிறது

ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை இருக்கிறது பொசிற்றிவ் திங்கிங் positive thinking என்று. அதன் அர்த்தம் நல்லதையே சிந்திப்பது என்று. வரும் அதாவது எல்லாவற்றிலும் சிந்திப்பது நல்லதையே.

யுத்தத்தில் எதிரியைக் குறித்து பொசிற்றிவ் ஆகச் சிந்திக்க இடமில்லை. ஏனெனில் யுத்தம் எதிரியை இல்லாதொழிக்க முயல்கிறது.

ஆனால் சமாதானம் எதிரியை அங்கீகரிக்கிறது. மதிக்கிறது எனவே இங்கே எதிரியைக் குறித்து பொசிற்றிவ் ஆகவும் சிந்திக்க வேண்டியிருக்கும்.

இதன் அர்த்தம் எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது மிகையாக மதிப்பிடு வதோ அல்ல.சமாதானத்தின் சமபங்காளி என்ற வகையில் எதிரியை மதிப்பது அவ்வளவு தான்..

இத்தகைய ஒரு நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது கடந்தவாரம் அரசாங்கம் புலிகளின் மீதான தடையைத் மீதான தடையானது புலிகளின் வளர்ச்சியை எந்த விதத்திலும் தடுத்துநிறுத்தும் சக்தியற்ற தாகவே காணப்பட்டது.

வெளிநாடுகளில் புலிகளைத் தடைசெய்யக் கோரியபோது இங்கே புலிகளைத் தடைசெய்ய வேண்டிய ஒரு அவசியம் இருந்தது என்பதைத் தவிர புலிகளின் மீதான தடை நடைமுறையில் சக்தியற்றதே.

குறிப்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் புலிகள் மீதானதடை நடைமுறையில் சட்டவலு அற்றதாகிவிட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கை யின் பிரகாரம் புலிகள் தடை நீக்கப்பட முன்பே அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளில் தமது அரசியல் வேலைகளைத் தொடங்கி விட்டதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் தடைசெய்யப்பட்ட காலமும் நோக்கமும்தான் இங்கே எமக்கு முக்கியம். 1998இல் ஐம்பதாவது சுதந்திர தினத்தை தலதாமாளிகையில் கொண்டாடத் தீர்மானித்ததனால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து தடைவந்தது.

அந்தத் தாக்குதலால் வெகுண்டெழுந்த சிங்கள பௌத்ததீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தும் ஒரு குறியீட்டு நடவடிக்கையாகவே அது

**-நிலாந்தன்-**

செய்யப்பட்டது இப்பொழுது தடைநீக்கமும் அப்படியொரு குறியீட்டு வகையிலானதே. அதாவது தனது சமாதான முயற்சிகளின்போது சிங்களத் தீவிரவாதிகளின் கூச்சலை அரசாங்கம் பொருட்படுத்தப் போவதில்லை என்ற செய்தி இதிலிருக்கிறது.

தவிர சமாதானத்தில் தனது சமபங்காளிகளான புலிகளை அரசாங்கம் சட்டப்படி அங்கீகரிப் பதையும் இது குறிக்கும்.

எனவே சமாதானத்தைக் குறித்து அரசாங்கத்தின் விசுவாசத்தையும் அணுகுமுறை களையும் கோடிகாட்டும் ஒரு குறியீட்டு நடவடிக்கையே இது.

இதன்படி கூறினால் வரும் முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அதிகம் சுமூகமானவை களாகவே இருக்கமுடியும்.

பிறகும் கூட இடைக்கால நிர்வாக சபை பற்றிய உரையாட லும் அதிகம் சுமூகமாய் அமையும் வாய்ப்புக்களே பிரகாசமாகத் தெரிகின்றன.

கொழும்பிலிருந்து கசியும் தகவலின்படி அரசாங்கம் மூன்று வருடங்களுக்குக் குறையாத ஒரு காலத்துக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபைக்காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தீர்வு காண ஒரு மனோ நிலையை உருவாக்கிவிடலாம் என்று ரணில் நம்புவதாகத் தெரிகிறது. எனவே தீர்வைப் பற்றிய உரையாடல்மேலும்சில காலங் களுக்கு ஒத்திவைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கலாம்

சர்ச்சைக்குரிய எரிபற்று நிலையில் உள்ள விவகாரங் களை அவற்றைப் பற்றி உரையாடத் தேவையான ஒரு சாதகமான சூழல் உருவாகும் வரை ஒத்தி வைப்பது என்பது சமாதானத்தை விஞ்ஞான பூர்வமாக அணுகும் எல்லாச் சமாதான முயற்சிகளின் போது பயன்படுத்தப்படும் ஒரு பிரதான உத்தியாகும்.


இதன்படி பேச்சுவார்த்தை களின் முதற்கட்ட இறுதி இலக்காக உத்தேச இடைக் கால நிர்வாக சபை அமையும் வாய்ப்புக்களே பிரகாசமாகத் தெரிகின்றன.

மேலும் உத்தேச இடைக்கால நிர்வாக சபைக்குரிய நிதி உதவிகளைச் செய்ய சமாதான முயற்சிகளில் ஆர்வமாயுள்ள சில மேற்கத்தேய நாடுகள் முன்வரலாம் என்றும் எதிர்பார்க் கப்படுகின்றது. ஏற்கனவே சமாதான கால புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளு க்கு தன்னிடம் போதியளவு நிதி இல்லையென்று அரசாங்கம் கூறியிருக்கும் ஒரு பின்னணி யில் இடைக்கால நிர்வாக சபைக்குரிய நிதி உதவிகளை மேற்படி நாடுகள் செய்ய முன்வரலாம்என்றும் ஒரு தகவல் கொழும்பில் உள்ள தூதரக வட்டாரங்களிலிருந்து கிடைக் கின்றது.

அத்தோடு உதவி வழங்கும் நாடுகள் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே உதவிகள் வழங்கப்படும் என்று கூறியிருப்பதனாலும் சமாதானத்தின் முதற்கட்ட வெற்றிகளை காட்சி மயப்படுத்த வேண்டிய நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார்.

எனவே எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்க்கும் போது இன்னும் மூன்று தினங்களில் நடக்கவுள்ள உரையாடல்கள் இப்போது நிலவும் சுமூகநிலை யைத் தொடர்ந்து பேண முயல்வதற்கான வாய்ப்புக்களே அதிகம் தெரிகின்றன. அநேகமாக அது ஒரு தத்தாக அல்லது சோதனையாக இருக்காது என்று நம்பலாம்.

♦



# கிளர்ந்தெழும் மாணவர் முன் தகர்ந்துவிழும் படையரண்கள்

**-சிறி. இந்திரகுமார்-**

பருத்தித்துறையில் மக்கள் வெகுஜனப் போராட்ட எழுச்சியின் முன் சிங்களப் படைத்துறை ஒருமுறை தோற்றுப் போயுள்ளது.

மக்களின் இயல்பு நிலைக்கு இடையூறாக இருக்கின்ற படையினரின் எத்தகைய நடவடிக்கைகளும் பொதுமக்களின் அமைதியை சீர்குலைப்பதாக இருக்கும் என்பதோடு அவர்களை போராடத்தூண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் வடமராட்சி மாணவர் ஒன்றியமும் வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து பருத்தித்துறை நகரின் மையத்தில் பஸ் நிலையத்திலிருந்து கடற்கரையை ஒட்டி சுப்பர் மடம்வரை பருத்தித்துறை-காங்கேசன்துறைவரை வீதியை திறப்பதற்காக இவ்வெகுஜனப் போராட்டம் நடந்துள்ளது.

1995ம் ஆண்டு படையினரால் பருத்தித்துறை கைப்பற்றப்பட்டதிலிருந்து பொது மக்களின்பாவனைக்கு இப்பாதை தடுக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு இப்பகுதியை அண்டியே யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான பாடசாலைகளான ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பன உள்ளன.

இத்தகைய முக்கியத்துவம்மிக்க ஒரு பகுதியின் சூழலில் படையினர் தமது முகாமை அமைத்து வைத்திருப்பதோடு வீதியையும் தடுப்பது பொதுமக்கள் மத்தியில் விசனத்தையே ஏற்படுத்தியுள்ளது. புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் பாடசாலைகள், கோவில்கள், பொது இடங்கள் என்பவற்றிலிருந்து படையினர் வெளியேற்றப் பட்டதாகத் தெரிவித்த போதும் படையினர் அவற்றிலிருந்து வெளியேறி மிக அருகில் தமது படைத்தளங்களை அமைத்துள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரியின் சூழலில்படையினர் நிலைகொண்டிருப்பதும் வீதியைத் தடுத்துவைப்பதும் பொதுவாகவே பொதுமக்களிற்கு அச்சுறுத்தலையும் மாணவர்மத்தியில் ஒரு பதட்டநிலையையும் தோற்றுவிக்கும்.

கடந்த காலங்களில் சிறிலங்கா அரசால் அவர்கள் துன்புறுத்தப்பட்டும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி படுகொலை செய்து புதைத்தமையும் யாழ்குடாநாட்டிலேயே நடந்துள்ளது.

இத்தகைய நிலையில் பாடசாலையின் மைதானத்தில் இராணுவக் காவலரணையும் சுற்றாடலில் படைமுகாமையும் வைத்துக்கொண்டு மாணவர்களால் கல்விகற்க முடியாது.

பொதுமக்களின் இயல்பு நிலையையே பாதிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள படையினரின் முகாம்களையும் தடுத்து வைத்துள்ள வீதிகளையும்விட்டு படையினர் நீங்குவதன் மூலம் மாத்திரமே மக்களின் இத்தகைய போராட்டங்களைத் தணிக்க முடியும்.

மாறாகப்படையினர் துப்பாக்கி முனையில் வெகுஜனப் போராட்டங்களை அடக்க நினைப்பது மேலும் மேலும் பொதுமக்களின் மத்தியில் போராட்டங்களைத் தூண்டவே செய்யும். ஆனால் சிறிலங்காப்படைத்தரப்பு சிறிலங்கா அரச தரப்பு இதனைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன ஹாட்லிக் கல்லூரியை சூழவுள்ள பாதைகள் 524வது படைப்பிரிவின் பாதுகாப்பு கருதி திறந்துவிடமாட்டாது எனத்தெரிவித்துள்ளார்.

அத்தோடு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இந்நிலைமை தொடர்பாக ஆராய்வதெற்கென யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டு அங்கு கருத்து தெரிவித்த போது ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பவற்றின் சூழலில் மாணவர், பெற்றோர் ஆகியோரைத் தவிர ஏனையவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

மூடப்பட்ட பாதைகள் திறக்கப்பட மாட்டாது என ஒரு கடுமை தொனித்த பாங்கில் தெரிவித்துள்ளார். இது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அசமந்தப் போக்கையே காட்டுகின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போதும் முடிவடையும் போதும் போர்நிறுத்த கண்காணிப்பு குழு பிரதிநிதி ஒருவர் அங்கு பிரசன்னமாய் இருப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் பாதுகாப்புக்கு வேண்டுமாயின் கண்காணிப்பு குழுவினர் உத்தரவாதங்களை வழங்கலாம். கல்விகற்கும் மனநிலை என்ற உளவியல் ரீதியான பிரச்சினைக்கும் இவர்களால் தீர்வு காண முடியுமா?

இதனையே கண்காணிப்புக்குழு பிரதிநிதி ஒருவரும் இத்தகைய ஒரு சூழ்நிலையில் மாணவர்கள் நிச்சயமாக கல்வி கற்க முடியாது என தெரிவித்துள்ளார். மாணவர்கள் கல்வி கற்பதற்கும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பு அவசியம் என்ற நிலையிலேயே யாழ் குடாநாட்டு இயல்புநிலை திரும்பியுள்ளது.

மக்களின் வாழ்விடங்களையும் பொதுஇடங்களையும் அதியுட்சப்பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளோடு அரசு சீண்டுகின்றது.

பருத்தித்துறையின் வீதி திறப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும்,பொதுமக்களும் தமது பொறுமையை இழந்த நிலையிலேயே வீதித்தடைகளை உடைத்தெறிந்ததோடு மாத்திரமன்றி இராணுவ காவலரண்களையும் கொழுத்தி எரித்துள்ளனர்.

> ***
>
> பொதுமக்களின் இயல்பு நிலையையே பாதிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள படையினரின் முகாம்களையும் தடுத்து வைத்துள்ள வீதிகளையும்விட்டு படையினர் நீங்குவதன் மூலம் மாத்திரமே மக்களின் இத்தகைய போராட்டங்களைத் தணிக்க முடியும்.
>
> ***

இது சிங்களப் படைத்தரப்புக்கு மாத்திரமன்றி அரசதரப்பினருக்கும், பொதுமக்களும் மாணவர்களும் தமது தெளிவான செய்தியினை தெரிவித்துள்ளனர்.

தடுக்கப்பட்டிருக்கும் வீதிகள் மாத்திரமல்ல, யாழ்குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களும் அவர்களுக்கு இடையூறாகவே இருக்கும் என்பதே அதுவாகும்.

இது காலப்போக்கில் மக்கள் வெகுஜனப் போராட்டம் என்னும் நிலையைக் கடந்து மக்கள் முற்றுகைப்போராட்டம் என்றநிலைக்கு மாறினாலும் வியப்பதற்கொன்றுமில்லை.

யாழ்குடாநாட்டு மக்களை இத்தகைய நிலைக்குத் தள்ளியமைக்கு பிரதான காரணிகள் சிறிலங்கா அரசும் அரச படைகளுமேயாகும்.

சமாதான முன்னெடுப்புக்களின் மைய விளிம்பில் இருக்கின்ற இன்றைய நிலையில் படையினர் மக்களின் வெகுஜனப்போராட்டத்தைத் தடுக்க முனைந்தது மாத்திரமன்றி ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியமையும் கண்டிக்கத்தக்க ஒரு சம்பவமாகும். பொதுமக்களின் அமைதி என்பது நாடுமுழுவதும் இயல்புநிலைக்கு மிக அவசியமானதொன்றாகும். பொதுமக்கள் அமைதி இழந்துபோவது நாடு இயல்பு நிலையை இழந்து போயுள்ளது என்பதன் குறிகாட்டியேயாகும்.

ஹாட்லிக் கல்லூரியின் சூழலை அண்டிய பகுதியில் அமைந்துள்ள வீதியைத் திறப்பதற்காக பொதுமக்களும் மாணவர்களும் பொது அமைப்புக்களும் ஏற்கனவே பல போராட்டங்களை நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

படையினர் பொதுமக்களின் போராட்டத்திற்கு மதிப்பளிக்காமல் மேலதிக படையினரைக் குவிப்பதோடு விசேட கொமாண்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் ரோந்து பிரிவினரையும் அப்பகுதியில் குவித்துள்ளனர்.

மேலும் அச்சுற்றாடலில் வசித்துவரும் குடும்பங்கள் வெளியேறுவதையோ நடமாடுவதையோ தடுத்தும் உள்ளனர். யாழ்குடாநாட்டின் இயல்புநிலை திரும்பியதாக கூறமுடியுமா என்கின்ற கேள்வியே தற்போது எங்கும் வியாபித்து நிற்கிறது. மக்கள் போராட்டத்தின்முன் உத்தியோக பூர்வமாக பாதை திறந்துவிடப்படுமென 524வது படைப்பிரிவின் தளபதி ஜெயவர்த்தனா தெரிவிப்பதும் .

524 வது படைப்பிரிவின் பாதுகாப்புக் கருதி பாதை திறந்துவிடப்படமாட்டாது என பாதுகாப்புஅமைச்சர் திலக்மாரப்பன தெரிவிப்பதில் யாழ்குடாநாட்டு மக்களை மேலும் மேலும் போராடவே தூண்டும்.

இது மாணவர்களின் சாதாரண போராட்டம் என அரசு தட்டிக்களிக்க நினைக்குமாயின் தமிழ் மக்களின் மனங்களை இந்த அரசு ஒருபோதும் வென்று விட முடியாது.

யாழ்குடா நாட்டு மக்களின் வாழ்வாதாரங்களின் மூலமான கல்விசார் நடவடிக்கைகளோடு அரசு பிணக்கப்படுவது மேலும் மேலும் சமாதானத்தை கானல்நீராகவே மாற்றும்.

இந்நிலையில் அரசு இந்தப் பிரச்சினையை மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுப்பது மூலமே தீர்க்கமுடியும்.

## கேணல் ராயுவுக்காய் ஒரு கென்யா நாட்டுக் கவிதை



## ஒரு முதல்வனின் மரணம்

நடைபாதை நெடுக மக்கள்
துன்பமான மௌனங்கள்...
கண்ணீர்கள்
இன்னோருலகின்
எங்கோ ஓரிடத்துக்கு
பயணமாகிறது அப்பேழை

பின்தொடர்ந்தே வருகின்ற
உணர்வு வெளிப்பாடாய்
ஒலிக்கின்ற
சோகமான பாடல்களில்
மூழ்கியபடி
மாநிலம்முழுவதும்
அதன் பின்னால்
சிந்தனையோடு.....
காயப்பட்ட அசைகளுடன்.

வெறுமையான முகங்களின்
பிரியாவிடைகளில்
மீட்டப்படும்
கடந்த காலங்கள்,
அவனுடைய கனவுகளையும்
ஆட்சிக்கால வருடங்களையும்
பற்றியதான கதைகளை
மிதக்க விடுகின்றன.

இதிகாசக் கதையொன்றுக்குள்
நகர்ந்து கொண்டிருக்கிற
இந்த ஊர்வலத்துக்காய்
பாதை மௌனித்திருக்கிறது

புகழ்ச்சிகளிலிருந்து விடுபட்டு
தனியாக
அவன் நடந்து செல்கையிலே
மாறக்கூடிய செய்தியொத்த...
காற்றையொத்த...நாக்குகளில்
அற்புதமான சாதனை என்ற
அந்த உலகார்ந்த எண்ணம்
மிதந்து கொண்டிருக்கிறது.
மரணத்தினுடைய
சுகந்தத்தினுடையவும்
அதனுடைய
அமைதி தரும் திகைப்பினுடையவும்
நித்தியமான
உறைய வைக்கும் குளிர்மையை
சுவை பார்ப்பதற்கும்
அவனுடைய வாழ்வுக்கும்
இடையேயான
ஒரு இடைமாறு நிலையாய்......
மெதுவான இந்த நடைப்பயணம்
ஒரு மீளச் சரிசெய்தலாய்.....
தோன்றுகிறது.

ஆங்கில மூலம்:
கடாம்பி அசாலாச்சே,
கென்யா.
தமிழில்: வீ.அருளாளன்
இம்ரான் பாண்டியன் படையணி.

# மிக வாய்ப்பான சர்வதேசச் சூழலில் ரணில்



"தீவுகளின் ராணி" என்று இலங்கைத்தீவுக்கு நேரு புகழாரம் சூட்டினார். ஆனால் தற்போது இலங்கைத்தீவு அந்நிய சக்திகளுக்கு ஒரு கவர்ச்சிக் கன்னியாகவல்லவா உள்ளது.

தமிழரின் பெயரால் இலங்கை மீது இந்தியா எதிர்காலத்திற் படையெடுக்கக்கூடும். அதனைத் தடுக்க வேண்டும் என்ற நீண்டகால நோக்கின் அடிப்படையில்தான் பிரித்தானிய தளங்களை இலங்கையில் அமைக்கத் தான் சம்மதித்ததாகவும், அதனை இடதுசாரிகளும், தற்போது கூடவே பண்டாரநாயக்காவும் எதிர்ப்பதாக டி.எஸ் செனனாயக்கா மரணமடைவதற்கு சில மாதங்களுக்கு முன் தன்னிடம் கூறியதாக ஓய்வுபெற்ற சிங்கள அதிகாரி ஒருவர் இந்திய இராவணும் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் த ஐலண்ட் பத்திரிகையில் எழுதியிருந்தார்.

டி.எஸ் செனனாயக்காவின் பின் டட்லி செனனாயக்கா என, சென்னாயக்கா குடும்பத்தை தொடர்ந்து அரசியல் அதிகாரத்தில் தக்கவைக்க பிரித்தானியா உதவும் என்ற இரகசிய உடன்பாடு தெரியவந்ததைத் தொடர்ந்து பண்டாரநாயக்கா ஐ.தே.க.விலிருந்து வெளியேறினார். இதற்கு பிரித்தானியா தளம் உறுதுணையாய் அமையுமெனவும், எனவே ஐ.தே.க.வினை வீழ்த்துவது பிரித்தானியர் தளங்களை அகற்றுவதென்பதன் மூலமே பூர்த்தியாக்க முடியும் என்றும் பண்டாரநாயக்கா கருதினார். இதனடிப்படையில் தளமகற்றும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு இறுதியில் தளங்களை அகற்றியும்விட்டார்.

இத்தளம் அகற்றும் விவகாரத்தை நிறைவேற்றுவதற்கு பண்டாரநாயக்கா கையாண்ட அரசியல் சித்துவிளையாட்டே "அணிசாராமையும்", நேருவின் கரத்தைப் பலப்படுத்தல் என்பதுமாகும். தளத்தை அகற்றி டெல்கியின் மனதை குளிர வைப்பதன் மூலம் "இந்திய ஆபத்து" எனும் விடயத்தைக் கடந்திடலாம் என்பதே பண்டாரநாயக்காவின் உத்தியாகும். பிரித்தானிய தளங்களை ஏற்றுக்கொண்டு டி.எஸ் செனனாயக்காவின் மந்திரிசபையில் அமைச்சராயிருந்த பண்டாரநாயக்கா தனக்குப் பிரதமர் பதவி கிடைக்கமாட்டாது என்பதை அறிந்துகொண்டபின்பே தளவிவகாரத்தை தனிமுதன்மையான விவகாரமாய் கையில் ஏந்தினார்.

மீண்டும் காட்சி மாறியது. 1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் இனப்பிரச்சினையின் பெயரால் சிங்கள இராணுவத்தை மேற்குலகமயமாக்கம் செய்தார். அதன் துணையுடன் பத்தாண்டுகளை அவரால் தெளிவாக கடக்க முடிந்தது. ஆனால் மேற்குலக-இந்திய இராணுவ முரண்பாட்டின் பின்னணியில், பனிப்போர் சூழலில், சோவியத் அனுசரணையுடன் இந்தியாவின் கரம்மேலோங்கி நிற்கவே பின்பு இந்திய இராணுவத்தைத் தழுவி தன் எஞ்சிய காலத்தை ஜே.ஆர் நிறைவேற்றினார். இதில் ஜே.ஆரிடம் இருமுனைக்கத்தி நோக்குநிலை இருந்தது. ஒன்று இந்திய இராணுவத்தைப் பயன்படுத்தி தன்னைத் தக்கவைப்பது: இரண்டாவது, புயபலத்தால் தன்னை மிரட்டும் இந்திய இராணுவத்தை சகதிக்குள் சிக்கவைப்பது. இப்படி வளர்க்கப்பட்ட இனவாதத்தின் பெயராலான இராணுவக் கட்டமைப்பிற்தான் ஐ.தே.க தொடர்ந்து 17 ஆண்டுகள் பதவியில் இருக்க முடிந்தது. 17 ஆண்டுகளின் பின்பு ஐ.தே.க வீழ்ந்தமை என்பது அரசியற் தக்கபூர்வ வளர்ச்சியின் தவிர்க்க முடியாத மொத்த விதியின் விளைவாகும்.

இப்போது மீண்டும் ஐ.தே.கவிற்கு புதியதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ரணிலின் தலைமையின் கீழ் நிகழவுள்ள இரண்டாம்கட்ட நவீனமயமாக்கலே அது. அதன்படி நவீனமயமாகவுள்ளவை.

1) தகவல் தொழில்நுட்பம்,

2) இராணுவம்,

3) பொருளாதாரம் - இங்கு பொருளாதாரம் நவீனமயமாதல் என்பது உண்மையின் மேற்குலக வர்த்தக மயமாதல் என்பதுதான். இத்தகையவர்த்தக மயமாக்கலுடன் சேர்ந்தே மேற்குலக, வர்த்தக கலாச்சாரமயமாதலும்நிகழும், இதிற் சிறுவர்பாலியல் உட்பட ஒரு புதிய வளமான பாலியற் சந்தையாக இலங்கை எழுச்சி பெறும். அத்துடன் கைத்தொழில் வளர்ச்சியற்ற வர்த்தக மயமாக்கலில் ஒருவகை விகாரம் இருக்கும். அத்தகைய விகாரத்திற் குண்டர் கலாச்சாரம் செழித்து வளரும். இயல்பான வளர்ச்சியற்ற இந்த விகாரமானது அதற்கே யுரிய ஏனைய அழுகிய பக்கங்களையும் மனிதமாண்பின்மையையும் வாழ்க்கை முறையாக்கிவிடும்

இந்த நவீனமயமாதலில் சந்திரிகாவின் பிரச்சினை என்னவெனில் இராணுவம் நவீனமயமாதல் எனும் இரண்டாவது அம்சம்தான். ஏனெனில் இங்கு இராணுவம் நவீனமயமாதல் என்பது இராணுவம் அமெரிக்க மயமாதல் என்பதுதான். இராணுவம் அமெரிக்கமயமானால் அது ஐ.தே.கவினைத் தூக்கி நிறுத்தும். இதனால் ஐ.தே.க நீண்டகாலம் பதவியில் நிலைக்க முடியும் என்றும், முன்பு பிரித்தானிய தளங்கள் தனது சந்தைக்கெதிராக டி.எஸ் ற்கு உதவியது போல இனி இலங்கையில் அமெரிக்க இராணுவ மயமாக்கல் தனக்கும், தனது வம்சத்திற்கும் எதிராக அமைந்துவிடும் என்றும் சந்திரிகா அதிகம் அஞ்சுகிறார் எனத் தெரிகிறது.

இந்நிலையில் காணப்படும் தற்போதைய சர்வதேச அரசியற் சூழலை ரணில் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைமுதலில் விளங்க வேண்டியது அவசியம்.

தென்னாசியாவை மேற்குலக வர்த்தக மயமாக்கலுடன் இணைத்துவிட வேண்டும் என்பது அமெரிக்காவின் நிரந்தரக் கொள்கைகளுள் ஒன்று. இந்த இலட்சியத்தை அமெரிக்கா ஈட்டுவதற்கு இலங்கையை அமெரிக்காவின் கையில் இப்பிராந்தியத்திற்கான ஒரு தூண்டிலாக்க ரணில் சம்மதம். அதேவேளை அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருக்கும் வேறொரு உடனடித்தேவையின் நிமித்தம், அமெரிக்காவுடன் அதிகம் ஒத்துப்போவதன் மூலம் தனக்கான அனுகூலங்களை அதிகரிக்கவும் விரைவு படுத்தவும் முடியும் என்பது ரணிலின் இன்னொரு கணிப்பாகும்.

அதாவது இராணுவ ரீதியாக வளைகுடாவையும், அதன் நீட்சியாகத் தென்னாசியாவையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துவிட்டால் இந்து சமுத்திரம் முழுவதிலும் தமது பொருளாதார நலன்கள் எவற்றையும் அடையலாம் என்பதே அமெரிக்காவின் பேரவா. தென்னாசியாவில் இந்தோ-பாக் முரண்பாட்டைப் பயன்படுத்தி தன்னை அங்கு நிலைநிறுத்துவது, வளைகுடாவில் இஸ்லாமிய நாடுகளிடையேயான முரண்பாடுகளையும், உள்நாட்டில் ஆட்சியாளர் புரியும் எதேச்சதிகாரங்களையும் ஏதுவாகக்கொண்டும் வளைகுடாவில் நிலைகொள்வது என்பது அமெரிக்காவின் பெரும் போக்கான திட்டமாகும்.

இதில் தென்னாசியாவைக் கட்டுப்படுத்த வளைகுடா அரணாகும். வளைகுடாவைக் கட்டுப்படுத்த தென்னாசியா அரணாகும். இதில் தென்னாசியாவும் வளைகுடாவும் அவரவர் நிலையில் நின்று ஒன்றையொன்று பார்க்கையில் ஒன்றுக்கொன்று வேறானதாகத் தோன்றினும் அமெரிக்காவின் நிலையிலிருந்து பார்க்கையில் அவை இரண்டும் அவற்றின் விளிம்பில் உள்ள பிராந்திய நாடுகளுடன் இணைந்து ஓர் அமெரிக்க தேவைக்கேற்ற ஒன்றுக்கொன்று இசைவாக ஒட்டப்படுகின்றன.

ஈராக்மீதான அமெரிக்கத் தாக்குதல் முயற்சிக்கு அதன் பெற்றோலிய வளமே காரணமென கண்ணுக்குத்தெரியும் ஒரு

**-மு- திருநாவுக்கரசு**


பொருளாதார காரணியை மட்டும் சிலர் கூறி ஒரு பேருண்மையை மறைத்துவிடப்பார்க்கின்றனர். அமெரிக்காவிற்கு பெற்றோலியம் தேவை. அதிற் சந்தேகமில்லை. அதாவது சந்தையும் வர்த்தகமும் தான். சுழற்சியான பண்ட உற்பத்தியின் அச்சு. பண்ட, உற்பத்திதான் பொருளாதார ஆக்கம். எனவே தொடர் பொருளாதார வளர்ச்சிக்கு சக்திப் பொருளாகிய பெற்றோலியம், வர்த்தகம், சந்தை, தடையற்ற கடல் வழிப்போக்குவரத்து, மூலவளங்கள் என்பன அனைத்தும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவகையில் இணைக்கப்பட வேண்டியுள்ளன. ஆதலால் வளைகுடாவும் தென்னாசியாவும் அவற்றின் விளிம்பு நாடுகளும் ஒன்றுக்கொன்று இசைவான முழுமையான பார்வையுடன் இணைக்கப்படும் போதுதான் அது ஒரு முழுச் சுற்றோட்டத்திலான பொருளாதார நலனை மேற்குலகிற்கு கொடுக்கும். இத்தகைய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ்த்தான் புஷ் நிர்வாகம் செயற்படுகின்றது.

இத்தகைய ஒருங்கிணைப்பைத் துரிதப்படுத்துமாறு ஒரு வரலாற்று யதார்தம் அமெரிக்காவைத்தூண்டி நிற்கின்றது.அதுவே செப்ரெம்பர் விவகாரம். • இதனை வரலாற்றுப் பின்னணியில் வைத்தே புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாம், இரண்டாம்,மூன்றாம் உலகமகா யுத்தங்களின் போதெல்லாம் அமெரிக்க மண்ணில் ஒரு துப்பாக்கிச் சன்னங்கூட வெடிக்கவில்லை. நான்காம்உலக யுத்தத்தின் போதுதான் பின்லாடனால் அமெரிக்க மண்ணில் இரட்டைக் கோபுரங்களை முற்றாக அழித்ததுட்பட அமெரிக்காவின் இராணுவத் தலைமைப் பீடமாகிய பென்ரகன் வரை பாரிய தாக்குதலை நடத்தமுடிந்தது.

இதன்பின்புதான் அமெரிக்க இராணுவச் சிந்தனையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

அதாவது, அமெரிக்கா, அத்திலாந்திக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம் எனும் இரு பெரும் சமுத்திரங்களால் அரணமைக்கப்



பட்ட நாடு. அத்துடன்அதன் சுற்றுமுற்றுமுள்ள நாடுகளும், பலவீனமானவை. எனவே சமுத்திரத் திட்டத்தாலும், கண்டத்திட்டத்தாலும் அமெரிக்க பாதுகாப்பு உறுதியானது. ஆதலால் அதற்கேற்படக் கூடியஆபத்து கண்டம்விட்டுக் கண்டம்பாயக்கூடிய ஏவுகணைகளாற்தான் என்பதே அமெரிக்க கணிப்பீடு. இதனாற்தான் நட்சத்திர யுத்தம் என்று சொல்லப்படுகின்ற எஸ்.டி.ஐ (strategic defence initiative) திட்டம் பற்றி அமெரிக்க ஜனாதிபதிகள் தீவரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். இதன்படியே அண்ட வெளி யுத்தமுறையின் மூலம் வான்பரப்பில் வைத்தே ஏவுகணைகளை அழித்துவிடலாம் என்பது.

இவ்வாறு அமெரிக்கா ஒரு ஏவுகணை யுத்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் பின்லாடன் வெளியிலிருந்து எந்தவொரு ஏவுகணையையும் ஏவாமல் அமெரிக்காவிற்குள்ளிருந்தே, அமெரிக்காவின் வளங்களைப் பயன்படுத்தியே, அமெரிக்கா தனது மண்ணில் எந்தவொரு யுத்தத்திலும் கண்டிராத பாரிய தாக்குதலைச் செய்தார். அமெரிக்க நட்சத்திர யுத்தத்தின் கண்ணுக்குப் படமுடியாத ஒரு தாக்குதல் அது. இதனால் அமெரிக்கா தனது வானத்து எஸ் டி.ஐ யினை விடவும் பலமான கள இராணுவ நடவடிக்கைகளிற் கவனம் செலுத்தத் தொடங்கியது. இதனால் கள இராணுவ நடவடிக்கையும். தரையில் தரித்து நிற்றலும் என்ற இராணுவ சிந்தனை அமெரிக்க திட்மிடலாளர்களிடம் பலம் பெற்றுவிட்டது.

இத்தகைய விளக்கத்துக்குள்ளும் வியாக்கியானத்துக்குள்ளும் அமெரிக்கா சதாமை உட்படுத்தி வருவதுடன் அதற்கான பிரச்சாரத்தையும் செய்து வருகின்றது. சதாமிடம் ஆபத்தான இரசாயன ஆயுதங்களும், அணுவல்லமையும் இருப்பதாக புஷ்ஷும் ரொனி பிளேயரும் கூறிவருவதுடன் இத்தகைய ஆயுதங்கள் அமெரிக்காவிற்கு மட்டுமல்ல ஐரோப்பாவிற்கும் ஆபத்தாயமையும் எனவும் கூறிவருகின்றனர். இதன் அர்த்தம் என்னவெனில் சதாம் ஆபத்தான ஆயுதங்களை ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் கடத்திச் சென்று அங்கு பேரழிவை உருவாக்கி விடுவார் என்பது. இவ்வாறாக ஈராக்கை நோக்கி ஒரு யுத்த மேகத்தை அமெரிக்கா நகர்த்துகின்றது

இத்தகைய யுத்தத்திற்கு இஸ்லாமிய நாடுகளின் களநிலை ஆதரவு எதிராய் அமையுமாயின் கள இராணுவ நடவடிக்கைகளுக்கு இராணுவப் பின்புலன்கள் அமெரிக்காவிற்குத் தேவை. இத்தஙகய கட்டத்தில் இலங்கை சிறந்ததொரு மாற்று வழிப்பின்புலமாக அமையலாமென அமெரிக்கா கருதுகின்றது. இதனால் இலங்கை மீது அமெரிக்கா அதிக காதல் லீலை புரிகின்றது. அது இனிப்பும், கண்டோஷும் எனப் பலவற்றை நீட்டுகின்றது. இந்தப் புதிய வாய்ப்பை ரணிலும் ஐ.தே.க.வும் முழு அளவிற் பயன்படுத்த விரும்புகின்றனர்.

ஆனால் இதில் ரணிலுக்குள்ள பிரச்சினை என்னவெனில் இந்தியாவை சினமடையவிடாது பார்த்துக்கொள்வதுதான். அணு வல்லமைமிக்க பாகிஸ்தானுடன் இந்தியா மோத வேண்டியுள்ளது. அத்துடன் பனிப் போர்க்கால சோவியத் உறவும் இந்தியாவிற்கில்லை. இந்தச் சூழலில் அமெரிக்காவிற்கு இந்தியா நசிந்துபோவதுதான் பாகிஸ்தானை எதிர்கொள்ளவுள்ள ஒரே வழி. இச்சூழலில் இந்தியாவை சற்று சமாளித்துவிட்டால் தனது அமெரிக்க காதல் நிறைவேற முடியும் என்பதே ரணிலின் நிலை.

இந்தியாவைக் கையாள்வதற்கு சென்னையையும், ஏனைய தென்னிந்திய மானிலங்களையும், மத்திய அரசையும் கையாளல் எனும் முக்கோணத் திட்டத்தை ரணில் கொண்டுள்ளார். இதில் இவ்விருநாடுகளையும் ஒரே நேரத்தில் சிறப்புற கையாளல் என்பதுதான் ரணிலின் இராஜதந்திர வித்தைக்குரிய சவாலாகும். தனது அரசியல் உயிர் மூச்சும் தளமும் இவ்விரு நாடுகளையும் கையாளல் தான் என ரணில் நம்புகின்றார். அதாவது தனது உள்நாட்டரசியலை ரணில் முற்றிலும் வெளிநாட்டரசியலுக் குள்ளாற்தான் பார்க்கிறார். ஈராக்மீதான அமெரிக்க யுத்தம் வெடித்தால் இலங்கை-அமெரிக்க உறவு அதிகம் பலமடையும் பின்னணிகளே அதிகம் தெரிகின்றன.

இவற்றின் பின்னணியில் தனக்குரிய வாய்ப்புக்கள் அதிகம் சுருங்குவதைக்கண்டு சந்திரிகா குமுறுகிறார் என்பதை அவரது நடத்தைகள் காட்டுகின்றன. டி.எஸ் விட்டுச் சென்றஇடத்தில் இப்போது ரணில் இலங்கையை மேற்குடனும், ஐ.தே.கவுடனும் சேர்த்து மீள் முடிச்சுப்போடும் நிலையில் உள்ளார் என்பது சந்திரிகாவிற்குத் தெரிகின்றது. அதேவேளை அந்த முடிச்சை அறுப்பதில் தனது தந்தைக்கிருந்த வரலாற்றுக் காலகட்ட வாய்ப்பு தனக்கில்லை என்றும் அவருக்குத் தெரிகிறது. ஆனால் இனவாதத்தைக் கையில் எடுத்ததன் விளைவுதான் இது என்பதை சந்திரிகாக்களும், அனுராக்களும், குட்டி விஜேவீராக்களும் விளங்கிக் கொள்ள இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் எடுக்குமோ யாரறிவர்

எப்படியோ மொத்தத்தில் இலங்கையின் அரசியல் என்பது முற்றிலும் சர்வதேச அரசியலின் பிம்பமாகி விட்டது, சர்வதேச அரசியலின்றி இலங்கைக்கு இனி எவ்வித அரசியலுமில்லை. சர்வதேச அரசியற் சக்திகளின் கண்களில் இலங்கை ஒரு கவர்ச்சிக்கன்னி.

# நறுக்கென



## சந்திரிகாவை அழுத்தும் சக்தி!

விவகாரம் தனது தலைக்கும் மேல் தனது கட்டுப்பாட்டு அதிகாரத்தை உடைத்துக் கொண்டு மேலே போய்க் கொண்டிருப்பதை சந்திரிகா உணரத் தொடங்கியுள்ளார் போல் தெரிகிறது.

தாய்லாந்து பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகளின் மீதான தடைநீக்கம் இடைக்கால நிர்வாகம் நிறைவேற்று அதிகாரவலுக் கொண்ட சனாதிபதி ஆட்சி முறைமையை நீக்குதல் ஆகியவிடயங்கள் தொடர்பாக சனாதிபதியின் ஊடகத்துறைப் பேச்சாளர் அண்மையில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் தொனிப்பொருள் மேற்குறிப்பிட்ட குணாம்சத்தையே கொண்டதாக உள்ளது.

மக்களின் விருப்பத்திற்கமைய இணைந்து நிர்வாகம் மேற்கொள்ளப்படும் அமைப்பை ஏற்படுத்தும் கடப்பாட்டை சனாதிபதி கொண்டுள்ளதாக ஊடகத்துறை பேச்சாளர் கூறியிருப்பது ஐ.தே.முன்னணி அரசின் நகர்வுகளுக்கு கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.

மக்கள் விரும்பும் அரசியல் யாப்பு மாற்றத்தை மேற்கொண்டு நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவும் அதிகார பரவலாக்கத்தை மேற்கொள்ளவும் சந்திரிகா தனது ஆலோசகர்களுடன் பரிசீலனை செய்வதாக அவர் தெரிவித்துள்ள செய்தியானது சந்திரிகா இறங்கு முகம் நோக்கி நகர்வதை குறிப்பிடுகின்றது என்றே கூறவேண்டும்.

தாய்லாந்து பேச்சுவார்த்தையை உற்சாகத்துடன் சனாதிபதி சந்திரிகா வரவேற்பதாக பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருப்பதானது சந்திரிகா ஒருவாரத்திற்கு முன்னர் இருந்த வரட்டு பிடிவாத நிலையிலிருந்து தளர்ச்சி காணும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதையே உணர்த்துகிறது.

பேச்சுவார்த்தையில் கலந்து தனது பிரதிநிதியை அனுப்ப யோசிக்கின்றார் சந்திரிகா என்ற செய்தி "பேச்சுவார்த்தையை" அங்கீகரித்தும் அனுசரித்தும் செல்ல வேண்டிய தவிர்க்க இயலாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருப்பதையே கோடி காட்டுவதாக உள்ளது.

பேச்சுக்களின் போது எட்டப்படும் உடன்பாடுகளை அமுல் செய்வதில் கால தாமதம் ஏற்படும் எனில் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கலாம் என அவர் கருதுவதாக ஊடகத்துறைப் பேச்சாளர் அறிவித்திருப்பதானது "இடைக்கால நிர்வாகம" தவிர்க்கவோ நிராகரிக்கவோ முடியாத ஒரு அம்சம் என்பதை சனாதிபதி உணர்ந்து கொண்டுள்ளதையே காட்டுகிறது. இவையனைத்தையும் சனாதிபதி சந்திரிகா தனது சுயஅறிவின் மூலம் சுயபகுப்பாய்வின் பிரகாரம் உணர்ந்து கொண்டிருப்பார் என்று நம்புவது கடினமாகும். அதுவும் ஒருவாரகாலம் இடைவெளிக்குள் இந்த குத்துக்கரணம் இயல்பாக ஏற்பட்டது என்பதை எவராலும் நம்பவே முடியாது.

ஆக இதன் பின்னால்- இதனை மேற்கொள்ள சனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ள புறசக்திதான் எது?

இதுவே அரசியல் நோக்கர்களின் மனதில் எழும் விடைகாண முடியாத கேள்வியாக இன்றுள்ளது.

✠✠

## ஜெயரத்னாவின் அறிவிப்பு



'அடிக்குமேல் அடி' என்பார்கள். சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவுக்கு இப்போது விழுவது அதுதான்.

உட்கட்சிக் குழப்பம் ஜே.வி.பி.யின் கூட்டை தொடரவும் கைவிடவும் முடியாத இக்கட்டான நிலை அநுராவின் கோமாளித்தன அரசியலை மெல்லவும் விழுங்கவும் முடியாத சூழல் ரத்வத்தை குடும்பத்தினரின் மோசடிகள் குற்றவியல் நடவடிக்கைகளின் வெளிப்பாடு ரணிலின் அரசியல் காய்நகர்த்தல்கள் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் சட்டரீதியிலான அதிரடி அறிக்கைகள் K.N. ஸொக்ஸியின் குற்றமற்றும் மோசடி தொடர்பான வெளிப்படுத்தல்கள் ரவி கருணாநாயக்கவின் கேலியும் கிண்டலும் கலந்து எரிச்சலூட்டும் சவால்கள் என அடிக்குமேல் அடி வாங்கி அலமலந்து நிற்கும் நிலை அவருக்குரியதாகி விட்டது.

எவரையும் நம்பமுடியாத எவராலும் காப்பாற்றமுடியாத நிலை அது. "நிறைவேற்று அதிகார" பதவி என்கிற வலுவான ஒரேயொரு ஆயுதத்தைக் கூட செயலற்றதாக்கி விடக்கூடியநிலை... கூட இருந்தே குழிபறிப்போர் அவரைச்சுற்றிலும் அதிகமாகிவிட்டது.

ஆக மிஞ்சுமெனக்கண்டால் இராணுவத்திடம் ஆட்சியையும் அதிகாரத்தையும் கையளித்து விட்டு "அஞ்ஞாத வாசம்" மேற்கொள்ளும் முடிவுக்கு கூட அம்மணி வரலாம் என ஒரு ஆய்வாளர் கூறுவதை எவரும் முற்றிலும் ஆக நிராகரித்து விடமுடியாது.

'இந்த நெருக்கடி நிலையில் சனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கும் அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக' பொ.ஐ.முன்னணியின் செயலாளரும் தீவிர பௌத்த சிங்கள இனவாதியுமான முன்னாள் அமைச்சர் தி.மு.ஜெயரத்னா அறிக்கையொன்றை விடுத்துள்ளமையானது பொ.ஐ.முன்னணி வட்டாரத்தில் நிலவும் கருத்து முரண்பாட்டு நிலையின் வெளிப்பாடென்று கூறமுடியும்.

'நாடாளுமன்றத்தை கலைத்துவிடும் சனாதிபதியின் அதிகாரத்தைத் அவர் பயன்படுத்துவதை பெருமளவு பொ.ஐ.முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பவில்லை... நாடாளுமன்றத்தை ஒருவருடத்தில் தான் கலைக்கப் போவதில்லை என சனாதிபதி கூறினாலும் அதன் பெரும்பாலான பொ.ஐ.முன்னணியினர் நம்பவில்லை' என ஜெயரத்னா கூறியிருப்பதானது சனாதிபதி வாக்குமாறக் கூடியவர் என்ற சந்தேகம் அவர்களிடம் இருப்பதையே வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இதனைவிடவும் மற்றொரு பொதுத்தேர்தல் எஞ்சியுள்ள தமது உறுப்பினர் பதவியையும் இல்லாமலாக்கி படுதோல்வியை சந்திக்க வைத்துவிடும் என்ற அச்சம் அவர்களிடம் உறுதியாகப் பதிந்துள்ளதையே இது வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

எதுவானாலும் சனாதிபதியை காப்பாற்றுவதை விடவும் அவரின் அதிகார வலுவை பாதுகாப்பதை விடவும் தமது எஞ்சியுள்ள பதவிக்காலத்தைப் பாதுகாத்துக் கொள்வதுதான் இப்போது பொ.ஐ.முன்னணியினரில் பலரின் இலட்சியமாக உள்ளது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லையென்றே கூறவேண்டும்.

✠✠

## சட்டத்தின் பாதுகாப்புடன்...



பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்கும் அதிகாரம் தனக்கே வழங்கப்பட்டிருப்பதாக சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் சட்டமா அதிபருமான திலக் மாரப்பன- இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியே விடுதலைப்புலிகள் மீதான தடையை மேற்கொள்ளப்பயன்படுத்தப்பட்ட சட்டத்தின் சரத்துக்களை தான் ரத்துச் செய்திருப்பதாக கூறியுள்ளார்.

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவோ இதுவரை காலமும் தனக்கே சர்வ அதிகாரம் உள்ளதென்றும் தான் நினைத்தால் சகல அமைச்சர் பதவிகளையும் பொறுப்பேற்க முடியுமெனவும் ஏன் ஆட்சியைக்கூட கலைத்து விடமுடியுமென்றும் கடந்த காலங்களில் சூளுரைத்து வந்துள்ளதை நிராகரிப்பது போன்றே மாரப்பனவின் இந்தக் கூற்று விளக்குகின்றதெனலாம்.

அமைச்சரின் அதிகாரத்தை சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் ரத்து செய்யும் வலுக்கொண்டதாக இல்லையோ என்ற கேள்வி எழவே செய்கிறது. முன்னாள் சட்டமாஅதிபருக்கு தனக்குள்ள அதிகார எல்லைபற்றியும் சனாதிபதிக்குள்ள அதிகார வலுபற்றியும் தெரியாதிருக்கும் என்று கூறிவிடமுடியாது.

எனவே சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யும் 'சட்டஓட்டை'அரசியல் யாப்பில் இருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

சட்ட நுணுக்கத்தில் தேர்ந்தவர்களும் ஒரு காலத்தில் சனாதிபதிக்கு சட்டரீதியிலான ஆலோசனை கூறி- சட்டரீதியில் அவர் சார்பில் குரல் கொடுத்து சட்டரீதியில் அவரது செயற்பாடுகளை நியாயப்படுத்திய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இப்போது ரணிலுடன் இருக்கிறார் மற்றொரு சட்டமேதையென வர்ணிக்கப்படும் சொக்ஸியும் ரணில்பக்கமே. இவர்கள் இருவரும் சிறிலங்காவின் அரசியல் யாப்பினை 'அக்குவேறு ஆணிவேராக' அலசிக் கரைத்துக் குடித்தவர்கள். அவர்களுக்கு அரசியல் யாப்பின் பலமும் தெரியும் பலவீனமும் தெரியும். யாப்பிலுள்ள சட்டஓட்டைகளை எப்போது எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதும் தெரியும்.

இதுவே இப்போதைய ரணிலின் பலம். சந்திரிகாவின் பலவீனமும் இதில்தான் அடங்கியுள்ளது. இந்த பலமான தளத்தில் இருந்தே மாரப்பனவின் குரல் ஒலிப்பதாக உறுதியாகக் கூற முடியும்.

இந்த சட்டம் என்ற 'சாட்டை'யைப் பயன்படுத்தியே ரணிலின் ஐ.தே.முன்னணி அரசு சந்திரிகாவையும் பொ.ஐ.முன்னணியினரையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியுள்ளது.

✠✠

## மகாநாயக்கரின் வெட்கம்



முன்னாள் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் சனாதிபதி சந்திரிகாவினால் 'ஜெனரல' பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட அவரது அருமை மாமனாரும் உடத்தலவின்ன படுகொலைகள் புகழ் லொகான் ரத்வத்தைச் சானுக்க ரத்வத்தை ஆகியோரின் பெருமைக்குரிய தந்தையாருமான அநுருத்த ரத்வத்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் மிகவும் 'பாதுகாப்பாக' தனது எதிர்காலத்திற்காக செய்த நிதிமோசடிகள் வங்கிப் பாதுகாப்புப் பெட்டகங்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்காவின் பல்வேறு தரப்பினராலும் நகைப்புக்குரிய ஒருவராக மாறிவருகிறார்.

இந்தப் போலி ஜெனரலுக்கு (இப்படித்தான் அவரது அன்பு மருமகன் அநுரா முன்னர் அவரைக் குறிப்பிடுவது வழக்கம்) முன்னர் அடிக்கடி ஆசீர்வாதமும் வாழ்த்தும் வழங்கி ஆலோசனைகளும் கூறி அவரைப் பெரும் வீரனாகக் குறிப்பிட்டு தமிழ்மக்களுக்கு எதிரான போரைத் தொடர உற்சாகப்படுத்திய மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரோவான ரம்புக்வெல சிறிவிபஸ்தி அவர்களே ரத்வத்தை குறித்து வெளிவரும் தகவல்கள் வெட்கப்படவேண்டியவையாகும் என வர்ணித்திருப்பது பௌத்த சிங்களவர்கள் மத்தியில் ரத்வத்தை குடும்பம் தொடர்பான மதிப்பை பெருமளவில் பாதித்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

தற்போது அமைச்சுப் பதவிகள் வெறும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தையே கொண்டவையாக உள்ளதெனவும் குறிப்பிட்ட மகாநாயக்க தேரர் ரத்வத்தையை பார்க்கவே தனக்கு வெறுப்பாக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

ரத்வத்தை சேர்த்த பணமெல்லாம் தேசத்தின் சொத்து... நாட்டின் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட பணம். அது மிகவும் பாதுகாப்பாக அவரது வங்கிப் பாதுகாப்பு பெட்டகங்களில் அவரது எதிர்காலப் பாதுகாப்புக்கென பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சந்திரிகா என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறார்?

மாமாவை கட்சியை விட்டு விசாரணை முடியும் வரை தற்காலிகமாகவேணும் நீக்கிவைக்கும் துணிச்சலும் நேர்மையும் அவருக்குண்டா?

இக்கேள்வியை அடுத்த தடவை சந்திரிகா மகாநாயக்கரைச் சந்திக்கும் போது அதிவணக்கத்திற்குரியவர் அதிஉத்தம சனாதிபதியிடம் கேட்கலாமல்லவா? -கேட்பாரா?

✠✠

தாயிற் சிறந்த கோயிலில்லை. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை. என்றெல்லாம் இருந்த காலம் மெல்ல மாறிவருகிறது. காலம்மாறும்,அத்துடன் கலாச்சாரமும் மாறும். சில மாற்றங்கள் வளர்ச்சியின் அறிகுறிகள். சில தவிர்க்க முடியாத சரிவுகள். பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்குமிடையே உள்ள உறவு மறுக்க முடியாதது. ஆனால் அந்த உறவின் தன்மை,தரம் வெளிப்பாடு எல்லாமும் இப்போது மாறிவருகின்றன.

பாசம்-கடமை-உரிமை ஆகிய மூன்று வார்த்தைகளையும் பலர் குழப்பிக்கொள்வதுதான் உறவுகளின் பேதங்களை உருவாக்குகின்றன. பாசம் என்பது அன்பின் வெளிப்பாடு. அன்பு என்பது இருவழித்தொடர்பு. இதைப் புரிந்துகொள்ளாமல் கடமையையும் உரிமையையும் பாசம் என்று பலர் நினைத்துக் கொள்கிறார்கள். மகனிடம் எதிர்பார்ப்பது உரிமை. பெற்றவர்க்கு உதவுவது கடமை. இதில் அன்பும்-நெருக்கமும் கலந்திருந்தால் தான் அது பாசம்.

பெற்றோரிடம் தான் குழந்தைக்கு முதல் உறவு அமைகிறது. தம்பதிகள் விரும்பி, ஒப்பி, ஒத்து ஏற்றுக்கொள்ளும் இன்னொருமுதல் உறவும் குழந்தைதான். இருவரும் மட்டுமே வாழ்க்கை என்ற நிலையிலிருந்து குழந்தையும் சேர்ந்த குடும்பமும் எனும் அமைப்பைப் பெற்றோர் உருவாக்குகின்றனர். குழந்தை பிறப்பதைப் பெற்றோர் முடிவெடுக்க முடிவதுபோல, பெற்றவர்களை நிர்ணயிக்கவோ, தேர்ந்தெடுக்கவோ குழந்தைகளால் முடியாது என்பது நினைவில் இருந்தால் பல குடும்பங்களில் பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் பிரச்சினையே வராது. ஓர் அறிஞரின் அழகான வாக்கியத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்- ''குழந்தைகளைப் பெற்றவர்கள் வளர்ப்பதில்லை: இயற்கையே வளர்ச்சிக்குப் பொறுப்பாகிறது. பெற்றவர்கள் இல்லாமலேயே குழந்தை வளர முடியும்- அதை 'தாம்' வளர்ப்பதாக நினைத்துக் கொள்பவர்கள் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளாதவர்கள்.

தானே வளர்ந்து விடும் என்பதற்காகப் பெற்றோர் குழந்தைகளை மிருகம் குட்டியைச் சுதந்திரமாக விட்டுவிடுவதைப் போல் விடமுடியாது. பல மிருகங்களின் குட்டிகள் பிறந்த சில நாட்களிலேயே தன்னிச்சையாகவும் தனியாகவும் வாழ முடியும். மனிதக் குழந்தை அப்படியல்ல. அதற்கு முதல் 5அல்லது 7 ஆண்டுகள் பெற்றோரின் துணை தேவைப்படும். குழந்தை பெறுவது என்று முடிவெடுத்தபின், குழந்தை பிறந்தது என்று மகிழ்ந்திருந்தபின் - அது வளரும்போது தேவையானவைகளைத் தருவது பெற்றோரின் கடமை. அதற்குப் பதிலாகப் பாசத்தையும் அன்பையும் எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் ''ஏழு வயது வரைக்கும் உன்னை எப்படி வளர்த்தேன், இப்ப இருபத்தியேழு வயசு நன்றியில்லாம இருக்கிறியே......'' என்று பேசுவோர் உண்டு. பெறுவதை முடிவு செய்தபின் பெற்றதை வளர்க்க வேண்டியது பொறுப்பு. பொறுப்புக்கும் கடமைக்கும் பதிலாக நன்றியை எதிர்பார்க்கக் கூடாது. பல பெற்றோர்களின் யதார்த்தம் உணராத எதிர்பார்ப்பே அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் விரிசலையும் வருத்தத்தையும் உண்டாக்குகிறது.

இந்த எதிர்பார்ப்பு பற்றி 'அம்பை' என்ற எழுத்தாளர் எழுதிய ஒரு கதையில் (நீ ஆண்-நீ பெண் என்று நினைக்கின்றேன்) மிகவும் அழகாக காட்டியிருப்பார். ''அங்கிளுக்கு கிஸ் குடு'' ''சிக்குப்புக்கு ரயிலே பாடிக்காட்டு'' ''தைம்ஸ் சொல்லும்மா'' ''நக்மா மாதிரி டான்ஸ் ஆடு'' என்றெல்லாம் குழந்தைகளைப் பிறர் முன் வேடிக்கை காட்டுவதைப் பெருமையாக எண்ணியே பல பெற்றோர் வளர்க்கிறார்கள். தங்கள் குழந்தையின் ஆற்றலை பிறரிடம்பெருமிதமாய்ப் பறைசாற்றி கொள்ளும் உரிமை பெற்றவர்க்கு உண்டு . ஆனால் உண்மையிலேயே குழந்தைக்குத் தேவையானதைத்தான் தட்டிக்கொடுத்து கற்றுத் தருகிறோமா என்று பலர் சிந்திப்பதில்லை. குழந்தை வளர்ப்பு பொறுப்பு வாய்ந்தது மட்டுமல்ல பொறுமையும் பக்குவமும் தேவைப்படும் விஷயம். குழந்தையின் முதல் கல்வி குடும்பத்தில் பெற்றோரிடம்தான் ஆரம்பிக்கிறது. அதன் பேச்சு, பழக்கம் எல்லாமும் முதலில் பெற்றோர் சொல்லித் தருவதுதான். இது அப்பா-இது 'டாடி' என்று எப்படிக் கற்றுத் தருகிறோமோ அதுவே ஆரம்பப் பாடம். ஆரம்பப் பாடம் அழுத்தமாய் மனதில் பதியும்.

## உளவியல்



எதிர்பார்ப்பு இல்லாமல் உறவு கிடையாது. குழந்தையிடம் பெற்றோர் எதிர்பார்ப்பதில் அநியாயம் கிடையாது. ஆனால் பல பெற்றோரின் எதிர்பார்ப்பு சமூகத்திணிப்பின் காரணமாகவே உருவாகிறது. பக்கத்து வீட்டுக்குழந்தை முதல் மதிப்பெண் பெறுகிறது என்பதற்காகத் தம் குழந்தையிடமும் அதையே எதிர்பார்க்கும் பெற்றோர் வீட்டின் நிம்மதியையே குறைத்து விடுவார்கள். ♦

# பெற்றோர்-குழந்தை

அப்பா-அம்மா என்றே குழந்தை பெற்றோரை அறிமுகப்படுத்திக் கொண்டு அழைக்க வேண்டும் என்பது என் தனிப்பட்ட விருப்பம். ஆனால் 'டாடி -மம்மி' என்று கற்றுக் கொடுப்பவர்கள் பிறர் மெச்சச் செய்தால் முறையல்ல. அவர்களுக்கே அப்படி அழைக்கப் படுவது பிடிக்குமென்றால் அதில் தவறுமில்லை.ஆரம்பப் பாடத்தையே குழந்தைக்கும் குடும்பத்திற்கும் எது அவசியம் அழகு என்று புரியாமல் அடுத்தவர் மெச்சக் கற்றுக்கொடுக்கும் பெற்றோர்க்கு பிறகு பல சிக்கல்கள் வரும்.

தன்மகள் ஆறுவயதில் 'டாடி என்றழைத்ததும் மகிழ்ந்த தந்தை, அவள் 16 வயதில்'பாய்.'.ப்ரெண்ட்' கூட கடைக்குப் போய்வர்ரேன்' என்று சொன்னால் -? இதில் 16 வயதுப் பெண் சகவயது ஆணுடன் கடைக்குப் போய் வருவது சரியா தவறா என்ற கேள்வி இல்லை. கலாச்சார மாற்றத்திற்கு ஒரு பரிமாணம் வரைக்கும் ஒப்புக்கொண்டால் போதுமா என்ற கேள்வியே முக்கியம். 'மம்மி' என்று கொஞ்சும் குழந்தையைப் பெருமையாய்ப் பார்த்த எத்தனை தாய்மார்கள், அவள் பருவ வயதில் ஜீன்ஸ் அணிவதை ரசிப்பார்களா? தங்களுக்கு வேண்டிய மட்டும் நாகரீகம் என்று தாங்கள் நினைப்பதைப் போதிக்கும் பெற்றோர் நவீன அடையாளங்களை அங்கீகரிக்க மறுக்கும்போது தான் அவர்களுடைய பிள்ளைகளுடன் பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன.

எதிர்பார்ப்பு இல்லாமல் உறவு கிடையாது. குழந்தையிடம் பெற்றோர் எதிர்பார்ப்பதில் அநியாயம் கிடையாது. ஆனால் பல பெற்றோரின் எதிர்பார்ப்பு சமூகத்திணிப்பின் காரணமாகவே உருவாகிறது. பக்கத்து வீட்டுக்குழந்தை முதல் மதிப்பெண் பெறுகிறது என்பதற்காகத் தம் குழந்தையிடமும் அதையே எதிர்பார்க்கும் பெற்றோர் வீட்டின் நிம்மதியையே குறைத்து விடுவார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தன்மை உண்டு. என்பதை தன் குழந்தையைக் கொஞ்சும்போது உணரும் அதே பெற்றோர் ' கணக்குப் பிடிக்கவிலலை, கதகளி ஆடப் பிடிக்கிறது' என்று குழந்தை சொன்னால் ஏற்றுக்கொள்வதில்லை.

அநேகமாக எல்லாப் பெற்றோர்க்குமே தங்கள் குழந்தைகள் சிறந்த பள்ளியில் படித்து, உயர்ந்த மதிப்பெண் பெற்று, முதலிடத்தில் இருக்க வேண்டும் என்றே விருப்பம். ஆசைப்பட எல்லோர்க்கும் உரிமை உண்டு என்பதால் இது நியாயம்தான். ஆனால் பல பெற்றோர்க்குப் புரியாத விஷயம் இருக்கும் ஒரே முதலிடத்தை வகுப்பில் உள்ள எல்லாக் குழந்தைகளும் அடைய முடியாது என்ற அடிப்படை உண்மைதான்! பெற்றோர்க்கும்-பிள்ளைக்கும் உறவில் விரிசல் இந்த ஆரம்பக்கட்டத்திலேயே அமைகிறது. ''சிம்ரன் உன்னைவிட அழகு'' என்று கணவன் சொன்னால் தாங்கிக் கொள்ளாத மனைவியும், ''சூர்யா எப்படியிருக்கான் பாருங்க..... நீங்களும் உங்க மூஞ்சியும்'' என்று மனைவி சொன்னால் உள்ளெல்லாம் எரியும் கணவனும், தாயாய் தந்தையாய் குழந்தையை பக்கத்து வீட்டுக் குழந்தையுடன் ஒப்பிட்டு அதை ''திருத்தப்'' பார்ப்பார்கள் யாருக்குமே தாம் பிறரோடு ஒப்பிட்டுத்தாழ்த்தி எடைபோடப்படுவது பிடிக்காது. குழந்தைப் பருவத்திலிருந்தே இந்த ஒப்பீடுகளை மனம் எதிர்க்கும். பக்கத்து வீட்டுக் குழந்தையோடு ஒப்பிட்டாலும் சரி தன் மூத்த - இளைய சகோதர-சகோதரியோடு ஒப்பிட்டாலும் சரி,குழந்தையின் உள்ளத்தில் கோபமும்,வெறுப்புமே வளரும்.வெறுப்பு நிறைந்த மனதில் பாசம்வளர வாய்ப்பில்லை. இதை உணர்ந்து பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும்.


பெற்றோரின் பழக்க வழக்கங்கள், கண்டிப்பு, கோபம் இவை குழந்தையின் உள்ளே ஏற்படுத்தும் வெறுப்பு அந்த வயதிலேயே வெளிப்படாது. எதிர்காலம், எதிர்க்க முடியும் என்ற வலு விடலைப் பருவத்தில் வரும். பல வீடுகளில் கீழ்க்காணும் உரையாடலைக் கேட்கலாம்.

''எங்கப்பா போயிருந்தே?'
''வெளியே''
''எதுக்கு?'
''சும்மா.''

இந்த உரையாடலில் சண்டையில்லை. கோபமில்லை- ஆனால் ஒரு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதை உணரலாம். சிறு குழந்தையாக இருந்த காலத்திலிருந்து அன்பும்,அக்கறையும், அளவான கண்டிப்பும், நிறைவான பாராட்டும்,வேண்டியசுதந்திரமும் தந்த பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு இப்படி எதிர்க்கும் உணர்வு வராது. தான் தனக்குத் தேவையானவைகளை மறுக்கப்பட்டோம்,தேவையில்லாமல் தண்டிக்கப்பட்டோம், திறமைகளுக்குப் பாராட்டுப் பெறவில்லை. தவறுகளுக்கு வருந்தினாலும் மன்னிக்கப்படவில்லை என்ற எண்ணம் வளரும் குழந்தைகள் தான் பெற்றோரை எதிர்க்கிறார்கள். இது போக, குழந்தைகளோடு பெற்றோர் அதிகம் பழகவும், பேசவும், இயல்பாக இருக்கவும் வேண்டும். ''இந்த வயசில புரியாது'', ''ஒரு வயசு வரட்டும், அப்பப் பேசிக்கலாம்'' என்றெல்லாம் எடைபோடுவது பெற்றோரின் இயல்பு.

இன்று நவீன சாதனங்கள் வீட்டிலிருந்தவாறே உலகம் முழுக்க நடப்பனவற்றைக் குழந்தைகளும் தெரிந்துகொள்ள வைக்கிறது. நமக்குத் தெரியாத விஷயங்கள் சில குழந்தைகளுக்குத் தெரியும். அதனால் அவர்கள் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டும் விஷயங்களைப் பற்றி அவர்களோடு பேச வேண்டும், 'செக்ஸ்' என்பதைக் கூட நாசூக்காகப் பேச பெற்றோர் கற்றுக்கொள்ள வேண்டும்.

இளமையின் அடையாளங்கள்



மகனின் முகத்தில் மீசையாய்,மகளின் மார்பில் தெரியும் போது அவர்கள் அதைப்பற்றிக் கூச்சப்படாதவாறு பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும்.மாதவிலக்கு இன்றைய காலகட்டத்தில் கூட சில குடும்பங்களில் 'ஆசாரக்குறைவு' என்று தவறாகக் கருதப்படுகிறது. இயற்கையாக ஏற்படும் வளர்ச்சியை இயல்பாக ஏற்றுக்கொள்ளப் பெற்றோர்கள் உதவ வேண்டும்.

பக்தி- கடவுள் போன்ற விஷயங்களிலும் பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் பேதங்கள் ஏற்படும். '' சின்னவயசில கந்த சஷ்டி கவசம் ஒப்பிப்பே,இப்ப சின்னதாக்கூட திருநீறு பூசிக்காம திரியிறே....''என்று பேசும் பெற்றோர் உண்டு. அந்த வயதில் பூஜைக்காக குழந்தை ஒப்புக்கொண்டது யோசித்தல்ல. பெற்றோர்க்கும் பிடித்த விஷயத்தைச் செய்து பாராட்டையோ தின்பண்டத்தையோ பெறுவதற்காகத்தான். இளமை யோசிக்க ஆரம்பிக்கும். எதிர்க்க ஆரம்பிக்கும்.இதை உணராமல் பெற்றோர்பிள்ளைகளின் மேல் தங்களது பக்தியை , மதம் சார்ந்த நடவடிக்கைகளை திணிக்கக் கூடாது. நல்லவை, பயனுள்ளவை, மனதுக்குச் சுகமானவை என்றால் பக்தியையும் குடும்பத்தின் மதவழக்குகளையும் எந்தப் பிள்ளையும் மறுக்கப் போவதில்லை. இதைப்பற்றி பெற்றோர் பேசலாம், விவாதிக்கலாம், நிர்ப்பந்திக்கக்கூடாது.

குடும்ப வழக்கம், குடும்ப மரியாதை போன்ற விஷயங்களும் இப்படித்தான். அவர்களாகவே அவற்றை ஆமோதித்து , அங்கீகரித்து நடந்துகொண்டால் மட்டுமே அதில் அர்த்தமும் பயனும் உள்ளது. இந்த விஷயங்களிலெல்லாம் கவனமாக இருக்கும் பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு இயல்பாகவே பாசம் பிறக்கும்.

மரியாதை என்பது பெற்றோர்-பிள்ளை உறவில் மிகவும் குழுப்பமான வார்த்தை. ''நீ'' என்று என்னை என் மகன் அழைப்பதால் என்னிடம் அவனுக்கு மரியாதை இல்லை என்று அர்த்தமில்லை. பெரும்பாலான பெற்றோர் மிகச் சிறுவயதில் ''டா' சேர்த்து விழிக்கும் குழந்தையை உற்சாகமாய் ரசிப்பார்கள். வளர்ந்த குழந்தை அந்த வழக்கத்தை விட்டுவிடத்தடுமாறும். வெறும் விழியில் மரியாதை எதிர்பார்ப்பவர்கள் அதை முதலிலிருந்து பழக்க வேண்டும். விழிக்கும் விதத்தில் வருவதல்ல மரியாதை. அது உள்ளிருக்கும் மதிப்பின் வெளிப்பாடு. அந்த மதிப்பு வயதால், பணத்தால் வராது- பழகும் விதத்தால் , பண்பால் , பல கோணங்களில் பார்க்கும் திறனால்த்தான் வரும்.

தலைமுறை இடைவெளி என்பது பரவலாக பேசப்படும் ஒரு சொற்றொடர். வெவ்வேறு காலகட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். ஒரே மாதிரி இருக்க முடியாது-ஆனால் மாறுதல்களைக் கவனித்து அவற்றில் தவிர்க்க முயாதவை எவை தவறானவை எவை என்று தேர்ந்து மாற்றங்களை அங்கீகரிப்பவர்கள் வயதால் மட்டுமே மாறுபடுவார்கள். இங்கே தவறு என்பதில் தெளிவுடன்புரிதல் வேண்டும். உடையையும் நடையையும் தவறாகப் பார்ப்பதில் அர்த்தமில்லை. அவை மாறாமலிருக்க வேண்டும் என்றால் நாம் இன்னும் வேட்டி, மட்டுமே கட்டிக்கொண்டிருப்போம்.

இளைஞர்களின் வெளித்தோற்ற மாறுதல்கள் காலத்தின் கட்டாயம். நவீனம்-நாகரிகம் என்பவை மாறி வருபவை. அந்த வயதும் காலமும் ஒத்திருப்பதில் தவறில்லை. உள்ளே மனித நேயம், கடமையுணர்வு, தன்னைப் பற்றித்தனக்கே பொறுப்புணர்வு இவை இல்லாத குணங்களே தவறு. இவற்றை மட்டுமே பெற்றோர் மாற்ற முயல வேண்டும்.

பிள்ளைகளின் நண்பர்களை (அதேபாலினத்தைச்சார்ந்த வர்களானாலும்) கூடச் சில பெற்றோர்க்குப் பிடிக்காது. நண்பர்களை நண்பர்கள் விரும்பினால் போதும். மொத்த குடும்பமும் விரும்ப வேண்டியதில்லை. தந்தை-தாயின் நண்பர்களையும் பல பிள்ளைகள் விரும்புவதில்லை. நண்பர் வட்டம் என்பது அவரவர் விரும்பி ஏற்கும் உறவுக் கூட்டம். நான் இவர்களோடு இருக்கின்றேன் என்று பெருமையாகப் பிரகடனப்படுத்தும் நண்பர்கள் அமையும் போது சிக்கல்கள் வராது. பெற்றோர்களும் தம் பிள்ளையின் நண்பரின் முகத்தை, முடியை , உடையை வைத்து எடைபோடாமல் இந்த நட்பினால் தம் பிள்ளைக்கு மனித நேயம் மற்றும் ஏதேனும் துறையில் ஆர்வம் ஆற்றல் கூடுகிறதா என்று பார்த்து அதைப்பற்றிப்பேச வேண்டும்.

சுமூகமான சுகமான குடும்ப உறவில் எந்த விஷயமும் மறைக்கப்படாது அவசியமில்லை.

மறைக்கப்படாது அவசியமில்லை. ஆனால் எப்படி நடந்துகொண்டால் பிரச்சினைகள் குறையும். பாசம் வராவிட்டாலும் இணக்கம் கூடும் என்பதைச் சில மனவியல் ஆய்வுகள் பட்டியலிட்டுள்ளன.

''வயசுக்கு வந்த....'' என்ற அடைமொழியோடு அழைக்கப்படும் பதினாறு வயது தாண்டிய பிள்ளைகளிடம் பெற்றோர் அன்பை அக்கறையைக் காட்ட வேண்டும். உடலின் மாற்றங்களை அங்கீகரிக்க வேண்டும். பிள்ளைகளிடம் கருத்துக் கேட்க வேண்டும். கருத்து ஒத்து வராதிருந்தால் விவாதிக்க வேண்டும். பிள்ளைகளின் நண்பர்களையும் பண்போடு நடத்த வேண்டும்.வருங்கால திட்டங்களைப் பற்றி சேர்ந்தே முடிவெடுக்க வேண்டும். அவர்களது பாலின உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மானுட வளர்ச்சியின் ஒருகட்டம் பாலின உணர்ச்சிகளின் வேகம். இளம் பருவத்தில் சுய இன்பம் அந்த உணர்ச்சிகளுக்கு வடிகால். அதில் ஈடுபடுவதால் மருத்துவ• ரீதியாக எந்தச் சிக்கலும் வராது. காலங்காலமாய் உள்ள மூட நம்பிக்கைகளால் இதனால்தான் இவனால் படிக்க முடியவில்லை என்றெல்லாம் உளறுவதைப் பெற்றோர் தவிர்க்க வேண்டும். மேலும் இது அந்த இளம்பிள்ளையின் அந்தரங்கம்- அதைமதித்து -அது குறித்து பிள்ளையிடம் குற்ற உணர்வோ குழப்பமோ இருந்தால் அதையும் தெளிவாக்குவது பெற்றோர் கடமை. இதற்கு அவர்களது அந்த வயதை நினைவுபடுத்திக்கொண்டால் போதும்.

இதன் அடுத்த கட்டம் இரண்டு வகைகளில் அமையும். வேலை-திருமணம். வேலைக்கு ஆரம்பம் கல்வி. அதைத் தேர்ந்தெடுக்கப் பிள்ளைக்குப்போதுமான பக்குவம் இல்லை என்றால் உதவ வேண்டும். திருமணம் என்பதிலும் துணையைத் தேர்ந்தெடுப்பதில் நாட்டமில்லை என்றால்தான் அதில்தலையிட வேண்டும். தம் பெருமைக்காகப் பிள்ளையின் பட்டப்படிப்பை, வேலையை , வாழக்கைத்துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையோ நியாயமோ பெற்றவர்க்கு கிடையாது: அதே நேரம் பிள்ளைகளின் தேர்வு என்று தெளிவாய்த் தெரிந்தால்,அவர்களது சிந்தையிலும் தெளிவுண்டாகப் பொறுமையுடனும் நிதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

இதேபோல இளைஞர்கள் பெற்றோர்களிடம் எப்படி நடந்துகொண்டால் நல்ல உறவு அமையும் என்றும் ஆய்வுகள் நடந்துள்ளன. அதன்படி முதலில் பெரியவர்கள் என்ற முறையில் வாழ்க்கையை நமக்கு முன்னால் கடந்தவர்கள் அனுபவித்தவர்கள் என்ற மரியாதையைப் பெற்றோருக்குத் தரவேண்டும். மரியாதையும் மிக எளிய வெளிப்பாடு. அவர்கள் சொல்வதைப் பொறுமையுடன் கவனிப்பதுதான். (பொறுமையுடன் கேட்பதாலேயே அதைத்தான் பின்பற்ற வேண்டும் என்பது அவசிமில்லை.) அவர்களோடு அன்றாட விஷயங்களையும் பேச வேண்டும். அன்பை. அக்கறையைக் காட்ட வேண்டும். அவர்களது நம்பிக்கைக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். அவர்கள்மீது நம்பிக்கை வேண்டும். இனிமையான உறவு பெற்றோரிடம் இருந்தால் காதலைப்பற்றியும் பேச முடியும். இளைஞர்களில் பலருக்கும் வேகம் இருக்கும் அளவு தெளிவிருப பதில்லை- அதனால் பெற்றோரின் முடிவுகளை ஆராய்ந்து, அவகாசம் எடுத்து சிந்தித்துப் பிறகு மறுப்பதா ஏற்பதா என்று முடிவுசெய்ய வேண்டும். முடிவு எடுத்த பின் மாறக்கூடாது. மிகமிக முக்கியமாகப் பெற்றோர் பிள்ளை உறவைப் பலப்படுத்தும் விஷயத்தை வள்ளுவர் கூறியிருக்கிறார். ''தன்னை சான்றோன் எனக் கேட்டதாய் தன்னைப்பெற தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்'' வரும்படி இளைஞர்கள் வெற்றிபெற வேண்டும். மகனோ, மகளோ எந்தப் பட்டம், பதவி,பரிசு பெற்றாலும் தாய்-தந்தைக்கு உள்ளுக்குள் அவர்கள் குழந்தைகள தான். இதனாலேயே சிக்கல், இதனாலேயே இன்பம். இதைப் புரிந்துகொண்டால் இருதரப்புக்கும் ஆரோக்கியமான சுகமான உறவாக அமையும். ♦

**டொக்டர் ருத்ரன்**

* நன்றி- உறவுகள்




# அவன் இயக்கம்

மாயா

முழுமையாகப் பதினைஞ்சு வருசம்- இடையில நான் அவனைப் பார்த்தனான். அதைக் கழிச்சா.... பதின்மூண்டு வருசம். பதின்மூண்டுவருசத்துக்குப் பிறகு நான் வீட்ட போறன்.

சுழிக்காத்துல எம்புட்ட சருகுகள் போல 'எவ்வளவு கெதியா திக்குத் திக்கா பிரிஞ்சுபோனம்- இப்ப இப்பிடி வீட்ட போவன் எண்டு நான் கனவிலும் கருதயில்லை.

என்னைப் பொறுத்தவரையில் என்ன சொந்த ஊரைப் பொறுத்த வரையில நான் செத்துப்போனன். ஆவியாப் போய் ஊரைப்பாக்கிற தோடை சரி. கடிதத்தொடர்புகூட இல்லாம ஊரோட தங்கிப் போன ஒரு மகனை, நான் பார்ப்பனோ,அம்மா வருத்தமாக் கிடக்க, என்னைக் குளிக்கவாத்து சோறு தீத்தி நித்திரையாக்கி, போற இடமெல்லாங் கொண்டே பக்கத்தில வச்சுக் கொண்டு வேலை செய்த அப்புவை தள்ளாத வயதில போய் வச்சுத்தாங்க வேணுமெண்ட ஆசை நிறைவேறுமோ- எண்ட கன எண்ணம் எனக்கு.

நாளாந்தம் எங்கட கற்பனையளுக்கு வடிவங்குடுத்து அதை மனக்கண்ணிலை திருப்பித் திருப்பி போட்டுப் பாத்தா - அந்த எண்ணம் நிறைவேறுமாம். உளவியல் தத்துவ மேதையளும் யோகம்போகம் ரோகம் எண்ட நூலை எழுதின ஒரு சுவாமியும் சொன்னதை தேவவாக்காக எடுத்துக்கொண்டு தினந்தினம் காலம பிரச்சாரகாறர் பாட்டுப் போடமுதல் எழும்பி- கண்ணை மூடிக்கொண்டு நான் கற்பனையில வெளிக்கிடுவன்- என்ர எம்டி நைண்டி மோட்டச் சயிக்கில் வவுனியாக் கடைத்தெருவைக் கடந்து றோயல் தியேட்டரடியால விர்ரெண்டு போகும். அறிஞ்சாக்களைப் பார்த்து தலையாட்டுவன். நேர அப்புவெட்டப் போவன். அப்பு எண்ணைக் கண்ட வுடன் அழுவார். நான் கட்டிப் பிடிச்சுஆறுதல் சொல்லுவன். அப்பிடியே மூத்த மகனிட்ட போவன்- அவன் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடிப்பான். இல்லை நான் அவனைக் கட்டிப்பிடிப்பன்.அஹா- ரெண்டு பேரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடிப்பம். எங்கட பிலாமரத் துக்குக் கீழ போய் நிப்பன். கிணத்தில தண்ணி அள்ளுவன். கொய்யாக்காய் பிடுங்குவன். பக்கத்து வீட்டுப் பொண்டுகள் என்னைப் பார்க்க ஓடி வருவினம். "அக்கா எங்கையக்கா பிள்ளையள் வரயில்லையே" எண்டு கேப்பினம். அந்தக் கேள்வியோட கண்ணைத் திறந்திடுவன்.

மூத்தவன் ஆறேழு வரியத்துக்கு முதல் எனக்கெழுதின கடுதாசி கசங்கி எழுத்தழிஞ்சுபோய் கிடக்கும். அதை எடுத்துப் பாப்பன். "அம்மா எப்பிடியம்மா தாங்குவாய், சீரோடு வாழ்ந்து வேரோடு சாய்ந்துபோன வாழ்க்கையை... எப்பிடி தாங்குவாய்..."

ம்... தாங்குறனடா தாங்குறன். தாங்கத்தானே வேணும்.

"நாங்கள் ஆருக்கம்மா கொடுமை செய்தம். அம்மா எனக்கு உன்னைப் பாக்கோணும். அதுக்காவாவது நான் உயிரோட இருப்பன்."

நான் வெளிக்கிட்ட இந்த பதினைஞ்சு வரியத்துக்க அஞ்ஞாத வாசமிருந்த ரெண்டைக் கழிச்சா பதின்மூன்று வரியத்தில.. ஊர் எப்பிடியிருக்கும். எண்டதவிட எந்தப் பிள்ளையளக் காப்பாத்த வேணுமெண்டு ஓடி வந்தேனோ அந்தப் பிள்ளையள்.... இப்ப என்னட்ட இல்லை.

இதெல்லாம் ஊரறிஞ்ச விசயம். நான் வரப் போறனெண்டு எல்லாருக்கும்தெரியும். 'ஆனா நான் போகயில்லை. தெரிஞ்ச உறவுகளெல்லாம் தேடி வருது. ஊருக்குள்ள ஒவ்வொரு வீட்டிலும் விருந்தாளியள். பிள்ளையளப் பாக்க வந்தவை தெரிஞ்சவை தெரியாதவை யெண்டில்ல வன்னிச்சனம்- வந்தவர்களை பங்குபோட்டு உபசரிச்சுதுகள். யாழ்ப்பாணத்தால தம்பி வந்திருக்கிறான். மன்னாரால மாமா வந்திருக்கிறார், திருகோணமலையால அக்கா வந்திருக்கிறா எண்டு ஒவ்வொருவரும் சொல்ல என்ர வீட்ட மட்டும் ... என்னை தேடி ஒருவரும் வரவில்லை. எண்டைக்கோ வேண்டாமெண்டு ஒதுக்கிப்போட்டு வந்த என்ர மனிசன் பிள்ளயளைப் பாக்க வந்திருக்கு.

காலம் வேகமாக ஓடுறமாதிரி தெரியுது. கலத்தால ஆகாத மாற்றம் ஒண்டுமில்லை. குப்பை மேட்டைக் கோபுரமாயும் கோபுரத்தை குப்பை மேடாயும் மாத்தும். ஆண்டவன் அடிமையாவான் அடிமை ஆண்டவனாவான். அதுபோலதான்.... இதுகும். நினையாப் பிரகாரம் நடந்துபோச்சு.

நேராப் போறன் குண்டும் குழியுமாக் கிடந்த ரோட்டு தாராலமெழுகியிருக்கு வீடு அடையாளம் பிடிக்கேலாம கிடக்கு படலைக்குப் போய் இறங்கினதுதான் தாமதம் மருமோள் ஓடிவந்து கட்டி அழுகிறாள். எனக்கு அழுகை வரயில்ல.. அழாதபிள்ளை அழாதையெண்டு- அவளைத் தேற்றுறன். பேரப் பிள்ளையள் ரெண்டும் மலைச்சுப் போய் நிக்குதுகள். மகன்...

" இப்பதான் கடைக்குப் போனார் வந்திடுவார்..." மருமகள் தேத்தண்ணி யூத்துறதுக்கிடையில அக்கம் பக்கமிருந்து சனம் வரத் துவங்கீற்றுது. முதல் கட்டியழுகை அதுக்குப் பிறகுதான் கதை. மருமகள் பேரப் பிள்ளையள் கதைக்க இடமில்லை. வந்த சனந்தான் கதைக்குது.

" மகன்... வந்திட்டான், அ... என்ன இது எனக்குமனமெல்லாம் டக்கெண்டு கொதியேறுது மெலிஞ்சு-கறுத்து- முன்வாயில ரெண்டு பல்லில்ல வாயப் பொத்திக்கொண்டு கிட்டவாறான். என்ர கண்ணிரண்டும் மின்னுது. கலங்கிக்கிடக்கு . எனக்கும் "வாடா பக்கத்தில.." எண்டு நான் சொல்ல முதலே என்னோட வந்து உரஞ்சிக்கொண்டிருக்கிறான். ரெண்டு பேரும் கதைக்கயில்லை.

அவன்ர தேகத்தில, வாயிலயிருந்து எனக்கு பதின்மூண்டு வருசமா மறந்து போயிருந்த அந்த வாடை வருது.நான் அதைப்பற்றி ஒண்டும் கேக்கயில்லை. கொஞ்ச நேரம் அப்பிடியே இருந்தவன்" பொறம்மா கறிக்கேதும் வாங்கிக்கொண்டு வாறன்.." எண்டுபோட்டு வெளியால போனான்.

கிணத்தடிக்குப் போன மருமகள் வந்து "போட்டாரா" எண்டாள். சரி இண்டைக்கு அம்மாவைக் கண்ட சந்தோசத்துக்கு அடிக்கப்போறார் போல" என்றாள். நான் என்னத்த சொல்லுறது. அப்பு எங்கையெண்டு கேட்டன். அவர் பேரனோட போட்டார். அப்பிடியெண்டாமகள் வீட்டில கொஞ்சநாளிருந்தார். அவள் பிடிச்சு ரோட்டில விட்டிட்டாள். பிறகு நாங்கள் கொண்டு வந்து வச்சிருந்தம். இஞ்ச வச்சிருக்க வச்சிருக்க வந்து ஒரே சண்டை பொலிசுக்கும் பொடியளுக்கும் எழுதிப்போட்டுப்போட்டு இவரைக் கொண்டே எத்தினதரம் அடிச்சாங்கள். மாமி இவர் வந்தா ஒருக்கா சட்டையைக் கழட்டிப்போட்டுப் பாருங்க. தலையைப் பிரிச்சுப்பாருங்க. எத்தின வெட்டுக்காயம். கையைப்பாருங்க எத்தின குத்துக்காயம். உந்த பல்லென்ன நடந்தது. கேட்டுப்பாருங்க. உங்கட பிள்ளையை உங்களட்ட உயிரோட தருவனோ எண்டு நான் நினைக்கவேயில்லை. அப்புவப் பாக்கிறதால காணியெல்லாம் ஆளப்போறனெண்டு- கட்டிவைச்சு அடிச்சு தலையெல்லாங் கொத்தி ரத்தமா சொரிஞ்சுது. எப்படியோ கையைத்தேச்சு தேச்சு கட்ட அவுத்துக் கொண்டு இழுத்திழுத்து வந்தார் மாமி. பாக்கேலாது. ராசாவ நான் எத்தின இடந்திரிஞ்சு வாகனம்பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனான். "மாமி அவங்கள் அடிக்க அடிக்க வேதனை தாங்கமாட்டாம, உங்களையும் இனிமேல் பார்க்க மாட்டனெண்டு சொல்லிச்சொல்லி குடிக்கத்துவங்கினார். இந்தக் குடியால கோபம் கூடினா வெறிபிடிச்சு என்னை அடிப்பார். பிள்ளையள அடிப்பார். விம்மி விம்மி அழுதழுது அவள் விவரிக்க விவரிக்க எனக்குள்ள ஏதோ மெழுகுமலை கிடந்து தீப்பிடிச்சு எரியுது. எரிய எரிய அது உருகுது.

மகன் வந்திட்டான்- தம்பி நான் அப்புவப் பாத்திட்டு வாறன்- எண்டன். "நீ தனியப் போக வேண்டாம் நான் கூட்டிக்கொண்டு போறன்" எண்டான்- ரெண்டு பக்கமும் மிதிகட்டை(பெடல்) இல்லாத சைக்கிள் பலகைக் கரியலில என்னை ஏத்திக் கொண்டு ஒரு கட்டைக்கங்கால இருக்கிற அப்பு வட்ட கொண்டு போறான்- அம்மா நீ கடவைக்க நில். நான்போய் முதல் சொல்லுறன் - திடீரெண்டு உன்னைக்கண்டா மூச்சுப் போயிரும்' எண்டபடி முன்னுக்குப் போனான்.


''அப்பு நல்ல சிவலையா இருக்கிறார்- நல்லா மெலிஞ்சு போய், இருக்கிறார். என் னைக் கண்டவுடன வெப்பியாரம் வந்திட்டுது. எனக்கார் இருக்கினமெண்டு விட்டிட்டுப் போன நீ. இனிமே என்ன விட்டுட்டுப் போகாதை- அழுறார். 'இல்லயப்பு நான் அடிக்கடிவாறன் தம்பியோட இரு எண்டு தேற்றுறன். அழுகிறா எல்லாரும் காணிய வச்சுத்தான் கஞ்சி வாக்கிறாங்கள். என்னை ஏமாத்தி காணி உறுதியெல்லாம் கொண்டு போட்டான்"


காணி,காணி.நிலம்,மண் அப்புவுக்குத் தன்ர காணி முக்கியம். அது அவர் தன்ர கையால காடுவெட்டி தானே திருத்தி காணியாக்கினது. அதைவிட்டிட்டு வரமாட்டனெண்டுதானே என்னோட வராம நிண்டவர்.

மகன் மூத்தவன் என்னை ஏமாத்திக்கொண்டு திரும்பிவாற நேரம் "அம்மா உன்னைப்பார்ப்பனெண்டு நினைக்கவேயில்லை. இந்தியாவுக்குப் போனவைய எண்டாலும் ஒரு காலத்தில பார்க்கலாம் எண்டு நம்பினம்-ஆனா உங்களை ... குரல் தளும்புது.

என்னை விட்டிட்டு அவன் போய் குடிச்சிட்டு வந்தான் குசினிக்க மருமோள் குசுகுசுவெண்டு பேசுறாள். அம்மா எத்தின வருசத்துக்குப் பிறகு வந்தவ. இண்டைக்காவது குடிக்காம இருந்தா என்ன?அவன் கேட்டாத்தானே. 'ரேடியோவப்போடு ' எண்டான். 'என்ன சத்தம் இந்த நேரம்' எண்ட புன்னகை மன்னன் படத்து அடி. அவன்ர நல்ல செய்தி-இவள் ஜெயலலிதா என்னத்துக்கு குதிக்கிறாள். அம்மா இப்ப உள்ளவங்கள் எல்லாம் உழைப்புக்காகத்தான். இப்ப சனநாயகமே நடக்குது. - பணநாயகந்தான் கதையில அந்த கதையை உனக்கு பிடிக்கும். பாலகுமாரன்ர முதல்முதல் நல்லா இருந்தது. இப்ப வேலையில்ல. பிரபஞ்சன்ர எனக்குப் பிடிக்கும். எனக்கம்மா குடிக்காம இருக்கிறண்டா... புத்தகம்வேணும். நீ சொல்லுறாய் அப்பு நெடுகச் சொல்லுவார் நீ இருக்கேக்க தனக்குப் புத்தகத் துக்கே குறைவில்லையாம் எண்டு.

மருமோள் கிட்டவந்து கொஞ்ச நேரம் இருந்தாள். நீங்க என்னமாமி பொறுமையா இந்த அலட்டலெல்லாங் கேட்டுக் கொண்டிருக் கிறியள் எண்டாள். மெய்தான்- மழலைப் பருவத்தில் கேட்டதுபோல நான் என்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்தன்.




"அம்மா என்னோட படுக்கிறியே..."

"ம்...சரி தள்ளிப்படு. அந்தப் பாயில் அவனோட படுத்திட்டன். ஆள் கதைச்சுக் கொண்டே நித்திரையாப் போனான். அதுக்குப் பிறகு வீட்டுக்குள்ள மருமோளுக்கும் பேத்திக்கும் இடையில கிடந்தன். சரி. மருமோள் துவங்கினாள். மகன்ர கதையில கிடந்த கீறிட்ட இடங்களை அவள் நிரப்பினாள். அவளின்ர தாய் தேப்பன் சகோதரமெல்லாம் இந்தியாவுக்குப் போயிற்றினம். இவள் புருசனத்தான் பெருசெண்டு இஞ்சையே நிண்டவள். எத்தினயோதரம் எத்தினபேரின்ர கால்ல விழாதகுறையா இவனைக்காப்பாத்தி வச்சிருக்கிறவள். வன்னியில இருந்து நாங்கள் பட்டதெல்லாம் தூசுபோல எனக்குத் தெரியுது. என்ர பிள்ளை அனாதையா மூண்டுமாசம் எரிகாயங்களோட ஆஸ்பத்திரியில உயிருக்குப் போராடி இருக்கிறான். அவன் அம்மா அம்மா எண்டு வேதனையில கத்தின நேரம்... நான் சந்தோசமா சாப்பிட்டு போட்டு...

"அம்மா உனக்கு நினைவிருக்கே எங்கட சந்திரு உந்தப் பாட்ட எவ்வளவு வடிவாப் பாடுவான்- சின்னமாமா என்ன சுப்பரா புல்லாங்குழல் வாசிப்பார். இப்ப ரெண்டு பேரும்.... இல்லை. அம்மா சின்னவன் செத்த நேரம்... நாங்கள் ஒண்டுஞ் செய்யேலாமப் போய்ச்சு."

"ம்..."

அம்மா...எல்லாம்... எங்கட விதியெண்டு விடலாமே. அக்கா தங்கச்சி உறவுகளே என்னைக் கொல்லப் பாத்தவை. உனக்கு நினைவிருக்கே - ஏழெட்டு வருசத்துக்கு முதல் ஒரு கடிதம் போட்டநீ- கழுத்துறையில உள்ளவன் கூட தாய்க்கு கடிதம் போடுறான். நீயொரு கடிதம் போட்டா எண்ணண்டு. போட்டிருந்தாய்... என்னைக் கழுத்துறையிலதான வந்து பார்த்திருப்பாய். இப்ப மட்டுமென்ன நான் காகக்கூட்டில இட்ட குயில் முட்ட. இப்ப தாயக்கண்டிட்டன். ஆனா திரும்பவும் முட்டையிட காகக்கூட்டுக்குத்தான் போகவேணும்.

"சரி சரி.. காணும் அம்மாவப் படுக்கவிடுங்க. மருமோள் அதட்டுமாப்போல சொல்லுறாள். இப்படியே மெல்ல மெல்ல கதைச்சு சண்டையும் வந்திட்டுது. பேரப்பிள்ளையள் படுத்திட்டினம்.

"சரி,சரி படுங்கோ..."

அடுத்தநாள் முழுவதும் அவன் பேசிக்கொண்டிருந்தான். பதின்மூன்று வருடங்களாக அவன் பேச நினைத்ததை , பட்ட துன்பத்தை கையாலாகாதவனாய் கதறித் துடிக்கத் தன்னைக் கட்டிவைத்து அடித்தவர்கள் கைலாயம்போன கதையும் கூட சொன்னான். அம்மா..இப்ப வருகினம் உன்னைப் பாக்க. இவயளப்பற்றி நம்பாதை. இப்படியே பேசிக்கொண்டிருந்து கதை , அரசியலுக்குத் திரும்பிச்சு. அம்மா... கதிர்காமர் சுத்தாத இடமில்லை கடன்வாங்க ஏலாமப் போச்சு. இப்ப டிரோன் பொன்னாண்டோ வாங்கிப்போடுவாரோ- இல்லாட்டி எங்கயாவது என்னவிட்டா ஆளில்லயெண்டு அரசியல் பேசிக்கொண்டிருப்பானோ. தன்னந்தனியான அவ்னை அடைச்சு வைச்சுவயரை முறுக்கியும், எஸ்லோன் பைப்புகளாலும் முதுகுப்பட்டை கிழம்ப அடிச்சுத் துவைச்ச நேரம், நான் இயக்க வேலைகளின்ர திறமைக்காக பாராட்டுப் பெற்றிருப்பனோ. பல்லுகளைக் கத்தியாலயே கொத்தி உடைச்ச நேரம் வேதனையின்ர உச்சத்தில அவன் துடிச்ச நேரம் பொலிஸ் நிலையங்களுக்க கொண்டே கொண்டே போட்டநேரம்..நான் ..அவன்ர தம்பிமார்.... தேசத்தின் மாவீரனாய் போராளிகளாய் ஊர்போற்ற பேரும் புகழுமாய்...

அடுத்த நாள் தம்பி லீவில வாறான் என்ர குஞ்சு. இண்டைக்கு குடிக்காதை அவன் இயக்கமடா.." எண்டு சொன்னன்.


"ஏன்" எண்டான்.

"நான் அம்மா.... பரவாயில்ல.. அவன் இயக்கமடா. அவனுக்கு முன்னால குடிக்கிறது அவனுக்கு மரியதையில்லயடா.." எண்டன் அவன் கொஞ்ச நேரம் பேசாம இருந்தவன் பிறகு அழத்துவங்கினான்.

"அப்ப... அவன்தான் உனக்குப் பெரிசு. அம்மா தம்பி எனக்கும்பெரிசுதான். ஆனா... நீங்கள் இயக்கத்தில இருந்ததால அந்தப் பெருமையையும் புகழையும் அவங்கள் அனுபவிச்சவங்கள். நான்...நான்.. என்ர மேலப்பாரம்மா. எத்தின தழும்பு வரிவரியா எத்தின? எரிஞ்சு போய்க்கிடக்கிற உடம்பைப்பாரம்மா- நீங்கள் இயக்கத்துக்குப் போனதால செத்துப்போனான் ஒருத்தன். நான் செத்துப்போகேல்ல. நீங்கள் வீரத்தைச் சுமந்தியள் நாங்கள் வேதனையைச் சுமந்தம்'' அவன் வெறியில கதைக்கேல்ல. ○

# நூல்நோக்கு



நூலின் பெயர் :- எழுகதிர்
வெளியீடு :- மகளிர் மருத்துவப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

இம் மண்ணுக்காய் களத்திலே போராடி உயிர் நீத்த அனைத்து மாவீரர்களுக்கும் சமர்ப்பணமாக 'எழுகதிர்' (ஆவணி-2002) எனும் பல்சுவைப் படைப்புகள் அடங்கிய இரண்டாவது சஞ்சிகையொன்றை தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் மருத்துவப் பிரிவு வெளியிட்டுள்ளது.

கள அனுபவங்களைத் தமதாக்கிக் கொண்ட போராளிகள் ஒவ்வொருவரினதும் மன உணர்வுகளின் வெளிப்பாடாக வெளிவந்துள்ள இச் சஞ்சிகை, எட்டுக்கவிதைகளையும், மூன்று சிறுகதைகளையும், ஒரு மருத்துவக்கட்டுரை மற்றும் வருணைக்கட்டுரையோடு சிறிலங்கா இராணுவத்தினர் தமிழீழத்தில் உள்ள பகுதிகள் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமான குறிப்புக்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது.

தலைவர் அவர்களின் சிந்தனைத்துளியொன்றைத் தாங்கியபடி, ஓவியர் போராளி மருதா அவர்களின் அட்டைப்பட ஓவியத்துடன் வெளிவந்த இந்த 'எழுகதிர்' சஞ்சிகையானது, ஒரு காலத்தின் பதிவாக இருக்கின்ற கள அனுபவங்களைச் சொல்லுகின்ற யதார்த்தத்தை எவரும் மறுதலிக்க முடியாத ஓர் ஆவணமாக கொள்ளத்தக்க தாகவே முடியும்.

இச்சஞ்சிகையில் உள்ள படைப்புக்கள் அனைத்தையும் தரம்/தரமற்றது என்ற விவாதத்துக்கு அப்பால் நின்று நோக்குமிடத்து, போராளிகள் யாரோ எவரோ ஆயினும், இலக்கியத்துறையில் நன்கு பரிச்சயமற்றவர்களாக இருப்பினும், அவர்கள் கூற வந்த தமது எண்ணக்கருவோட்டங்களை அவதானிக்கும் போது எங்கோ ஒரு மூலையில் அவர்களின் ஆளுமைக்கான 'ஒருசிறுபொறி' தெறிப்பதைக் காணக் கூடியதாகவே இருக்கிறது.

அவலமும், அவலம் சார்ந்த வாழ்வோடும் ஐக்கியப்பட்டுப் போன மக்களோடு ஒன்றாகி வாழ்பவர்கள்தான் நமது போராளிகள். சமூகவாழ்வில் தரிசிக்கும் அந்த அவலங்களோடு கள அனுபவங்களையும் இரண்டறக்கலந்து, தமது எண்ணங்களை அவர்கள் வெளிப்படுத்துகையில் அவரவர் அனுபவத்துக்கும், அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வகையிலேயே படைப்புக்கள் உருவாகியுள்ளதைக் நாம் இந்த 'எழுகதிர்' சஞ்சிகையில் காணக்கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக-

"அன்றொருநாள் எம்முடன்
இதே வீதியால்
நீங்களும் நடந்தீர்கள்.
எதிரியவனின் கொடூரச்செயலை
உங்கள்
கண்முன்னே பார்த்தீர்கள்.
இன்று;
உங்கள் புதைகுழிகளின் அருகே
நாம் மீண்டும் நடக்கின்றோம்" என 'தாயவளை மீட்கவென்று...' எனும் கவிதையில் போராளி சர்மி என்பவர் மாவீரர்களாகிப் போன தனது சக போராளிகளின் இனிய நினைவுகளைச் சுமந்தபடி இரைமீட்பதும்-

"செல்லுவோம் உங்களின் வழியிலே
ஆக்குவோம் தமிழீழம் நாளையே
அதில்
ஏற்றுவோம் புலிக்கொடி
உங்களின் நினைவுடனே..." என்று 'நீங்கள் ஆடிய பணியும் ஆடிய களங்களும்' எனும் கவிதையில் போராளி தாரகை, மாவீரர்கள் விட்டுச்சென்ற பணியை அவர்களின் வழியிலே சென்று, அவர்களின் கனவை நனவாக்குவது பற்றியும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார்.

இதுதவிர,

"அப்பா எங்கே என்று கேட்டால்,
செம்மணிப் புதைகுழியில் என்றும்
அம்மா எங்கே என்றால்,
மிருசுவில் புதைகுழியில் என்றும்
அண்ணா எங்கே என்றால்
வெலிக்கடைச் சிறையிலும் என்று சொல்லி...'

கடந்த காலத்தில் தமிழ் இனத்துக்கு ஏற்பட்ட சவப்புதைகுழிகளையும் சிறைக்கூட நினைவுகளையும் நம் கண்முன்னே இச்சிறு கவிவரிகள் மூலம் கொண்டு வருகிறார் போராளி இளங்கவி.

இவர்களைப் போலவே போராளிகளான இசைவேங்கை, வைகறை, திலகா, வேங்கை, வஞ்சி, அ.புதுமகள், மதிவதனி, ஈழவாணிமற்றும் குயில் போன்றவர்களின் படைப்புகளும் அவர்களுக்குள்ளான மனவோட்டங்களையும் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் வெளிப்பாடாக தெளிவு படுத்திக் காட்டுகின்றன.

அதிலும், போராளி குயில் என்பவர் எழுதிய 'வெற்றிச் செய்தியுள் நுழைந்த வேதனை ஒலிகள்' எனும் படைப்பானது 'ஓயாதஅலைகள்' நடவடிக்கையின் போது ஏற்பட்ட உண்மைச் சம்பவங்களின் ஒரு பகுதியாக சித்திகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, வைத்தியகலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் அவர்களின் 'சின்னமுத்து' நோய் பற்றியதான கட்டுரை நல்ல பயனுள்ளதொன்றாக அமைவதோடு, போராளி மதிவதனி எழுதிய சிறிலங்கா இராணுவத்தினரின் தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கை கள் ஆரம்பமான தினங்களானது கட்டுரையாளர்களுக்கு பயன்படக் கூடிய தரவுகளாக அமைந்துள்ளன.

எழுத்துத் துறையில் இலைமறைகாயாக இருக்கும் ஆற்றல் உள்ள போராளிகளை இப்படியாக வெளிக்கொணர்வது பாராட்டப்பட வேண்டியதொரு விடயம் எனினும், அவர்களை ஊக்குவிப்பதும் வாசிப்புத் தேடலுக்கான வழி மற்றும் வசதிகளைச் செய்து கொடுப்பதும் அவசியமானதாகவே கருதப்படல் வேண்டும்.

**-அம்மான்-**

இச்சஞ்சிகையில் போராளி வேங்கை என்பவர், தனது 'காத்திருந்து காத்திருந்து' எனும் கவிதையில்

"கவி எழுதிக் கவி எழுதிக்
கட்டுக்கட்டாய்
சேர்த்து வைப்பாய்...
............
கதறுகிறோம் கதறுகிறோம்
கண் விழித்துப் பார்க்காமல்
கல்லறையில் உறங்குகின்றாய்
நீ."

-என கவிதைத்துறையில் ஆற்றல் உள்ள ஒரு போராளி நிறையக் கவிதைகளை எழுதிவைத்துவிட்டு, அவர் மாவீரராகிப் போன துயர நிகழ்வை தனக்குள் நினைத்து வேதனைப்படுவதான நிகழ்வுகளை 'எழுகதிர்' ஓரளவு தவிர்த்திருக்கின்றது என்றே கூறலாம்.

மேலும், இச்சஞ்சிகை முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்டிருப்பதோடு (பக்கங்கள் குறிப்பிடப்படவில்லை) அட்டைப் படமும் அதன் வண்ணமும் நன்றாகவே அமைந்திருக்கின்றன.

அத்தோடு, இச்சஞ்சிகையில் உள்ள சில குறைபாடுகளையும் எடுத்துக்காட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

படைப்புக்களில் ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சில எழுத்துப்பிழைகள் தவிர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். போராளி வைகறையின் 'ஏன் இப்படி...?' எனும் கவிதைக்குரிய சில வரிகளை கவிதை அமைப்பில் எழுதியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். பக்கங்கள் (இலக்கம்) கவனிக்கப்படவில்லை. சிறுகதைக்கான உரையாடல்களுக்கு பந்தி பிரித்து 'மேற்கோள்' அடையாளம் போடப்படவில்லை.

இவ்வாறாக சில குறைபாடுகள் இருப்பினும், இனிவரும் சஞ்சிகையில் இக்குறைபாடுகள் நீக்கப்படும் என எதிர்பார்ப்பதோடு, போராளிகளின் மன உணர்வுகளை வெளிக்கொணர்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் மருத்துவப் பிரிவினர் எடுத்த முயற்சி என்றும் பாராட்டப்படக் கூடியதொரு விடயமாகும். ☆

# சிறைப்பறவை



♦ப்ரியா ஜெயக்குமார்

விம்மல்களின் ஊடே எழும் எனது துயர
நினைவுகள் காலங்களை உண்ணுகிறது.
நினைவுப் பாதையில் பின்னோக்கி நகரும் ஞாபகங்கள்
துன்பச் சுழியுள் சுழலும்.
ஏடுகளற்று வெறுமையால் தொங்குகிறது
மனசின் உள்ளே நாட்காட்டி.

மழைக்காலமொன்றின் அந்தகால இருளில்
தட்டப்பட்டது என்னுடைய செவிப்பறை,
பூட்டப்பட்டிருந்த கதவுகளும் யன்னலும்
மௌனமாய் அழுதன.
அவற்றிற்கு வெளியே சப்பாத்துக்களின் உறுமல்.
சட்டென உறைந்து போனது
சில்வண்டுகளின் சத்தம்.
கணப்பொழுதில் உறைந்து போன எனது
காலத்தின் வெளியில் ஆட்காட்டியொன்றின் ஓலம்.

துப்பாக்கி முனைகள்
கனவுகளையும் கற்பனைகளையும் மேவி
என்னுள் நிரந்தரமாய் திணித்தன ஒரு
பயங்கரக் கனவை.
கம்பிகளின் நடுவே கனவின் ஆழச்சுவர்களில்
மோதித் தெறித்து பெருகின அவலச் சொற்கள்.
அவற்றிற்கிடையே வாய்கள் முணுமுணுத்த
மங்கள வேதங்கள் நசிந்தன.
ஆழத்தை நோக்கி இழுத்துச் சென்றது கனவு.

ஆனாலும் என்னைச் சுற்றியும் இப்போது
ஏராளமான குரலொலிகள் கேட்கின்றன.
ஏதோ சொல்ல நினைத்தும்
மௌனமாய் கடக்கிறது காற்று.
உரத்து கேட்கத் தொடங்கி விட்டது
ஒவ்வொரு குரலாய். இப்போது.
"இனிமேல் எல்லோருக்கும் சிறகு
முளைக்கப் போகிறதாம்"
சொற்களை விழுங்க மறுக்கிறது
செவி.

❖

# புரியாத கதை பேசும் புதுக்காற்று



இப்போது
காற்றைப் பற்றியே
கனபேரின் பேச்சுக்கள்.

பூமாலை தாங்கியும்,
புதுவாசம் வீசியும்......
ஏறியிறங்கிப் போகும்
காற்றினூடே.......
கனபேரின் சங்கமங்கள்.

காற்று,
இது பலமுறை வந்துபோன
வாசகமாயினும்,
இப்போ புதிய கதைகொண்டு
வந்ததாய்க் கூறிற்று.
காற்றை நீ நம்புகிறாயா....?
என்னிடம் இதற்கான பதிவேயில்லை.
ஏனெனில் காற்று
இப்படி பலமுறை வந்து
போயிற்று- எம்
மூச்சையும் அள்ளியள்ளிப் போயிற்று,

இப்போதும்
வந்துலவுகிறது. காற்று
அதனுடன்
சாய்ந்து போகின்றனர் பலர்
காய்ந்து போகின்றனர் சிலர்
கவனமாகக் கடக்கின்றனர்
இன்னும் சிலர்.

எனினும் காற்று
கச்சான் கிழவியிடம் சென்று
ஏதோ சொல்லிற்று
அப்படி எதைத்தான்
அது அவளிடம் சொல்லிற்று....?
குடிகளுடன் கூரையும்
கூட நகரக்
கச்சான் கிழவி மட்டும்
ஏன்...? கால வரவிற்காகக்
காத்திருக்கிறாள்.

❖

♦நா. கானகன்

# உருவகக் கதை

# தியாகம்



துருத்தியும் அதன் கர்மயோகம். அந்த யோகம் அதற்குத் தோதுப்படவில்லை. மா ஆக்கினை என்ற அவதியின் உறைப்பு.

'கொல்லா, நீ மா கொடியன்!' துருத்தியின் அவதி முட்டி வெடித்தது.

'எது?' - அவதி கொல்லனையும் பீடித்தது.

'கொலை பஞ்சமா பாவங்களுட் தலையானது. அக் கொலைத் தொழிலுக்கு நீ பூரண உடந்தையன்!'

'உன் குற்றச்சாட்டு முளை கொள்ளும் ஏதுப் பிரமேயம் எதுவோ?'

'இந்த உலைக்களத்திலே நீ கத்திகளையும், வாள்களையும், வேல்களையும் வடித்தெடுக்கின்றாய். இவற்றைப் பற்றும் மானிட மனங்களிலே கொலை உணர்ச்சி மூண்டெழுகின்றது. கர்த்தாவின் கற்பிதங்களைக் கருவிகள் இயற்றக் கொலைகள் மலிகின்றன...'

'கருவிகள் கருவிகளே! அவற்றை வடிக்கும் கருவிகளாகவே நானும் நீயும் இணைந்தோம்...'

'நீயும் கருவியா?'

'அப்படித்தான். இன்னொரு வழியிலே, என்னைக் கர்த்தா என்றும் வைத்துக் கொள்ளலாம். காடுகளை அழித்துக் கழனி நிலமாக்குவதற்கும், சிரமந் தளர்த்திப் பணிதனை இலகுவாக்கி வாழ்வதற்கும், வேண்டிய வேட்டையை இயற்றுவதற்கும், தன்மானத்தையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்துவதற்கும் இந்த ஆயுதங்கள் பயன்படுவன என்பன என் கற்பிதம். இருப்பினும் ஈசன் என்ற கர்த்தாவின் கருவியாகவே நான் உழைக்கின்றேன் என்பதுதான் உண்மை.'

'அப்படியாயின் கருவிகளின் பயனை நீ கற்பித்தாலென்ன?'

'அஃது என் யோகமல்ல. அழுக்காறு - பேராசை - தற்பற்று ஆகிய இழிகுணங்களை மனிதர்கள் தமது யோகங்களாக அநுபவிக்க முந்துகின்றார்கள். விளைவு கொலைகள். யோகநிலை பற்றிய யோகம் ஈசனின் யோகமே!'


'நீ?'

'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே' என்பது வழக்கு. என் கர்மமே என் யோகமும் தவமுமாக நிலைத்தது.'

மறுகணம் துருத்தி காற்றினை மூசி ஊதத் துவங்கிற்று. தான் தனது கர்மயோகத்தைச் சுகிப்பதான மனநிறைவும் அதற்குச் சித்திக்கலாயிற்று! ♦

☆ எம்.ஏ. ரகுமான்

# இளைய நாதம்



## சிறுவர் கதை

## ஆசையின் அழிவு

'பவா' என்ற கோழியும் 'சிவா' என்ற கோழியும் நல்ல நண்பர்கள். இருவரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமாட்டார்கள். எங்கு சென்றாலும் இரு கோழிகளும் ஒன்றாகவே செல்லும்.


ஒரு நாள் 'பவா' என்ற கோழியும் 'சிவா' என்ற கோழியும் தெருவில் நின்று யாரோ கொட்டிய அரிசிகளைக் பொறிக்கிக் கொண்டிருந்தன. அப்போது தெருவால் ஒருவன் வண்டிலில் போய்க் கொண்டிருந்தான். வண்டில் நிறைய கோழிகள் இருந்தன. 'பவா' என்ற கோழிக்கு அந்த வண்டிலைப் பார்க்க ஆசையாக இருந்தது. அந்தக் கோழிகளைப் போல் தானும் வண்டிலில் அல் லது வாகனத்தில் செல்ல வேணும்போல் இருந்தது.

''பார்த்தீரா சிவா .... அந்தக் கோழிகளின் எஜமான் எவளவு நல்லவன். அந்தக் கோழிகளை வண்டிலில் ஏற்றிச் செல்கின்றான். எவ்வளவு சுதந்திரத்தைக் கோழிகளுக்குக் கொடுக்கின்றான். எங்க வீட்டு அம்மா ஒருநாளாவது எங்களை இப்படிச் செய்திருக்கிறாளா....?

கனநேரமா நாங்கள் வெளியில் நின்றால் உடனே பிடித்துக் கூட்டுக்குள் அடைத்து விடுவாள். சில நேரங்களில் கால்களிலும் கட்டிவிடுவாள்.'' என நொந்து சொல்லியது பவ்வாக் கோழி.

''மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து நாங்க்ள ஏன் ஆசைப்படுவான். இந்த வாழ்கை எங்களுக்கு போதும்''. என்றது சிவாக்கோழி.

பவாக்கோழி அந்த வண்டி



லைப்பார்த்த நாளிலிருந்து ஒரே யோசனையில் இருந்தது.

''தான் எப்போது அப்படி ஒரு வண் டிலில் உல்லாசமாய் போவேன்'' என ஆசைகளை வளர்த்து! வளர்த்து சோர்வாகவே இருந்தது- ஒழுங்காகச்சாப்பிடுவதில்லை. சிவாக்கோழியோடு பெரிதாகக் கூடுவதுமில்லை.

வீட்டுக்கார அம்மா பவாக் கோழியைப் பார்த்துப்பார்த்து கவலைப்பட்டாள்.

''கோழிக்கு நோய் பிடித்துவிட்டது. ஒழுங்காய் முட்டைகள் போடுவதில்லை: சோர்ந்து சோர்ந்து படுக்கிறதே ...'' என நினைத்து ஒரு நாள் அந்த வண்டில்காரனுக்கு கோழியை விற்று விட்டாள்.

பவாக்கோழி வண்டிலில் வீசப்பட்டது- காலில் ஏற்பட்ட நோவையும் பவாக்கோழி கவனத்தில் எடுக்கவில்லை. வண்டில் போகப் போக பவாக்கோழிக்கு ஒரே ஆனந்தமாய் இருந்தது. ஏனைய கோழிகள் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரித்தது. மற்றைய கோழிகளை விளையாட்டுக்கு வரும்படி கொண்டைகளில் கொத்தியது.

ஒரு கிழட்டுச் சேவலுக்கு பவாக் கோழியைப்பார்க்க வியப்பாக இருந்தது.


'' நீ ஏன் இப்படி ஆனந்தப் படுகிறாய்- நாங்கள் போகுமிடம் எங்கே என்று தெரியுமா?' எனக் கேட்டது.

'' தெரியவில்லை. எங்கே போகிறோம் சொல்லு'' என்றது பவாக்கோழி.

''எங்களை இறைச்சிக்கடைக்குக் கொண்டு போகிறார்கள்- கொஞ்ச நேரத்தில் நாங்கள் கொல்லப்படுவோம்'' என அழுதது.

பவாக் கோழி ஏங்கிப் போய் விட்டது. எமக்கென்ற வாழ்வை விட்டு வேறு வாழ்வுக்கு ஆசைப் பட்டதாலே தனக்கு இந்த நிலை ஏற்பட்டுவிட்டது என கத்தத் தொடங்கியது.

பிரஷகி



# காலை

காலைப் பொழுதுமலர்ந்தது
கரிய இருளும் கரைந்ததது
ஞாலம் முழுதும் ஒளிர்ந்தது
நன்மை எங்கும் பிறந்தது

பூக்கள் கண்ணைத் திறந்தன
புவியைப் பார்த்துச் சிரித்தன
ஈக்கள் முத்தி மகிழ்ந்தன
இனிதே காலம் கழித்தன

பறவை இனங்கள் விழித்தன
பாடி ஆடிக் கழித்தன
சிறகை விரித்து எழும்பின
இரையைத் தேடி அலைந்தன.

ஆடு மாடு கதறின
அங்கும் இங்கும் சிதறின
ஓடி உணவு தேடின
உண்டு பசியைத் தீர்த்தன

மக்கள் விழித்து எழுந்தனர்
மகிழ்ந்து கூடிப் பிரிந்தனர்
தத்தம் வழியில் கிளம்பினர்
தமது கடமை புரிந்தனர்.

கொக்கூர் கிழார்

# —ரதனும் சுதனும்—



**ரதன்:** சூரியனில் நில அதிர்ச்சி உண்டா?

**சுதன்:** பூமியில் ஏற்படுவது போன்று நில அதிர்ச்சி சூரியனில் ஏற்படுவதில்லை. சூரியனி ன் மையத்தில் 1.5 கோடி டிகிரி கெல்வின் வெப்பநிலையும் மேற்பரப்பில் 6000 டிகிரி கெல்வின் வெப்ப நிலையும், இருக்கின்றன. இந்த வெப்ப நிலையில் எல்லாப்பொருட்களும் வாயு நிலையில்தான் இருக்கும். திண்ம மற்றும் நீர்மநிலையில் உள்ள பொருட்கள் ஏதும் சூரியனில் இல்லை. இதனால் இங்கு சில அதிர்ச்சி ஏற்படுவதில்லை சூரியனின் மேற்பரப்பில் சூரியக்காற்று, சூரியப் புள்ளிகள் போன்று வேறு பல நிகழ்வுகள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

# வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானி



வில் ஹெலம் காண்ராட் ராண்ட்ஜென்

''உனக்கு விசயம் தெரியுமே, அண்டைக்கு சைக்கிளாலை விழுந்தெழும்பி தனக்குப் பெரிசா அடிபடயில்லை எண்டு போட்டு வீட்டைப் போச்சுதே மதுரா, நடக்கமாட்டாமல் காலெல்லாம் நோவும்,சரியான வீக்கமுமாய் ஆளைப் பார்க்கேலாது''!

''ஆ! அப்பிடியே, அப்ப ஒருக்கா எக்ஸ்ரே (X-Ray) எடுத்துப் பார்க்கலாம்தானே''

'வசமா மாட்டினியள் வாங்கோ!, எக்ஸ்ரே எடுக்கவெண்டு வெளிக் கிட்டினம், உந்த 'எக்ஸ்ரேயை' ஆர் கண்டுபிடிச்சது? எப்படிக் கண்டு பிடிச்சது, எண்டெல்லாம் இவைக்கு தெரியுமாமோ?! என்ன சொல்லுறியள் நீங்கள்? தெரிஞ்சிருக்காதுதானே, அப்ப நான் சொல்லட்டேசொல்லுறன் என்ன?


இந்த x இருக்கிறாரெல்லோ,

X-Rayயை கண்டுபிடிச்சதாலை இதுக்கு நான்வைச்ச பெயர் இது. சரிதானே!) இவர் ஒருநாள் , A/L Bio maths படிச்சாக்கள் படிப்பினம்: 'கதோட்டுக்கதிர்' எண்டு அதைவைச்சு பரிசோதனை செய்து கொண்டிருந்தாராம் இந்த எதிர் மின்கதிர்களிலை, ஒரு கண்ணாடிக் குழாயின்ரை ரெண்டு முனைகளிலையும் மின்வாய்களுக்கூடாக ஒரு உயர்ந்த மின்அழுத்தத்தை செலுத்தேக்கை உண்டாகிற 'எதிர்மின் னோட்டம்' இருந்ததாம். ஆனா இது தானாக ஊடுருவும் திறன் அற்றதாக காணப்பட்டதாலை, ரான்ஜென்' கண்ணாடிக்குழாயை ஒரு கறுப்புப் பேப்பராலை சுத்திப் போட்டு பரிசோதனையை செய்து பார்த்தாராம். அப்ப எதிரே இருந்த (இருளிலை ஒளிரும் பிளேட்டினோ சயனைடு எண்ட பொருள் பூசப்பட்டிருந்த) திரையிலை வெளிச்சம் தெரிஞ்சு அங்காலையும் ஊடுருவிப் போனதை அவதானிச்ச இவர் , கண்ணாடிக்குள்ளாலை கண்ணுக்குத்தெரியாத ஏதோ ஒரு கதிர் வீச்சு(Radiotion) வெளிப் பட்டதையும் உணர்ந்தாராம். அதுக் குத்தான் 'எக்ஸ் கதிர்' எண்டு பெயர் வைச்சாராம். கணிதத்திலை தெரியாத ஒண்டுக்கு x எண்டு வைக்கிறது வழமைதானே. அது போலைத்தான் இதுவுமாம்.

இந்த 'எக்ஸ் கதிர்' வேறை பல பொருட்களினூடாகவும் ஊடுருவிச் சென்றதையும் எலும்பின் ஊடாக ஊடறுத்துச் செல்வதையும் இவர் அவதானிச்சாராம். இதுக்காக தன்ரை கையை குழாய்க்கும் திரைக்கும் இடையிலை வைச்சுப் பார்க்க எலும்புமட்டும் தெரிஞ்சுதாம்.

இதற்குப் பிறகு 'எக்ஸ்ரே' பிரபலம் அடைஞ்சதை சொல்லவும் வேணுமோ உங்களுக்கு.


# பேராசை



கொக்கு ஒன்றுக்குப் பயங்கரப் பசி.அது ஆற்றங்கரையில் பறந்து வந்து இருந்தது. ஆவலோடு ஆற்றையே பார்த்தபடியிருந்தது. தவளை ஒன்றைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து பிடித்து காலின் கீழ் வைத்துக் கொண்டது. ஆற்றிலிருந்து மீன்ஒன்றும் துள்ளியது. கொக்கு மீனைப் பிடிக்கவென காலை எடுத்தது. மீனோ தண்ணீருக்குள் பாய்ந்துவிட்டது. அதுதான் சமயம் என்று தவளையும் நீரில் பாய்ந்துவிட்டது. பார்த்தீர்களா கொக்கின் பேராசையால் ஒன்றையும்பெறமுடியாது போய்விட்டதல்லவா?

-சிந்து

# வாரம் ஒரு குறள் அறிவோம்




சிறுவர்களாகிய நாம் வஞ்சகம் சூது போன்ற தீய குணங்களை அகற்றி நல்லவர்களாக வாழ வேண்டும். குழந்தையின் உள்ளம் கடவுளின் உள்ளம் என்ற வாக்கை பொய்ப்பித்திருக்காவண்ணம் நாம் நல்லவர்களாக வாழவேண்டும்.

தீயவற்றை நினைக்கவோ சிந்திக்கவோ கூடாது. நாம் தீய பழக்கவழக்கங்களை அகற்றி நல்ல பழக்கத்துடன் நடப்பமேயானால் நாம் உலகத்திலேயே உயர்ந்தவர்களாக வாழமுடியும். அதை விடுத்து நாம் தீய ஒழுக்கங்களை கடைப்பிடிப்போமாயின் எம்மையாருமே மறுக்க மாட்டார்கள். பஞ்ச தந்திரங்கள் சிரிக்கின்ற கொடுமையான நமது தீய குணங்களை ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. இதனை திருவள்ளுவர் கூட ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் ஒரு குறள் மூலம் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

''**வஞ்ச மனத்தான்படின் ஒழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும**''என்ற குறள் விளக்குகிறது.

# கண்டு பிடியுங்கள்





**இந்த நான்கு கார்களுக்குள் எந்த கார் இந்த மனிதருக்கு சொந்தமானது ?**


# வீரவணக்கம்





வீரமலராக : 30 – 05 – 1961

வீரவிதையாக : 25 – 08 – 2002









கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணியின் சிறப்புத்தளபதி

## கேணல் ராயு/குயிலன்

(அம்பலவாணர் நேமிநாதன்)

ஏழாலை தெற்கு, சுன்னாகம், யாழ்ப்பாணம்

அண்ணனுக்குத் துணை நின்று படை நடத்தினாய்
எண்ணமெல்லாம் ஈழம் என்று நீ உணர்த்தினாய்
ஏற்றமுடன் வழிகாட்டி எமை உயர்த்தினாய்
ஆட்லறி துணை கொண்டு பகை விரட்டினாய்

கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி

தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழம்.

# ஓயாத அலைகள் -01

வரவு - பத்து

ராகவன் எழுதுகிறார்




## மதவடி மயிலர்



செய்தி:- அரசின் சமாதான முயற்சிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச கூறுகிறார்.

மயிலர்:- மாரித் தவக்கை இப்படித்தான் கத்தும், அதற்கு பதில் குரலும் அதே போன்ற தவக்கைகளிடமிருந்து தான் எழும்... கத்திக் கத்தி கடைசியிலை களைத்துப் போய் ஓயும் அல்லது சாகும்... அது பற்றி யாரும் கவலைப்படுவதே கிடையாது... தோழர் வீரவன்சவும் இப்படித்தான் கனகாலமாய்க் கத்தி வருகிறார்... இப்ப அவற்றை அர்சியல் கூட்டாளி சந்திரிகாவே பேச்சுவார்த்தையை வரவேற்பதாக அவரின் ஊடகப் பேச்சாளர் அறிக்கை விட்டுள்ள நிலையில் வீரசன்சவின் கத்தல் மாரித் தவக்கையின் கத்தல் போலத்தான் பாருங்கோ இருக்குது...

செய்தி:- தாய்லாந்தில் பேச்சு நடத்த இடமளிக்கக் கூடாதென தேசிய மகாசங்கச் சம்மேளனம் கூறுகிறது.

மயிலர்:- பௌத்த நாடான சிறிலங்காவுக்கெதிராக செயற்படும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு பௌத்த நாடான தாய்லாந்து இடமளிக்கக் கூடாதென தேசிய மகாசங்க சம்மேளனத்தின் தலைவரான எல்லாவல மேத்தானந்த தேரர் கூறியிருப்பது கோமாளித்தனமான கருத்தாகும் பாருங்கோ... புலிகளுடன் பேசப்போவது பௌத்த சிங்கள நாடான சிறிலங்காவின் அரசாங்கம் தான்... வேண்டுமானால் அதனைப் பேச வேண்டாமென்று கேட்கலாம்... ஆனால் அரசு இவர்களின் கூற்றைக் கேட்குமா? உள்ளூரிலேயே விலை போகாத கருத்தை உலகச் சந்தையிலை விக்கப்போறது கோமாளித் தனமில்லாமை வேறு என்ன பாருங்கோ...

செய்தி:- ஜே.வி.பியுடன் இணைந்து எடுக்கப்படும் முடிவையே சனாதிபதி ஏற்றுச் செயற்படுவதாக - இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு.

மயிலர்:- கூட்டணியின்ரை சொல்லைக் கேட்டு நடப்பதில் என்ன பிழை பாருங்கோ... கூடாத கூட்டங்களோட கூடினா கூடங்கள் மாடங்கள் ஏறத்தானே வேண்டும்... நாதங்கள் கீதங்கள் பாடத்தானே வேண்டும்... பாவம் சனாதிபதிக்கு இப்ப ஆர் துணை... ஜே.வி.பியை விட்டால் வேறு என்ன வழி... கொஞ்சம் யோசிக்க வேணும் பாருங்கோ...

அதுசரி ஜே.வி.பியும் தங்களை இடதுசாரிகள் எண்டுதானே சொல்லி தோழமை பேசுகினம்... இடதுசாரி முன்னணி அவையளை இடதுசாரிகள் என்று நம்பவில்லைப் போலும்.. உண்மையான இடதுசாரிகளை இனம் காண்பதுதான் இந்தக் காலத்திலை பெரும் கஷ்டம் பாருங்கோ...

செய்தி:- 'சமாதான நீதிவான்களுக்கு கல்வித் தகைமை வேண்டும்'

மயிலர்:- இப்பதான் சரியான 'பொயின்றுக்கு' வந்திருக்கினம். தடுக்கி விழுகிற இடமெல்லாம் சமாதான நீதிவான்கள் இருந்தும் ஒரு கையெழுத்தை பெறுவதென்றால் காலோய நடக்க வேண்டிய நிலைதான் இன்னமும் இருக்கு பாருங்கோ... இது மக்களுக்கு உதவ வழங்கப்படும் பதவி... புகழ்பெற வழங்கப்படுவதல்ல... இது பெரும்பாலோருக்கு தெரிவதில்லை... ஒரு சில சமாதான நீதிவான்கள் தங்களை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நினைத்து நடக்கும் நிகழ்வுகளும் இருக்கு பாருங்கோ... ஒரு கல்வித் தகைமையின்றி பதவிகளை வழங்கும் போது இந்தப் பிசகு ஏற்படத்தான் செய்யும் பாருங்கோ... கல்வித்தகைமை மட்டும் இதுக்கு போதாது பாருங்கோ... மனிதநேயப் பண்பும் இருக்க வேணும் அது தான் பிரதானம் பாருங்கோ...

செய்தி:- சிறைச்சாலை போன்ற சூழலிலிருந்து எம்மால் கல்வி கற்க முடியாது- வடமராட்சி மாணவர் அறிக்கை.

மயிலர்:- அதெண்டா உண்மைதான்... பாடசாலை... கோயில்.. நூல்நிலையம் பொது இடங்கள் போன்றவற்றில் அச்சமற்ற அமைதிநிலை நிலவ வேண்டும். ஆயுதம் தாங்கிய படையினர் அதுவும் கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கிலானோர் கொல்லப்படுவதற்கும் காணாமல் போவதற்கும் காரணமாக இருந்த படையினர் கல்லூரி வாசலில் முகாமமைத்து இருந்தால் கல்வி வருமா, கோயில் வாசலில் இருந்தா பக்தி வருமா? அச்சமும், பீதியும் தான் வரும் பாருங்கோ... பாடசாலைக்கு சீருடையுடன் வருவோரை இராணுவச் சீருடையில் நிற்போர் சூழ இருப்பது கல்விக்கு உகந்ததல்ல பாருங்கோ... கல்வியமைச்சாவது கண் திறந்து பார்க்கலாமெல்லோ...!

அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்த புகழும் இல. - திருவள்ளுவர்

## வரிவிளம்பரம்

**பெற்றுக்கொள்ளவும்**
என்னிடம் மோட்டார் சைக்கிள் செட்டை செய்யக்கொடுத்தவர்கள் 24-09-2002க்கு முன்னர் வந்து பெற்றுக்கொள்ளவும். தவறின் இ.வேல்முருகன், வடகிழக்கு, மானிப்பாய் எனும் முகவரியில் 25-09-2002க்குப் பின்னர் பெற்றுக் கொள்ளலாம். இ.வேல்முருகன் (மாத்தையா), 8ம்வட்டாரம், புதுக்குடியிருப்பு. (2147)

அன்பான வாடிக்கையாளர்களே, லைவ் ஸ்ருடியோ, மல்லாவியில் உங்களால் எடுக்கப்பட்ட புகைப் படங்களை ஸ்தாபன இடமாற்றம் காரணமாக 15-09-2002ற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். வாழ்நாள் புகைப்படபிடிப்பகம், மல்லாவி. (2386)

**தகவல் தரவும்**
மருதனார் மடம் சந்தை வியாபாரியான சிவராசா சிவகுமார் என்பவரது M-D-90 மோட்டார் சைக்கிள் மருதனார்மடம் சந்தை க்கு அருகாமையில் களவாடப் பட்டுள்ளது. செசி நம்பர்-MD-90 200 3566, இஞ்சின் நம்பர் -MD-90-200 361. இது பற்றிய தகவல் அறிந்தவர்கள் வே.செல்வராசா, முடியரசி பதிப்பகம், கிளிநொச்சி யில் தொடர்பு கொள்ளவும். (2396)

## ஓராண்டு நினைவுகளில்




| தாயின் மடியில் | தாயக மடியில் |
|---|---|
| 19 | 26 |
| - | - |
| 12 | 08 |
| - | - |
| 1974 | 2001 |

**கப்டன் இளஞ்சுடர்**
**(சுப்பிரமணியம் சிவராசா)**
திதி: 16-09-2002

சோதனைகள் சிலவேளை சாதனை
படைப்பதுண்டு
இழப்புக்களும் சிலபொழுதில்
சிறப்புக்களாவதுண்டு
உரிமைக்காய் உனை இழக்கத் துணிந்தாயே- சிவா
உன் நினைவுச்சுமை தாங்காமல்
தவிக்கின்றோம் சிவா.

குடும்பத்தினர்
கல்மடுநகர், இராமநாதபுரம்.
(2395)

## வெள்ளிவிழா



கிளிநொச்சி கந்தசாமி கோவில் பிரதம குரு ஆகிய சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் கௌரி தம்பதியினர் 14-09-2002 சனிக்கிழமை தமது 25வது திருமண வெள்ளிவிழாவை கந்தசாமி கோவிலில் கொண்டாடுகிறார்கள்.
இவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ முருகன் என்றென்றும் அருள்புரிய நாம் எல்லோரும் அன்புடன் வாழ்த்துகிறோம்.

பாசமுள்ள மகன்,
கந்தசாமி கோவில், மைத்துனர்கள்,
கிளிநொச்சி. (சி.7367) தங்கைமார்கள், மருமக்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 18-03-1976

தமிழீழ மண்ணில் 12-09-1999

**கப்டன் மனோ**
**(துங்கசாமி செல்வநாயகி)**

எத்தனை
ஆண்டுகள்
உருண்டோடினாலும்
மகளே உன் நினைவு
ஆறாப்புண்ணாகும்.

தந்தை, அன்னை
சகோதர சகோதரிகள்.
திருமுறிகண்டி (2391)

## தையல் பயிற்சி பெறவிரும்புவோரும் பெற்றவர்களுக்குமான நேர்முகத்தேர்வு

கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து நிரந்தர வதிவிடத்தினையுடைய மாவீரர் போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் எதிர்வரும் 15-09-2002 இற்கு முன்பு அத்தாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-
மா.போ.கு.ந. காப்பகம்,
நடுவப்பணியகம், கனகபுரம், கிளிநொச்சி.

தகவல்:-
மா.போ.கு.ந. காப்பகம்,
நடுவப்பணியகம், கனகபுரம்,
கிளிநொச்சி. (சி.7363)

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

எமதுகிராமிய வங்கியின் வைப்புக்களுக்கு அதிஉயர் வட்டி-

| | |
|---|---|
| சேமிப்புவைப்பிற்கு | -12% |
| ஒருவருட நிலையான வைப்பிற்கு | -16% |

சந்தர்ப்பத்தினைத் தவற விடாதீர்கள் இச்சலுகை 30-09-2002 வரை மட்டுமே.

முகாமையாளர்,
கிராமியவங்கி,
அக்கராயன்
பலநோக்கு.கூ.ச
அக்கராயன்குளம்
(சி.7364)

## VACANCY

### Administrator / Bookkeeper

MSF Holland - Puthukkudiyiruppu Project is looking for a full time administrator / bookkeeper to work in their Maternity Health Programme.

**The ideal candidate should meet the following requirements:**

- ★ Experience in a similar post is required
- ★ Fluency in spoken and written English
- ★ Accounting background and knowledge in office administration
- ★ Computer literacy with good knowledge in MS Word, MS Excel
- ★ Familiarisation/past experience with the humanitarian and NGO situation in Sri Lanka
- ★ Excellent organisational skills
- ★ Good inter-personal communication skills
- ★ Positive attitude to work with others in a team

Please, forward your application with Bio Data in your own handwriting together with the copies of your educational qualification certificates and at least two reference letters from non-related referees before 21st September 2002 to:

MSF-Holland, Ward number 7, Puthukkudiyiruppu. (2148)

## கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் - கிளிநொச்சி

## பணிநிலை வெற்றிடம்

மேற்படி சங்கத்திற்கு கீழ்வரும் தகைமைகள் கொண்டவர்களிடமிருந்து 19-09-2002 திகதிக்கு முன்னதாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை: கிளைமுகாமையாளர்.
சம்பளக்குறியீடு: 208/16
சம்பளத்திட்டம்: 3250/- - 4500/-
60x10 - 65x10

தகைமைகள்: அ) கூட்டுறவுப்பணியாளரின் 17-வது சம்பளத்திட்டத்தின் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சா/த) பத்திரம்/ (க.பொ.சா.த.) தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம், வர்த்தகஎண்கணிதம், தூயகணிதம்/தமிழ்/சிங்களம் பாசை உட்பட ஆறுபாடங்களில் சித்தி.

சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வயது: 25-45க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்,
கனகபுரம், கிளிநொச்சி.
(சி.7362)

## VACANCY

### Translator

Tamil / English - English / Tamil

MSF Holland - Puthukkudiyiruppu Project is looking for a full time translator to work in their Maternity Health Programme.

**The ideal candidate should meet the following requirements:**

- ★ Should be a female between the age of 25-40 years
- ★ Fluency in spoken and written English with good communication skills
- ★ Experience of medical English will be an advantage
- ★ Computer literacy with good knowledge in MS Word
- ★ Ability to relate well to patients and staff
- ★ Good inter-personal communication skills
- ★ Positive attitude to work with others in a team
- ★ Past experience in an INGO will be an advantage

Please, forward your application with Bio Data in your own handwriting together with the copies of your educational qualification certificates and at least two reference letters from non-related referees before 21st September 2002 to:

MSF-Holland, Ward number 7, Puthukkudiyiruppu. (2149)

## கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
## பயிற்சிநெறிகளுக்கான நேர்முகத் தேர்வு

**மேற்படி கல்வி நிறுவனத்தில் கீழ்வரும் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. தேசிய கணக்கீட்டு கற்கைநெறி (என்.சி.ஏ.ரி)
   கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தர சித்தி
2. ஆங்கில தேசிய சான்றிதழ் கற்கைநெறி (என்.சி.இ)
   கல்வித்தகைமை :- க.பொ.த (சா/த)
   ஆங்கில திறமைச் சித்தியுடன் உயர்தர சித்தி
3. இரண்டு சக்கர உழவு இயந்திரம் திருத்துதல்
   கல்வித்தகைமை :- தரம் - 10
4. உந்துருளி திருத்துதல் (மோட்டார் சைக்கிள்)
   கல்வித்தகைமை :- தரம் - 10
5. மரவேலைப் பயிற்சி நெறி
   கல்வித்தகைமை :- தரம் - 10
6. வீட்டு மின்னிணைப்பு பயிற்சிநெறி
   கல்வித்தகைமை :- தரம் - 10
7. வானொலி திருத்துதல்
   கல்வித்தகைமை :- தரம் - 10

மேற்படி சகல கற்கைநெறிகளுக்குமான நேர்முகத்தேர்வு 14.09.2002ந் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு கிளி/வலய கல்விப்பணிமனையில் இடம்பெறும். கற்க விரும்பும் மாணவர்கள் உரிய ஆவணங்களுடனும், சுயவிபர கோவையுடனும் சமுகம் தரவும்.

**குறிப்பு:-** இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்காதவர்களும் நேர்முகத்தேர்வுக்கு தோற்றலாம்.

அதிபர்
கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்.
வன்னேரிக்குளம் வீதி,
கிளிநொச்சி. (சி.7357)



**அடிமைகளாக வாழ்வதை விடவும் மேலானது-**
**சுதந்திரமாக இறப்பது.**

# கறுப்பு அமெரிக்க கவிஞன் லோங்ஸ்டன் ஹியூஸ்

பெயருக்கு முன்னால் எந்த அடைமொழியும் இல்லாதவர்கள் உலகம் முழுவதுமிருக்கிறார்கள் என்று நமது காலத்தைப் பற்றிய விளக்கம் கவிதையில் குறிப்பிடுகிறார் லோங்ஸ்டன் ஹியூஸ் . ஆனால் அவரது கவிதையுலக மனிதர்களுக்கு அடைமொழி கள் இருந்தன. நீக்ரோ கறுப்பன் அடிமை என்று வெவ்வேறு வார்த்தைகளில். கறுப்பு அமெரிக்க வாழ்க்கை யின் கண்ணீரையும் புன்னகையையும் அவர் தனது கறுப்புக் கவிதைகளில் பெருமிதத்துடன் வெளிப் படுத்தினார். நீக்ரோ இலக்கியத்தின் உலகப் புகழ்பெற்ற கறுப்பு முகம் லோங்ஸ்டன் ஹியூஸ்.

1902இல் ஜாப்லின் என்ற இடத்தில் பிறந்தார் லாங்ஸ்டன்ஸ் ஹியூஸ். தந்தை ஜேம்ஸ் ஹியூஸ் சட்டக் கல்வி பயின்றார். ஆனால் வெள்ளை ஆதிக்கம் இறுகக் கவ்வியிருந்த அன்றைய சமூகச் சூழலில் அவரால் போட்டியிட்டு வெற்றி பெற முடியவில்லை. நொந்துபோன ஜேம்ஸ்ஹியூஸ் மனைவியையும் மகனையும் விட்டுவிட்டு காசு சம்பாதிப் பதற்காக மெக்ஸிகோ போனார். லாங்ஸ்டனும் தாயாரும் அமெரிக்காவிலேயே தங்கினர்.

லாங்ஸ்டனின் அம்மாவுக்கு திடமான மனமும் பிறந்த மண்ணிலேயே வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்பது என்ற பிடிவாதமும் இருந்தன. இரண்டாவது கணவனுடன் வேலை தேடி ஊர் ஊராக அலைந்தார். சிறுவன் ஹியூஸ் தனிமைப் பிராணியாக ஒதுக்கப்பட்ட குழந்தையாக தாய்வழிப் பாட்டியுடன் தூரத்து உறவினர்களுடன் வாழ நேர்ந்தது.

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் ஒருவருடம் தனது தந்தையுடன் சேர்ந்துவாழும் 'அதிர்ஷ்டம்' ஹியூசுக்கு கிடைத்தது. அதைத் தொடர்ந்து கொலம்பியா பல்கலைக் கழகத்தில் ஓராண்டு காலம் கல்விகற்கும் வாய்ப்பும் கிடைத்தது. 1921ல் லாங்ஸ்டன் ஹியூஸின் பத்தொன்பதாவது வயதில் அவரது முதல் கவிதை 'நீக்ரோ நதிகளைப் பற்றி பேசுகிறான்' வெளியானது. நீக்ரோ இலக்கியம் தனது ஒப்புவுமை இல்லாத கவிக் குரலை அடையாளம் கண்டது.

அமெரிக்க நீக்ரோ நிறம் காரணமாகத் தாழ்த்தப் பட்டவன். சரும விரோதத்தால் மானிட மரியாதைகள் மறுக்கப்பட்டவன். அவனது துயரங்களுக்குக் காரணம் அவனது கறுப்பு ஜனனம். நீக்ரோக்களின் இந்த அவலத்தைச் சொந்த வாழ்வில் வெவ்வேறு கட்டங் களில் அனுபவித்தவர் ஹியூஸ். எனினும் பிறந்த கறுப்பு இனத்தை வெறுக்கவில்லை. வெள்ளை இனத்தை பழிக்கவில்லை. இந்தவகையில் லாங்ஸ்டன் ஹியூஸ் மிதவாதி. அடக்குமுறைக்கு எதிரான குமுறலையும் ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரையும் போராடுபவர்களின் அயர்வின் மையையும் சொந்தமரபின் பெருமித்தையும் கவிதைகளில் வெளிப்படுத்தினார் அவர்.

1926ல் ஹியூஸின் முதல் கவிதைத்தொகுப்பு வெளியானது. அந்தத் தொகுப்புக்காக லிங்கன் பல்கலைக்கழகத்தில் அவருக்கு உதவித் தொகை அளிக்கப் பட்டது. அதுவே பட்டப் படிப்புக்கும் அவரை தகுதியானவராக்கியது. பிறகு 1943ல் கௌரவ டாக்டர் பட்டமும் அவரைத்தேடி வந்தது. தொடர்ந்து மாபெரும் அங்கீகாரங்களும் விருதுகளும் வந்து சேர்ந்தன.

கவிதை சிறுகதை நீக்ரோக்களின் ஆன்ம சங்கீதமான ஜாஸ்ப்ளு இசைக்கான பாடல்கள். கட்டுரை, நாடகம், நகைச்சுவை, சுயசரிதை என்று இலக்கியத்தின் பல துறைகளிலும் எழுதிக் குவித்தார். ஹியூஸ் 1967ல் மறையும் வரை அவரது எழுத்து முற்றுப் புள்ளியை சந்திக்கவே யில்லை.

'சுதந்திரதின் உழவு' உன்ற கவிதையின் ஒரு வரி லாங்ஸ்டன் ஹியூஸின் கவிதை மையத்தைச் சுட்டுவதாக நம்பலாம். அந்தவரி:

"அடிமைகளாக வாழ்வதை விட மேலானது
சுதந்திரமானவர்களாக இறப்பது"

### நான் வளர்ந்த பின்பு....

நீண்ட காலத்துக்கு முன்பு கண்ட கனவு
ஏறத்தாழ எனது கனவை மறந்துவிட்டேன்.
ஆனால் அப்போதும்
அது அங்கேதான் இருந்தது.
ஒரு சூரியனைப் போலப்
பிரகாசமாக என் கண்முன்னால் இருந்தது
என் கனவு.
பிறகு சுவர் உயர்ந்தது.
மெதுவாக உயர்ந்தது.
மெதுவாக எனக்கும்
எனது கனவுக்கும் இடையில்...
மங்கச் செய்தது
மறைத்தது.
எனது கனவின் ஒளியை....
ஆகாயத்தைத் தொடும்வரை
உயர்ந்தது அந்தச் சுவர்.
நிழல்.
நான் கறுப்பன்
அந்த நிழலில் படுத்துக் கிடந்தேன்.
இனிமேலும்
எனக்கு முன்னாலோ
எனக்கு மேலாகவோ இல்லை
எனது கனவின் ஒளி.
கனத்த சுவர் மட்டும்
நிழல் மட்டும்
என் கைகளே!
என் கறுத்தக்கைகளே!
சுவரை இடியுங்கள்.
கனவைக் கண்டுபிடியுங்கள்.
இந்த இருட்டைச் சிதறடிக்க உதவுங்கள்.
இந்த இரவை நொறுக்க உதவுங்கள்.
சூரியனின் ஆயிரமாயிரம் வெளிச்சங்களாக
சூரியனின் ஆயிரமாயிரம் கழற்கனவுகளாச
இந்த நிழலை உடைக்க...
ஒரு சிறிய பழைய கடிதம்போதும்.

### நானும்.....

அமெரிக்காவே
நானும் பாடுகின்றேன்
நான் உனது கறுத்தச் சகோதரன்
நண்பர்கள் வந்தபோது
அவர்கள் என்னை
அடுப்பங்கரையிலேயே சாப்பிடச் சொன்னார்கள்.
எனினும் சிரித்தேன்
நன்றாகச் சாப்பிட்டேன்
வலுவானவனாக வளர்ந்தேன்
நாளை
நண்பர்கள் வரும்போது
மேசையருகில் இருப்பேன்
அப்போது
'அடுப்பங்கரைக்குப் போய்ச்சாப்பிடு'
என்று சொல்ல
யாருக்கும் துணிச்சல் இராது
அது தவிர
எவ்வளவு அழகானவன் நான் என்பதை
அவர்கள் பார்ப்பார்கள்
வெட்கப்படுவார்கள்
அமெரிக்கா என்பது நானும்தான்.

●

# ஊர்கோலம்

## மண்ணர்

பொன்னுத்துரை வாத்தியார் கானல் வெய்யிலில் தோள் துண்டை தலையில் கட்டியவாறு களைத்து விழுந்தவர்போல் குழந்தையேசு கோவிலில் நின்றார்.

'என்ன திடீரென்று புதுக்குடியிருப்புப்பக்கம்?' என்றேன். அவர் இருப்பது தருமபுரத்தில்-

'ரெலிபோன் பேச வந்தனான் மகள் அவசரமாய் ரெலிபோன் எடுத்தவள்......'

'ஏன் ஏதும் விசேஷமே...'

'சீ அப்படியொண்டுமில்லை. விசுவமடுவிலை வாங்கிப் போட்ட காணியை விக்கவேண்டாமாம்....'

'ஏன் .......நீங்கள் அதை விக்கவே போறீங்கள்?'

'இனியென்ன சண்டையில்லைத் தானேஇத நல்ல விலைக்கு விக்கிறதுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுது. வித்துப்போட்டு வடமராட்சிக்கு ஊரோடை போயிடலாமென்று பார்த்தன்... அவள் வேண்டாமாம்....'

'பருத்தித்துறையிலை கலாட்டா என்று கேள்விப்பட்டாவாம்..... பிரச்சினை முழுசாய் முடியாமல் அங்கைபோய் அந்தரப்படவேண்டாமாம். தருமபுரத்தலையிருந்து விசுவமடு காணியை பராமரிக்கட்டாம்...."

நல்லதுதானே.....'

'நல்லதுதான்....கடைசிக்காலத்திலை ஊர்ச்சுடலையிலை எரியிறதுக்கு பொசிப்பில்லை எனக்கு.....அதுதான் கவலையாய் இருக்கு.....' அவர்சொல்லிக் கொண்டே போனார். அவரின் ஊர்ப்பற்று மட்டுமல்ல வேர்ப்பற்றும் என்னைச் சிலிர்க்கவைத்தது.

★★

## சமாதான சங்கமம்

நல்லூர்.... ஓர் சர்வதேசப் பொருட்காட்சி மையம் போன்றிருந்தது. உலக சமூகம் அங்கு நிலைகொண்டிருப்பது தெரிந்தது.

'இவர்தான் என்ரை மூத்தக்கான்ரை அவர் 'டென்மார்க்காரர்' என்றாள் வசந்தி.

அவரோடை நிக்கிற உயரமான ஆள் ஒரு ஜெர்மனிக்காரர். அத்தான்ரை கொம்பனியிலை வேலை செய்கிறவர் என்றும் தொடர்ந்தான்.

வேற்று மொழிகளில் உரையாடல்கள்..... வேறு வேறு கலாச்சாரங்களின் சங்கமம்....

'எங்கடை சின்னத்தம்பீன்ரை கடைசிப்பெடியன் ஒரு ரஷ்சியாக்காரியையெல்லே முடிச்சவன். அவனும் அவளும் பிள்ளைகளுடன் வந்திருக்கினம்.... அதுகளுக்கு தமிழே தெரியாது.... இது விதானையார் கந்தசாமியின் வியப்பு.

அதை ஏன் கேக்கிறீயள் எங்கடை பேப்பர்கடை மணியத்தின்ரை மூண்டு பிள்ளையளும் மூண்டுவிதம். மூத்தவள் கனடாவிலை ஒரு வெள்ளைக்காரனை கட்டி கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாள். அந்தாளையும் அவளையும் பார்த்தால் பனைமரமும் பலாமரமும்போல ... ஆனால் நல்ல ஒற்றுமை.... அவர் எங்கட சமயத்திலை ஆராய்ச்சி செய்கிறவராம்.....மற்றவள் எங்கடை பெடியனைத்தான் கட்டினவள். அவனும் வெள்ளைக்காரன் மாதிரி வாட்டசாட்டமான ஆள்... காதிலை கடுக்கனும் போட்டிருக்கிறான்....... என்ன நாகரீகமோ........ அவனும் தமிழ் கதைக்கிறானில்லை.......கடைசிப் பெடியன் பிரான்ஸ்காரியோட வந்திருக்கிறான்..... ப்ரண்ட் என்று சொன்னான் என்ன கோதாரியோ ஒண்டும் விளங்கேல்லை.......எல்லாரும் மேற்கு வீதியலை கச்சான் திண்டுகொண்டு நிற்கினம்....'- என்றவர் சாத்திரியார் மாமாதான்.-அவருக்கு இதெல்லாம் அதிசயம்.

ஆதீனத்திற்கு முன்னால் நிற்கும்போது என்னை நோக்கி வேகமாக வந்த அந்த மனிதர்..... நீங்கள்.....எல்லே' என்றார்.

நான் ஓமென்றேன். எனக்கு அவரை அடையாளம் காணமுடியவில்லை. 'என்னைத் தெரியவில்லையா... நான்தான் ரெயிலர் யூசுப்பின் மகன் ஆயூப்' என்றான் என் கைகளைப் பிடித்தபடி.

நெஞ்சுக்குள் என்னமோ செய்தது. என்ரை பெரியப்பா சீரியசாக ஆஸ்பத்திரியிலை இருக்கேக்க அவசரமாக இரத்தம்கொடுத்து காப்பாற்றியவன்....... வாடி மெலிந்து....தாடியுடன் நின்றான். கைகளைப்பிடித்தபிடி தளரவில்லை.....'வாப்பா சுகமாக இருக்கிறாரா ' என்றேன்

'இல்லை' யென்பதற்காய் தலையாட்டினான். உதட்டைப்பிதுக்கினான். மனம் கடந்தகாலத்தை ஊடுருவியது.....

உலகம் சுற்றிக்கொண்டிருந்த மனம் உள்ளூரில் நிலைகொள்ளத் தொடங்கியது.

★★

## படிப்பதற்கும் டொனேஷன்

வன்னியிலிருந்து தனது மகனை யாழ்ப்பாணப் பள்ளிக்கூடமொன்றில் சேர்க்கச் சென்று வந்த அவர் சலிப்படைந்திருந்தார்.

'என்ன...... மகனுக்கு இடம் கிடைச்சுதா' என்றேன்.

'ஒரு மாதிரி அவரைப் பிடிச்சு இவரைப் பிடிச்சு சேர்த்திருக்கிறன்.... ஆனால்.... சீ எண்டு போச்சு.....பிள்ளை கெட்டிக்காரனாக இருந்தால் மட்டும் போதாது பணக்காரனாகவும் இருந்தால்தான் 'படிப்பை' வாங்கலாம் எண்ட நிலைதான் யாழ்ப்பாணத்தில இருக்கு.... நான் அவரை வினாக்குறியுடன் பார்த்தேன்....'

'பொம்பிள்ளைப் பிள்ளைகளுக்கு சீதனத்துடன் 'டொனேஷன்' கொடுத்து கலியாணம் செய்துவைத்து... கெட்ட தமிழன் பள்ளியிலை தங்கட பிள்ளையளைப் படிக்க வைக்கவும் டொனேஷன் கொடுக்க வேண்டியிருக்கு..... இதைப் போலை அசிங்கம் வேறையில்லை........ காசில் லாதவனுக்கு கல்வியில்லை என்று சொல்லுற கல்விச் சமூகம்தான் நாட்டிற்கு என்ன பிரியோசனம்?' என்றார் அவர் சலிப்புடன்....


'தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசையெல்லாம்
காசுமுன் செல்லாதடி குதம்பாய்காசு முன் செல்லாதடி'

என்ற பழையபாட்டு எனக்கு நினைவில் வந்தது. அவரின் கேள்வியில் நியாயம் இருக்கவே செய்கிறது.

★★

பாதசாரி

# கலப்பு உலோகம்
# ALLOY



கலப்புலோகம் என்பது உலோகங்களின் கலவை அல்லது கரைசல் ஆகும். அது வேறு இரசாயன மூலகங்களையும் கொண்டிருக்கலாம். நன்கு அறியப்பட்ட கலப்புலோகங்களாக, செம்பும் வெள்ளியும் கலந்த வெண்கலம்: செம்பும் நாகமும் கலந்த பித்தளை இரும்பும் காபனும் கலந்த உருக்கு முதலியவை இருக்கின்றன. உலோகங்களை, ஆசனிக் அல்லது அன்ரிமனி போன்ற அரை உலோகங்களுடன் கலந்த அல்லது காபண் அல்லது சிலிக்கன் அலோகங்களுடன் கலந்த கலப்புலோகங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கலப்புலோகங்கள் இரண்டு அடிப்படை வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இரும்பை மூலக உலோகமாகக் கொண்ட பெரசுக் கலப்புலோகங்களும், செம்பு, அலுமினியம், ரைற்ரேனியம் போன்ற இரும்பு தவிர்ந்த ஏதாவது ஒரு உலோகத்தைக் கொண்ட பெரசு அல்லாத கலப்புலோகங்களுமே அவையாகும்.

### கலப்புலோகங்களின் கட்டமைப்பு (STRUCTURE OF ALLOYS)

கலப்புலோகங்களின் ஆக்கக் கூறுகள் திரவ நிலையில் ஓரளவு கலந்து விடக் கூடிய தன்மைகளை யும் சில வேளைகளில் முழுமையாக கலந்து விடக் கூடிய தன்மைகளையும் கொண்டவையாக இருக்கின்றன. வெவ்வேறு வகையான கலப்புலோகங்களை அவற்றின் திண்ம நிலையில் அவை ஓரினமாகியிருக்கும் அளவை வைத்து அவற்றை வேறுபடுத்திக் கூறலாம்.

### திண்மக் கரைசல்கள் (SOL ID SOLUTIONS)

இவை கலப்புலோகங்களாகும். இவற்றினுடைய ஆக்கக் கூறுகளில் இருக்கும் அணுக்கள் பளிங்கு முழுவதும் எழுந்தமானமாக கலக்கப்பட்டிருக்கும். வெவ்வேறு வகையான அணுக்கள் வெவ்வேறு அளவுகளைக் கொண்டவையாக இருக்குமென்பதால் கலப்புலோகத்தின் பளிங்கு நெய்யரி (CRYSTAL LATTICE)யில் இடப்பெயர்வின் நகர்வுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான தகைப்புகள் உருவாகும். இதன் விளைவாக அதிக கடினமான பொருள் உருவாகும்.

### இடை உலோக சேர்வைகள் (INTERMETALLIC COMPOUNDS)

இந்தக் கலப்புலோகங்களில் வெவ்வேறு சேர்வைகளின் அணுக்கள் பளிங்கு நெய்யரியில், கிரமமான முறையில் மாறிமாறி அமைந்திருக்கும். இடை உலோகச் சேர்வைகள் பொதுவாக சுடுமுனைப்பான - வெப்பத்திற்கு நிலைகுலையாத தன்மையையும் (THERMAL STABILITY) நொருங்கக் கூடிய தன்மையையும் (BRITTLENESS), வன்மைத்தன்மையையும் (HARDNESS), கொண்டிருக்கும்.

### பல்கட்ட கலப்புலோகங்கள் (MULTIPHASE ALLOYS)

ஒரு பல்கட்ட கலப்புலோகமானது பொறிமுறை கலவை (MECHANICAL MIXTURE) யை அல்லது வெவ்வேறு அமைப்பு களோடு கூடிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகைப் பளிங்குகளின் கலக்கப்பட்ட கட்டத்தைக் கொண்டிருக்கும். அதனுடைய கட்டமைப்பும் இயல்புகளும் உருக்கப்பட்ட திணிவின் குளிர்வடையும் வீதத்திலும் குளிர்வடையும் போது ஏற்படுகின்ற வேறு சூழ்நிலை களிலும் பெரிதும் தங்கியிருக்கும். குளிர்வடைதலானது மிகவும் சிரமமானதாக இருந்தால் கனமான கட்டம் கீழ் நோக்கிச் செல்லும் அதே வேளை இலேசான கட்டம் மேல் நோக்கி நகரும். விரைவான குளிர்வடைதலானது (தணித்தல்) கட்ட வேறுபாடு இல்லாத திண்மக் கரைசல் ஒன்றை உருவாக்கிவிடும். இது ஒருநிலை பேறான கரைசலாகஇருக்காது என்பதுடன், இறுதியிலே பிரிவடைதல் நிகழத்தான் செய்யும். குளிர்வடைத்லானது இந்த இரண்டு அந்தலைகளுக்குமிடையே அமைந்திருந்தால் ஒரு பகுதி - பிரிவு நிகழும். கலப்புலோகத்தின் இறுதிக் கட்டமைப்பானது அதில் அதிகமாக இருக்கும் ஆக்கக்கூறின் சிறி மணியுரு கட்டமைப்பையும் அதனுடைய மணியுருக்களின் எல்லைகளைச் சூழ மற்றய ஆக்கக்கூறு செறிந்திருப்பதுமான தோற்றத்தைக் கொண்டிருக்கும். கலப்புலோகத்தில் குறைவாகக் காணப்படும் ஆக்கக் கூறானது, கிட்டத் தட்ட ஓரினமான பொருளில் புதைந்து கிடப்பது போன்ற கட்டமைப்புகளும் சில வேளைகளில் உருவாவதுண்டு பல்வேறு கட்டமைப்புக்களின் பொறிமுறை இயல்புகள் பெருமளவில் வேறுபடும் என்பதால் குளிர்விக்கும் உத்திகளை புத்திசாலித்தனமாகத் தெரிவு செய்வதாலும் சில சமயங்களில் அதைத் தொடர்ந்து வேறு வெப்பப் பிரயோகங்களை மேற் கொள்வதனாலும் விரும்பப்படும் இயல்புகளுடன் கூடிய பொருள் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### அயன் புகுத்தப்பட்ட கலப்பு உலோகங்கள் (ION IMPLA NTED ALLOYS)

உலோக மேற்பரப்புகள் மீது தெரிவு செய்யப்பட்ட அயன்களைக் கொண்ட கற்களை பிரயோகித்து, மேற்பரப்பிற்குக் கீழே உள்ள பொருளின் இயல்புகளை மாற்றாமல் மேற்பரப்புக் கலப்புலோகத்தை உருவாக்குவதன் மூலம் உலோக மேற்பரப்புக்களை வன்மையாக்கி அவற்றை அதிக துரு எதிர்ப்பு சக்தி கொண்டவையாக மாற்றலாம். மூன்றாவது ஒரு பொருளானது உலோகத்தின் மீது பூசப்பட்டு மேற்பரப்பினுள் வலிந்து செலுத்தப்படவும் முடியும். இந்த செயல்முறையானது அயன்-கற்றை கலப்பு (ION - BEAM MIXING) எனப்படும். வனைபொருள் (CERAMIC) மேற் பூச்சுக்களைப் பயன்படுத்தி உலோகங்களைத் திடமாகப் பிணைப்பதற்கும் அயன் கற்றைகளைப் பயன்படுத்தலாம். பொது முகங்களில் வனை பொருளையும் உலோக அணுக்களையும் கலப்பதன் மூலம் இது நிகழ்த்தப்படும்.

### கலப்புலோகங்களின் இயல்கள் (PROPERTIES OF ALLOYS)

உலோகங்களின் பொறி முறை வலு வெப்பத்திற்கும் துருப்பிடித்தலுக்கும் எதிரான எதிர்ப்பு சக்தி மின்னியல் மற்றும் காந்தவியல் ரீதியான பண்புகள் முதலிய இயல்புகளை கலப்புலோகமாக்குவதன் மூலம் கட்டுப்படுத்தமுடியும். கலப்புலோக மாக்குவதன் மூலம் பொறிமுறை ரீதியான பண்புகளில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களின் ஒரு உதாரணமாக பற்சிகிச்சைப் பணிகளுக்குப்பயன் படுத்தப்படுகிற இரசக்கலவை (AMALGAM) இருக்கிறது வெள்ளி, வெள்ளீயம் போன்ற உலோகங்களை திரவ பாத ரசத்தில் கரைப்பதன் மூலம் ஒரு திண்மச் சேர்வையைப் பெறலாம். கலப்புலோகங்களின் முதலாவது பயன்பாடாக உலோகங்களின் பொறிமுறை ரீதியான வலுவை அதிகரிப்பது இருக்கிறது. இதன் நன்கு அறியப்பட்ட- உதாரணங்களாக கலப்புலோகங்களான வெண்கலமும் பித்தளையும் இருக்கின்றன. இரும்பினுடைய இழுவிசையானது (TENSILE STRENGTH) ஒரு சிறிய அளவு காபனை மட்டும் சேர்ப்பதன் மூலம் 275x1 மில்லியனிலிருந்து 1000x1 மில்லியன் Nச.மீ ஆக (40000 இல் இருந்து 150,000 இறா/சதுர அங்குலம் ஆக) அதிகரிக்கப்பட முடியும். 0.03 இல் இருந்து 1.7 விழுக்காடு காபனோடு சேர்த்து கலப்புலோகமாக்கப்பட்ட இரும்பானது உருக்குகளின் முக்கியமான தொகுதி ஒன்றை உருவாக்கியிருக்கிறது. துருப்பிடிக்காத உருக்கு என்பது உருக்குடன் குறோமியம் மற்றும் நிக்கலும் சேர்ந்த கலப்பு லோகமாகும். மேம்படுத்தப்பட்ட துரு எதிர்ப்பு சக்தியை அது கொண்டிருக்கும். வான்கல மற்றும் விண்வெளி பிரயோகங்களுக்கென 1400x1 மில்லியன் N/ச.மீ வரையான (200,000 இறா/அங்குலம்) இழுவிசையும் உருக்கினுடைய எடையில் 60விழுக்காடு எடை கொண்டது மான ரைற்ரேனியம் கலப்புலோகம் உருவாக்கப் பட்டிருக்கின்றது. அவற்றினுடைய உயர்ந்த துரு எதிர்ப்பு சக்தியினுடையவும், உயிர் வாழும் இழையங்களுடன் தாக்கமுறாத தன்மை காரணமாகவும் உடம்பில் செயற்கை உறுப்புக்களாக பொருத்தப்படும் சாதனங்களிலும் (PROTHETIC DEVICE) இதயத்துடிப்பு உருவாக்கிகளிலும் (PACE MAKERS)ரைற்ரேனியம் கலப்புலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உயர்ந்த உள் வேலை வெப்பநிலை கொண்ட தாரை இயந்திரங்களின் உருவாக்கமானது மிகுதிறன் கலப்புலோகங்கள் கிடைக்கக் கூடியதாக இருந்ததாலேயே சாத்தியமாயிற்று. நிக்கலையும் கோபோல்ற்றையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கலப்புலோகங்கள் தாரை இயந்திரங்களின் சுழலிப் பத்திரங்களை உற்பத்தி செய்யப்பயன்படுவதோடு 1100°C (200°F) அளவிலான வெப்பநிலைகளிலே பெரும்வலுவையும் துரு எதிர்புத்திறனையும் அளிப்பவையாகவும் இருக்கின்றன.

குறைந்த உருகு வெப்பநிலை கொண்ட கலப்புலோகங்கள், தானியங்கி விசிறல் அமைப்புகளிலே உருகத்தக்க மூலகங்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. இந்த கலப்பு லோகங்கள் ஈயம், கட்மியம், பிஸ்மத் மற்றும் தாழ்ந்த உருகுவெப்பநிலை கொண்ட உலோகங்கள் முதலியவற்றைக் கொண்டிருப்பதோடு அவை நல்லுருகல் கலப்புலோகங்களை (EUTECTIC ALLOY) உருவாக்குகின்றன. நல்லுருக்கல் கலப்புலோகங்கள் என்பவை, அவற்றின் ஆக்கக் கூறுகள் எதனுடையதையும் விட குறைந்த உருகுவெப்பநிலை கொண்டவை யாகும். இவை 50°C(120°F) வரையான குறைந்த உருகு நிலைகளை எட்டக்கூடியவையாகும் பல்வேறு உலோகங்களும் வனைபொருள் கலப்புலோகங்களும் மிகுதிறன் கடத்திகளாக (SUPER CONDUCTORS) பயன்படுத்தப்படுகின்றன .

**ஆக்கம்:- மோள் சி.நட்**

**தமிழில்: அனபாயன்**


நூல் அட்டவணை (BIBLIO GRAPHY)

1) டொணாச்சி, எம்.,ஜே.,யூனியர், ed. மிகுதிறன் கலப்புலோகங்கள்.
(1983)
DONACHIE, M.J., Jr. ed.
SUPER ALLOYS, (1983)

2) ஸ்மித், டப்ளியூ.எப்.
பொறியியல்துறை கலப்புலோகங்களின் கட்டமைப்பும் இயல்பகளும் (1980)
Smith N.F.
STRUCTURE AND PROPERTIES OF ENGINEERING ALLOY


"உலோகவியல்" ஐயும் பார்க்கவும். ◆◆

## கருத்துப் பகிர்வு



அன்புடன் வெள்ளி நாதமே கடந்த 30.08.2002அன்று வெள்ளி நாதத்தில் பிரசுரிக்கப்பட்ட "மனம் பொருந்தினால்" எனும் சிறுகதை அருமையிலும் அருமை எழுத்தாளரின் ஆற்றல் மென் மேலும் வளர வாழ்த்துவதோடு இது போன்ற திறமை மிக்க ஆக்கங்களை எதிர் பார்க்கின்றோம் வெள்ளி நாதமே உனது அனைத்து ஆக்கங்களும் திறமையிலும் திறமை மென்மேலும் உன்பணிதொடர எனது வாழ்த்துக்கள்

ஏ.நந்தகுமாரி
வன்னேரிக்குளம்
கிளிநொச்சி.

வெள்ளி தோறும் எம் வாசல் வரும்வெள்ளி நாதமே! 'ஓயாத அலைகள்' சித்திரத்தொடர் அனைவராலும் புரிந்து கொள்ளத்தக்கவாறு வெளிவருவது பாராட்டத்தக்கது. நாம் கடந்துவந்த பாதையை மீட்டுப் பார்க்கவும் முடிகிறது!.

போர் நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி தென்னிலங்கைப் பத்திரிகைகள், மற்றும் வானொலிச் செய்திகள் தமிழர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்து விட்டதாக 'கதை' விடுகின்றன. ஏனைய பிரச்சினைகளும் விரைவில் முடிவுக்கு வந்து சுபீட்சம் ஏற்படும் என்கின்றன: கற்பனைகளை விதைக்கின்றன. ஆனாலும் நடப்பு நிலைமைகளை நீ தாங்கிவரும் அரசியல் கட்டுரைகளை வாசித்து தெளிவடைய முடிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் பேரினவாதத்தினால் விழுங்கப்பட்ட பாரம்பரிய தமிழர் பிரதேசங்கள், அவ்வப்போது தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் அதனால் தமிழன் சிந்திய இரத்தம் இவற்றையும் வெளிப்படுத்த வேண்டும். இவை எம் மக்களிடையே தோன்றியுள்ள மயக்கத்தை போக்க வழிவகுக்கும். சர்வதேச அரசியல் ஆய்வும் தவறாது இடம் பெற ஆவன செய்வாயா-?

கிருபாகரன்
புதுக்குடியிருப்பு.


அன்புடன் வெள்ளி நாதமே,

சென்ற 30.08.02.நாதத்தில் வெளியான பதிவும்,பகிர்வும் என்ற தலைப்பில் சிலமனிதர்களும், அரசயுதவிகளும், தேவை புரிந்துணர்வு, தேவை எச்சரிக்கை உணர்வு போன்ற அம்சங்களில் அடக்கி கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் எல்லோரையும் சாராது. சிலரைத்தான் சாரும். எனவே இவற்றில் கூறப்படும் அம்சங்களில் நடந்து கொள்பவர்கள் திருந்தி நடக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளது. இந்த நாளிதழ் இவற்றினை விட வெள்ளி நாதத்தின் உள்பக்க தாள்களின் கீழே இருக்கும் மேதைகளின் கருத்துக்கள் அனைத்தும் சிறந்த கருத்துக்களாக இருந்ததோடு எமது எதிர்காலத்தையும் சீர்படுத்திக் கொள்ளக் கூடியனவாகவும் இருக்கின்றது. எனவே தங்களின் பணி மேலும், மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

வி. புஸ்பரஜனி,
முள்ளியவளை.



# பேருந்துப் பணிகளின் புதிய நேர விரிப்பு



## 16.09.2002 ஆம் நாளில் இருந்து தொடங்கும்

### மல்லாவி - முகமாலை [பளை]

| மல்லாவி | துணுக்காய் | அம்பலப்பெருமாள் சந்தி | கந்தபுரம் | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை [பளை] |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 06.00 | 06.15 | 07.15 | 07.30 | 08.15 | 08.50 | 09.25 | 09.35 | 09.50 |
| காலை 07.00 | 07.15 | 08.15 | 08.30 | 09.15 | 09.50 | 10.25 | 10.35 | 10.50 |
| காலை 08.30 | 08.45 | 09.45 | 10.00 | 10.45 | 11.20 | 11.55 | 12.05 | 12.20 |
| பகல் 11.00 | 11.15 | 12.15 | 12.30 | 01.15 | 01.50 | 02.25 | 02.35 | 02.50 |

குறிப்பு: கிளிநொச்சியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

### முகமாலை [பளை] - மல்லாவி

| முகமாலை [பளை] | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள்சந்தி | துணுக்காய் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 09.30 | 09.45 | 09.55 | 10.30 | 10.45 | 11.50 | 12.05 | 01.05 | 01.20 |
| பகல் 11.30 | 11.45 | 11.55 | 12.30 | 12.45 | 01.50 | 02.05 | 03.05 | 03.20 |
| பகல் 12.30 | 12.45 | 12.55 | 01.30 | 01.45 | 02.50 | 03.05 | 04.05 | 04.20 |
| மாலை 05.00 | 05.15 | 05.25 | 06.00 | 06.45 | 07.20 | 07.35 | 08.35 | 08.50 |

குறிப்பு: கிளிநொச்சியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

### நெட்டாங்கண்டல் - முகமாலை [பளை]

| நெட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | முறுகண்டி | கிளிநொச்சி | பரந்தல | இயக்கச்சி | புது.கா.சந்தி | முகமாலை [பளை] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 05.00 | 05.30 | 06.00 | 06.45 | 07.15 | 07.55 | 08.45 | 09.00 | 09.35 | 09.45 | 10.00 |
| காலை 06.00 | 06.30 | 07.00 | 07.45 | 08.15 | 08.55 | 09.45 | 10.00 | 10.35 | 10.45 | 11.00 |

குறிப்பு: மல்லாவியில் 30 மணித்துளிகளும் முறுகண்டியில் 20 மணித்துளிகளும் நிற்கும்.

### முகமாலை [பளை] - நெட்டாங்கண்டல்

| முகமாலை [பளை] | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறுகண்டி | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | பாலையடி | நெட்டாங்கண்டல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 10.30 | 10.45 | 10.55 | 11.30 | 11.45 | 12.15 | 01.15 | 01.45 | 02.00 | 02.30 | 03.00 |
| பகல் 02.30 | 02.45 | 02.55 | 03.30 | 03.45 | 04.15 | 05.15 | 05.45 | 06.00 | 06.30 | 07.00 |

குறிப்பு: முறுகண்டியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

### மல்லாவி - புளியம்குளம்

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | புளியம்குளம் |
|---|---|---|---|---|
| | 05.00 | 05.30 | 06.30 | 07.15 |
| காலை 05.00 | 06.00 | 06.30 | 07.30 | 08.15 |
| | 07.00 | 07.30 | 08.30 | 09.15 |
| காலை 08.00 | 09.00 | 09.30 | 10.30 | 11.15 |

குறிப்பு: மாங்குளத்தில் 15 மணித்துளிகள் நிற்கும்.

### புளியம்குளம் - மல்லாவி

| புளியம்குளம் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|
| காலை 10.00 | 10.30 | 11.45 | 12.15 | - |
| பகல் 12.00 | 12.30 | 01.45 | 02.15 | 02.30 |
| பகல் 02.00 | 02.30 | 03.45 | 04.15 | - |
| மாலை 05.30 | 06.30 | 07.45 | 08.15 | 08.30 |

குறிப்பு: மாங்குளத்தில் 15 மணித்துளிகள் நிற்கும்.

### துணுக்காய் - புதுக்குடியிருப்பு

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | முறுகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | புளியம்பொக்கணை | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.30 | 09.00 | 09.30 | 10.30 | 11.10 | 12.00 | 01.00 | 01.20 | 01.45 | 02.30 |

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | முறுகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | இராமநாதபுரம் | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 12.30 | 01.00 | 01.30 | 02.30 | 03.10 | 04.00 | 05.00 | 05.30 | 06.00 | 06.45 |

குறிப்பு: மல்லாவியில் 15 மணித்துளிகள், முறுகண்டியில் 20 மணித்துளிகள், கிளிநொச்சியில் 15 மணித்துளிகள் நிற்கும்.

### புதுக்குடியிருப்பு - துணுக்காய்

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | இராமநாதபுரம் | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறுகண்டி | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 09.00 | 09.45 | 10.15 | 10.45 | 11.30 | 12.15 | 01.15 | 02.15 | 02.45 | 03.00 |

தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப் பணியகம்,
விசுவமடு.

[சி .7365]

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | புளியம்பொக்கணை | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறுகண்டி | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 01.30 | 02.15 | 02.40 | 03.00 | 03.45 | 04.30 | 05.30 | 06.30 | 07.00 | 07.15 |

குறிப்பு: கிளிநொச்சியில் 15 மணித்துளிகள், முறுகண்டியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

## துணுக்காய் - முள்ளியவளை

| துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | ஒட்டுசுட்டான் | முள்ளியவளை |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.30 | 08.00 | 09.00 | 10.45 | 12.15 |

## முள்ளியவளை - துணுக்காய்

| முள்ளியவளை | ஒட்டுசுட்டான் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 08.30 | 10.00 | 11.15 | 11.45 | 12.00 |

குறிப்பு: மாங்குளத்தில் 15 மணித்துளிகள் நிற்கும்.

## புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, செம்மலை

| புதுக்குடியிருப்பு | மந்துவில் | முள்ளிவாய்க்கால் | முல்லைத்தீவு | செம்மலை |
|---|---|---|---|---|
| காலை 07.30 | 07.40 | 07.55 | 08.15 | 09.15 |

## செம்மலை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு

| செம்மலை | முல்லைத்தீவு | முள்ளிவாய்க்கால் | மந்துவில் | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|
| பகல் 01.00 | 02.00 | 02.20 | 02.35 | 02.45 |

## புதுக்குடியிருப்பு, மாத்தளன், முல்லைத்தீவு, செம்மலை

| புதுக்குடியிருப்பு | மாத்தளன் | முள்ளிவாய்க்கால் | முல்லைத்தீவு | அளம்பில் | செம்மலை |
|---|---|---|---|---|---|
| மாலை 05.00 | 05.30 | 06.15 | 06.30 | 07.15 | 07.30 |

## செம்மலை, முல்லைத்தீவு, மாத்தளன், புதுக்குடியிருப்பு

| செம்மலை | அளம்பில் | முல்லைத்தீவு | முள்ளிவாய்க்கால் | மாத்தளன் | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 08.00 | 08.15 | 09.00 | 09.30 |

## புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி

| புதுக்குடியிருப்பு | கற்சிலைமடு | ஒட்டுசுட்டான் | நெடுங்கேணி |
|---|---|---|---|
| மாலை 04.00 | 04.45 | 05.00 | 05.45 |

## நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு

| நெடுங்கேணி | ஒட்டுசுட்டான் | கற்சிலைமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| காலை 07.15 | 08.00 | 08.15 | 09.00 |

## முழங்காவில் - உயிலங்குளம்

| முழங்காவில் | இலுப்பைக்கடவை | பள்ளமடு | உயிலங்குளம் |
|---|---|---|---|
| காலை 06.30 | 07.30 | 08.00 | 08.30 |

## உயிலங்குளம் - முழங்காவில்

| உயிலங்குளம் | பள்ளமடு | இலுப்பைக்கடவை | முழங்காவில் |
|---|---|---|---|
| பகல் 12.00 | 12.30 | 01.00 | 02.00 |

## தட்சனாமருதமடு - மடு - உயிலங்குளம்

| தட்சனாமருதமடு | மடு | பரப்புக்கடந்தான் | ஆண்டான்குளம் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|
| காலை 06.30 | 07.00 | 08.30 | 09.00 | 09.15 |

## உயிலங்குளம் - மடு - தட்சனாமருதமடு

| உயிலங்குளம் | ஆண்டாங்குளம் | பரப்புக்கடந்தான் | மடு | தட்சனாமருதமடு |
|---|---|---|---|---|
| பகல் 02.30 | 02.45 | 03.15 | 04.45 | 05.15 |

## முல்லைத்தீவு - புளியம்குளம்

| முல்லைத்தீவு | சிலாவத்தை | முள்ளியவளை | ஒட்டுசுட்டான் | நெடுங்கேணி | புளியம்குளம் |
|---|---|---|---|---|---|
| காலை 05.30 | 05.45 | 06.05 | 07.15 | 08.00 | 08.30 |

| முல்லைத்தீவு | செம்மலை | குமிழமுனை | முள்ளியவளை | ஒட்டுசுட்டான் | நெடுங்கேணி | புளியம்குளம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 04.00 | 05.00 | 05.20 | 06.05 | 07.15 | 08.00 | 08.30 |

## புளியம்குளம் - முல்லைத்தீவு

| புளியங்குளம் | நெடுங்கேணி | ஒட்டுசுட்டான் | முள்ளியவளை | குமுழமுனை | செம்மலை | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|
| பகல் 12.30 | 01.00 | 01.45 | 02.55 | 03.40 | 04.00 | 05.00 |
| மாலை 05.30 | 06.00 | 06.45 | 07.55 | 08.40 | 09.00 | 10.00 |

தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப் பணியகம்,
விசுவமடு.

[சி.7365]




# அகில இலங்கைப் போட்டியில் வன்னி மாணவிகள் சாதனை

பல விடயங்களில் பின்தங்கிய நிலையில் உள்ளதாக கருதப்படும் வன்னிப் -பெருநிலப்பரப்பில் இருந்து கிளிநொச்சி இராமநாத புரம் மேற்கு அ.த.க.பாடசாலை உடற்பயிற்சிப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் பெண்களுக்குக்கான பிரிவில் முதலிடத்தைப் பெற்று கொண்டுள்ளது என்பது ஒரு இன்பமான அதிர்ச்சியாகும். விளையாட்டுத் துறையில் மேம்பாட்டுக்கான பல்வேறு நிதி ஒதுக்கீடுகளையும், அனுசரணைகளையும் பெற்றுக் கொண்டுள்ள தென்பகுதி பெரும் தேசியப் பாடசாலை களின் அணிகளையும் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமையானது ஒரு இமாலயச் சாதனையாகவே கருதப்படவேண்டும்.

யுத்தமும், பொருண்மியத் தடைகளும், நன்கு தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமையும், போன்ற பாரிய நெருக்கடிகளுக்குள்ளும் இவ்வாறான வெற்றியைப் பெற்றுக் கொண்டமை குறித்து பாடசாலை அதிபர் திரு.கருணாநிதியிடம் கேட்டபோது ''வெற்றியை இலக்காக கொண்ட கடும் பயிற்சியும், மாணவர்களின், பொறுப்பாசிரியர்களான செல்வி. நளாயினி சின்னத்தம்பி, செல்வி.

**அ. அன்ரன் அன்பழகன்**



பாமினி நவரத்தினம் ஆகியோரின் அர்ப்பணிப்பும், பெற்றோரின் ஆதரவுமே இதற்கு காரணமாக அமைந்தது" என்றார். பொறுப்பாசிரியர்களும் உடற்பயிற்சிக்கான ஆசிரியர்கள் அல்லாது விஞ்ஞானம், நடனம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, வத்தளை புனித அந்தோனியார் தேசியக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளில் வடகிழக்கிலிருந்து ஐந்து பாடசாலைகள் இப்போட்டியில் கலந்து கொண்டன. அவற்றில் மூன்று பாடசாலைகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து கலந்து கொண்டன. அவை அனைத்துமே முதல் ஆறு இடங்களுக்குள்ளும் வந்துள்ளது என்பதும் குறிப் பிடும்படியான விடயமாகும்.

தமிழ்ப்பாடசாலை ஒன்று அதுவும், வன்னியில் இருந்து வந்த பாடசாலை ஒன்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமையானது தற்போதைய சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு அழகு சேர்த்த ஒரு நிகழ்வாகும் என நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.போல் பெரேரா தெரிவித்தார். இப்போட்டிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட 286 பக்கங்கள் கொண்ட கைநூலில் 05 பக்கங்களில் மட்டுமே தமிழ் மொழியிலான அறிவித்தல் வழங்கப் பட்டிருந்தது. அதுமட்டு மல்ல போட்டிகள் தொடர்பான அறிவித்தல் களிலும் மிகக் குறைவான சந்தர்ப்பங்களில் மட்டுமே சிங்களவர் ஒருவரின் தமிழ்மொழி மூல அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. வரிக்கு வரி மொழி பெயர்க்கப்பட்ட திருகோணமலை மாகாணப் போட்டிகளை இக்கணங்களில் நினைக்கத் தோன்றியது. தமிழ்மொழி அமுலாக்கம் என்பது இன்னும் கல்வி அமைச்சில் நடக்க முடியாத காரியமாகவே உள்ளது.

எதிர்வரும் வாரங்களில் பெரு விளையாட்டுக்கள், மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் வவுனியா இறம்பைக் குளம் பெண்கள் ம.வி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. ஆண்களுக்கான போட்டிகளில் கிளிநொச்சி உருத்திரபுரம் ம.வி ஐந்தாம் இடத்தையும், முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க. பாடசாலை ஆறாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இப்போட்டிகளில் வடகிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒரே ஒரு அதிகாரி மட்டுமே உத்தியோகஸ்தராக கலந்து கொண்டார். திறமையும், வெற்றி மீதான உறுதியுமுடைய எமது மாணவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களையும், பயிற்சிகளையும், பயண ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல் என்பதும் அதிகாரிகளின் சமூகப் பொறுப்பு சார்ந்த கடமையாகும் என வேதனையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. வவுனியாவில் இருந்து இலவசப் பயணத்துக்கான ஏற்பாடு இருந்தபோதிலும், வன்னிப் பிரதேசத்துக்குள் பயணத்துக்கு மாணவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்தது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உடற்பயிற்சியின் வெற்றியில் அமரர் பொன் சபாபதி அவர்களின் தீர்க்கதரிசனமும், உழைப்பும், வழிகாட்டலும், அத்திவாரத்தில் இருந்ததை எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாது.

◆◆◆

# விளையாட்டு ஆர்வலர்களை மகிழ்ச்சிப்படுத்திய முரளியின் யாழ். விஜயம்

உலகின் முதல்தர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உட்பட சிறிலங்கா தேசிய அணியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் மூவர் கலந்துகொண்ட வரலாற்று சிறப்புமிக்க கிரிக்கெட் ஆட்டம் அண்மையில் யாழ் நகரில் இடம்பெற்றது.

சனசக்தி காப்புறுதி அணிக்கும் யாழ்மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையில் அந்த ஆட்டம் நடைபெற்றது. சனக்தி அணி சார்பிலேயே மேற்படி மூன்று வீரர்களும் கலந்துகொண்டனர். முத்தையா முரளிதரன் அவ் வணிக்குத் தலைமை தாங்கினார். மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மற்றைய இரு வீரர்களாக விக்கெட் காப்பாளரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரராக இருந்த வருமான ரொமேஸ்களுவிதாரண, வேகப் பந்துவீச்சாளர் ருச்சித்த பேரேரா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இலங்கை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் புகழ்பெற்று பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் சர்வதேச புகழ்பெற்ற வீரர்கள் யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்துக்கோ அன்றி தமிழீழத்தின் ஏனைய பகுதிகளுக்கோ சென்று விளையாடாத நிலையில் முன்னணி வீரர்களின் யாழ் விஜயம் யாழ்ப்பாண விளையாட்டுத்துறைக்கு கிடைத்த பெரு வெற்றியாக அமைந்துள்ளது.

ஏற்கனவே முத்தையா முரளிதரன் யாழ் வருகைதந்து போட்டிகளில் கலந்துகொள்ளப் போகின்றார் என்பது உறுதி செய்யப்பட்ட நிலையில் ரசிகர்களின் மகிழ்வுக்கு எல்லையே கிடையாது. அவர்கள் அவரது வரவை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்தவாறே இருந்தனர்.

ஏனெனில் முத்தையா முரளிதரன் சாதாரண கிரிக்கெட் வீரராக இருந்திருப்பின் இந்தளவு பரபரப்பை ஏற்படுத்தயிருக்குமோ என்பது சந்தேகமே. அவர் உலகின் தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர் மட்டுமல்லாது அணியின் வெற்றியில்பெரும்பங்கு வகிப்பதுடன் பல உலக சாதனைகளைப் படைத்துள்ளதுடன் உலக சாதனைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு தமிழ் மகன் என்ற ரீதியில் அவர் வரவேற்கப்பட வாழ்த்தப்பட வேண்டியவராய் மாறினார். அது தமிழர்களாகிய எமது கடமையும் கூட.



தனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஈழத்தமிழன் பற்றிய கேள்விகளுக்கு (Nocommons) பதில் கூற மறுப்புத்தெரிவித்து வந்த முரளிதரன் தற்போதைய சமாதான புறச்சூழலை சாதகமாக பயன்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து போட்டியில் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் துறையை வளர்த்தெடுப்பதற்கு உதவும் வகையிலான பயன் தரக் பெறக்கூடிய கருத்துக்களை முன்வைத்துள்ளமை முரளிதரன் மீது விளையாட்டு வீரர்கள் கொண்டுள்ள மதிப்பையும் ஆதரவையும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளதுடன் அவரின் விளையாட்டு வீரர்கள் மீதான கரிசனையையும் பற்று நிலையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

தேசிய அணியில் சிறுபான்மையின வீரர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஒரே ஒரு தமிழன் என்று சொல்லும் அளவுக்கு அணியில் நிலையான இடத்தை பிடித்தள்ள முத்தையா முரளிதரன் விரும்பியோ விரும்பாமலோ அணியிலிருந்து நீக்கப்பட முடியாத ஒரு வீரராகவே விளங்கி வருகின்றார். ஏனெனில் அவர் இன்றி இலங்கை அணியின் வெற்றி என்பதே கேள்விக் குறியாகிவிட்ட நிலையே தற்போது உள்ளது.

இது விளையாட்டு உலகில் தமிழர்களுக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளதுடன் அவரது அசாத்திய திறமை புகழ்ந்து பேசப்படும் ஒன்றாக மாறியுள்ளது.

முரளிதரனின் யாழ் விஜயத்திற்கு கிடைத்த வரவேற்பும் ஆரவாரிப்பும் அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கு கிடைத்த மிகப்பெரிய சொத்து என்பதை முரளி உணர்ந்திருப்பார் என துணிந்து கூறமுடியும். தான் தமிழனாக பிறந்ததற்காக யாழ் வீரர்களைக் கிரிக்கெட்துறையில் வளர்க்க வேண்டும் என்று விருப்பம் கொண்டுள்ளதுடன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சம்மதித்தால் தான் தயார் எனத் தெரிவித்துள்ள அவரின் விருப்பத்துக்கு மேலும் சான்றுபகர்கின்றது.

இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயம் என்னவென்றால் யாருடைய ஆட்டத்தைக் காண வேண்டும் என மத்திய கல்லூரி மைதானத்தை ஆக்கிரமித்து ஆவலுடன் காத்திருந்த பதினைந்தாயிரத்துக்கும்மேற்பட்ட ரசிகர்களுக்கு அது கிடைக்காது போன மைதான்.

அதாவது அன்றைய கதாநாயகனான முத்தையா முரளிதரன் துடுப்பாட்டத்தில் ஆறு பந்துகளில் மூன்று ஓட்டங்களை பெற்று வெளியேறியமை.மற்றும் தான் வீசிய முதலாவது ஓவரிலேயே மூன்று பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 19 ஓட்டங்களைக் கொடுத்தமை.

இதன் மூலம் முத்தையா முரளிதரனைக் குறைத்து மதிப்பிட முடியாது என்பது தெளிவு.. ஆனாலும் அதனை சாதகமாகப் பயன்படுத்தி ஓட்டத்தை பெற்றுக் கொண்ட யாழ்வீரர் ஷாஜகான் பாராட்டப்பட வேண்டியவர்.

இப்போட்டியில் யாழ் அணி வீரர்கள் 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தபோதும் எதிரணியினருக்கு அச்சுறுத்தலாக விளங்கியதுடன் கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு தீர்க்கமான போட்டியை வழங்கினர். இதன் மூலம் எந்த அணியையும் எதிர்கொள்ளும் துணிச்சல் எமக்கு உண்டு என்பதை யாழ் அணி வீரர்கள் பறைசாற்றினர் என்றால் மிகையில்லை.

டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் எதிரணிக்கு சிம்மசொர்ப்பணமாகத் திகழ்ந்து வரும் முரளிதரன் முறியடிக்கப்பட முடியாத பல சாதனைகளை படைப்பார் என்று விமர்சகர்களால் ஊகங்கள் தெரிவிக்கப்படும் நிலையில் முரளிதரனின் யாழ் விஜயம் முக்கியத்துவம் பெறுவதுடன் யாழ் மண்ணில் கிரிக்கெட்டுக்கு புத்துாக்கம்அளிப்பதுடன் வீரர்களிடையே ஆர்வத்தையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவரது யாழ் விஜயம் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெறாது விட்டாலும் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறையை அனைத்துலக ரீதியில் வளர்த்தெடுக்க உதவும் என துணிந்து கூறலாம்.

இதே வேளை தனது யாழ்விஜயம் பற்றி முரளிதரன் கொழும்பில் தெரிவிக்கையில்; உலகில் பல நாடுகளுக்கும் சென்றுள்ளேன் அவற்றைவிட யாழ் விஜயத்தையிட்டு தான் மிகவும் மகிழ்வடைவதாகவும் தனது வாழ்நாளில் இவ் விஜயத்தை மறக்க முடியாது எனவும் அங்குள்ள மக்களுக்கு என்னால் இயன்ற உதவியை செய்யவிரும்புவதுடன் யாழ் செல்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் நிச்சயமாக அதைப் பயன்படுத்துவேன் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் யாழ் வீரர்கள் ரசிகர்களின் அளவற்ற மகிழ்ச்சியையும் அன்பையும் பகிர்ந்துகொண்ட முரளிதரன் தேசிய அணியில் மேலும் தமிழ் வீரர்கள் இடம் பிடிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பாரா?

**—ஜெயந்திரன்—**

❖❖

அறியாமை, துவேஷத்தை நிரந்தரமாக நிலை நாட்டி, தவறை நீடிக்கிறது. - ராபர்ட் ஹால்

## நேர்நோக்கு

# நியாயமான சீற்றம்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை யின் மீது, ஊனமுற்ற படையினர் சங்கமும், யுத்தத்தின்போது காணாமல்போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கமும் தமது கடுமையான சீற்றத்தை வெளியிட்டு உள்ளன. அனுருத்த ரத்வத்தவினதும் அவரது மனைவி ரமணி ரத்வத்தவினதும் பெயரில் இருந்த—மறைத்து வைக்கப்பட்டிருந்த — வங்கிப்பத்திரங்கள் தொடர்பாகவே அவை தமது உணர்வலைகளை வெளிக்காட்டி யுள்ளன.

இந்த வங்கிவைப்புச் சான்றிதழ்களுக்கான பணம் ஆயுதக் கொள்வனவின் மூலமே அனுருத்த ரத்வத்தவினால் பெறப்பட்டதாக நிரூபிக்கப்பட்டால் தாம் அவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக. ஊனமுற்ற படையினர் சங்கம் தெரிவித்திருக்கிறது. அதேபோல படையினருக்குரிய நிதியும் இந்த வங்கிவைப்புச் சான்றிதழ்களைப் பெறப்பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருவதால், இதுகுறித்து இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தனியான விசாரணையொன்றை நடத்த வேண்டும் என யுத்தத்தின் போது காணாமல் போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது சனஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்தவத்த தலைமை தாங்கி நடத்திய யுத்தமானது படையினருக்குப் பெரும் சேதத்தை விளைவித்தது என்பது வெளிப்படையான ஒன்றாகும். யுத்தத்தில் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் பலியான தாகவும் 16,600 படையினர் காயமடைந்து அங்க வீனமாகியுள்ளதாகவும் 3300 படையினர் காணாமல் போயுள்ளதாகவும் படைத்தரப்புடன் தொடர்புடைய அமைப்புகள் அண்மையில் விபரம் வெளியிட்டிருந்தன. இதில் அனுருத்த ரத்வத்த யுத்தத்தை நடத்திய காலத்திலேயே மிகமிகக் கூடிய அளவு இழப்பு படையினருக்கு ஏற்பட்டிருந்தது

அவர் தனது பதவிக்காலத்தை காலக்கெடுக்களை விதிப்பதிலும் வெற்றி வீதங்களைக் கூறுவதிலும் கொடியேற்றி வைப்பதிலும் அவரது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்வதிலுமே செலவளித்தார்.

"என்ன விலை கொடுத்தேனும்" யுத்தத்தில் வெல்வது என்பதே அவரது தாரக மந்திரமாக இருந்தது இதன்போது ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்தோ, தனது தந்திரோபாயமானது எதிர் காலத்தில் விளைவிக்கக் கூடிய பின்னடைவுகள் குறித்தோ கவலைப்பட்டவராகத் தெரிய வில்லை.

அதேவேளை, தமது தேர்தல் வாக்குறுதிகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பவும், காலத்துக்குக் காலம் பொதுசன ஐக்கிய முன்னணியால் நடத்தப்பட்ட தேர்தல்களில் தமது வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ளும் நோக்கத்துடனும் கூடப் படையெடுப்புகள் நடத்தப்பட்டன.

அவரது பதவிக்காலத்தின் ஆரம்பத்தில், அவரது படை யெடுப்புத்திட்டங்களை எதிர்த்த படை உயரதிகாரிகள் தூக்கி வீசப்பட்ட பின்னர் படையெடுப்புகளை நடத்தினார். இறுதிப்பகுதியில் உயர் தளபதிகளுடைய பரிந்துரைகளை உதாசீனம் செய்து இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இதனால் இந்த இராணுவ நடவடிக்கைகள் எல்லாமே அரசியல் நோக்கங்களுக்காகவே மேற்கொள்ளப் படுகின்றனவா? என்ற ஐயப்பாடு பரவலாக எழுந்தது இதில் ஒன்று அவரது சொந்த அபிலாசைகளுக் கானதும் பொது சனஐக்கிய முன்னணியின் தேவைக்கானதுமான நடவடிக்கைகள் உள்ளடங் கியிருந்தன என்பது வெளிப்படையாகும்.

இவ்வாறாக இராணுவ நிபுணர்கள் உயரதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனைகள், பரிந்துரைகளைப் புறந்தள்ளி அவர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் "வெற்றிகள்" அவர் கண் முன்னாலேயே சீட்டுக்கட்டு மாளிகை போலச் சரிந்தன.

ஆனால் அவ்வாறான நிலையில் கூட தென்னிலங்கை யில் அவருக்கு எதிரான பாரிய கண்டனங்கள் எழவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான நிலையில்தான் அண்மையில் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு எதிரான பல காட்சிகள் விரியத் தொடங்கி யுள்ளன.

அதாவது முதலில் உடத்தலவின வில் படுகொலை செய்யப்பட்ட 10 பேரின் விவகாரத்தில் இவரதும், இவரது மகன்களினதும் தொடர்புகள் குறித்து கைதுகளும் விசாரணைகளும் இடம் பெற்றன — தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன இதற்கும் மேலாக ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின தும் அவரது மனைவியினதும், பெயரில் தனியார் வங்கிப் பெட்டகங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வங்கி வைப்புச் சான்றிதழ் விவகாரமே அவருக்கு எதிரான உணர்வலை களைத் தூண்டியுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக, முதலில் கருத்து வெளியிட்டவர் மல்வத்த மகாநாயக்கதேரர் ரம்புக்வெல சிறிவிபசி தேரர் ஆவார். ரத்வத்தபற்றி வெளிவரும் இந்தச் செய்திகள் குறித்து வெட்கப்பட வேண்டும் என அவர் கூறியிருக்கிறார். ஆனால் மல்வத்தபீடாதி உட்பட பௌத்தமத பீடங்கள் கடந்தகாலத்தில் அனுருத்த ரத்வத்த நடத்திய யுத்தத்திற்கு ஆசிவழங்கியவர்கள் என்பதுடன், எதிர்காலப் பிரதமராகும் தகுதி அவருக்கே உண்டு எனவும் வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் கருத்து ஒருபுறமிருக்க இந்தயுத்தத்தினால் நேரடிப்பாதிப் புக்குள்ளான இருதரப்பினர் தமது வெறுப்பை வெளிக்காட்டுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. சமாதானத்துக்கான யுத்தமென்ற பெயரில் அவயவ இழப்புகளைச் சந்தித்து நிற்கும் ஊனமுற்ற படையினரும் தமது உறவுகளின் நிலைதெரியாது தவிப்போரும் இவ்வாறு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிலும் யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் என்ற வகையில் அடக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவினால் ஏமாற்றப்பட்டவர்கள் என்றே கூறவேண்டும். அதாவது யுத்தத்தின் போது கொல்லப்படும் படையினரின் எண்ணிக்கையைக் குறைத்துக்காட்டுவதற்காக. விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட படையினரின் உடல்களைப் பொறுப்பேற்காது விட்ட அரசாங்கம் அவர்களைக் காணாமல் போய்விட்டதாக அறிவிப்பது வழமையாகும் உண்மையிலேயே இவர்களின் நிலைமை தெரியாது காணாமல் போய் விட்டதாக அறிவித்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியும் ஆனால் நிலைமை தெரிந்தும் அதனை அரசாங்கம் உறவினர்களுக்கு மறைத்து வந்தது என்பதே உண்மையாகும்

இந் நிலையில் இந்தயுத்தத்தைப் பயன் படுத்தி தமது பையை நிரப்பிக் கொண்டதாக அனுருத்த ரத்வத்தமீது சுமத்தப்படும் குற்றச் சாட்டானது இவ்வாறு அவர்களைச் சீற்றமடைய வைத்தமை நியாயமானதே.

—வேலவன்

## படமும் தகவலும்



2001 செப்ரம்பர் 11 அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக மத்தியூஸ் வட கரோலினா கிறீஸ்தவ ஆலயத்தில் 3000 இற்கு மேற்பட்ட வெண்ணிறச் சிலுவைகளில் இறந்தவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதையே படத்தில் காணுகின்றீர்கள்.



2002 செப்ரெம்பர் 07ம் திகதி அன்று மேரிலண்ட் காம்ப் டேவிட்டுக்கு வருகை தந்த பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரை அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் இராணுவ அணிவகுப்பு மரியாதையினை தாண்டி அழைத்துச் செல்வதை காணலாம்.



அமெரிக்க பிராங் பேர்ட் விமான தளத்திற்கு விஜயம் செய்த ஆப்கானிஸ்தான் சனாதிபதி ஹமிட் கர்சை அமெரிக்க மெய்ப் பாதுகாவலர் ஒருவர் இயந்திரத் துப்பாக்கி பாதுகாப்புடன் அழைத்துச் செல்லும் காட்சி இது. இவர் செப்ரம்பர் 08 அன்று ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜோஷ்க்கா பிஸ்ச்சருடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு விட்டு ஐ.நா.வின் பொதுக்கூட்ட விவாதங்களிலும் செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பான ஓராண்டு வைபவங்களிலும் பங்கு பற்றுவதற்கு அமெரிக்கா சென்றிருந்தார்.



தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் அண்மையில் பிறந்த சிலந்திக் குரங்கின் தோற்றம் இது. அங்குள்ள ஊழியர் ஒருவரின் கையில் காணப்படும் இக் குரங்குக் குட்டியின் தாய் அதற்கு பாலூட்டி உணவழிக்க மறுத்துள்ளதால் அவர்களே பாலூட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.


அழகன் ஒப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களை

* தரமான முறையில் * கணினி முறையில் * குறித்த தவணையில்

செய்து கொள்ள நாட வேண்டிய ஒரே பதிப்பகம்

யாழ் சாலை, கிளிநொச்சி.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.